

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 180 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 27 – சனிக்கிழமை 10 பிப்ரவரி 2024 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 180 : Thiruvalluvar Year - 2055 - Thai 27 - Saturday 10 February 2024 - Madurai 12 Pages ₹ 5.00


## ‘நான் முதல்வன்’ திட்டம்!

# வெற்றிப் பயணம் தொடரும்!

### ‘தி இந்து’ ஆங்கில நாளிதழின் செய்திக் கட்டுரையைச் சுட்டிக்காட்டி - முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, பிப்.10-**

**“நான் முதல்வன்” திட்டத்தின் பயனாக தமிழ்நாட்டில் கல்லூரி மாணவ, மாணவியர் வேலைவாய்ப்பு பெற்று வருவது குறித்து பிரபல ஆங்கில நாளிதழான ‘தி இந்து’, ஆதாரங்களுடனும் புள்ளிவிவரங்களுடன் செய்திக் கட்டுரை ஒன்றினை வெளியிட்டுள்ளது.**

அச்செய்தியில், “தமிழ்நாட்டில் முதல்வரின் ‘நான் முதல்வன்’ திட்டத்தால் மாணவர்கள் ஆயிரக் கணக்கில் பயன் பெற்று வருகிறார்கள்” என்றும், “குறிப்பாக, நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த மாணவ - மாணவியர், ‘நான் முதல்வன்’ திட்டத்தால் பெருமளவில் பயன்பெற்றுள்ளனர்” என்றும் குறிப்பிட்டுள்ளது.

இச்செய்தியை அடுத்து ‘X’ வலைதளப் பதிவிட்ட முதல்வர் அவர்கள், “இந்த வெற்றிப் பயணம் தொடரும்!” என மகிழ்வுடன் சூளுரைத்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நான் முதல்வன் வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம் நான்கு மாவட்டங்களில் உள்ள ஆயிரக்கணக்கான இறுதியாண்டு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது.

**‘தி இந்து’வில் செய்திக் கட்டுரை**

இதுகுறித்து ‘தி இந்து’ ஆங்கில



நாளேட்டில் 8.2.2024 அன்று வெளியான செய்திக்குறிப்பு வருமாறு:-

கிருஷ்ணகிரி, சேலம், அரியலூர் மற்றும் கள்ளக்குறிச்சியில் வேலை வாய்ப்புத் திட்டங்கள் தொடங்கியுள்ளன; அடுத்த இரண்டு மாதங்களில் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் அவை நடைபெறும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

‘நான் முதல்வன் மாநிலம் தழுவிய வேலை வாய்ப்புத் திட்டம் 2024’ மூலம் கிருஷ்ணகிரி, சேலம், அரியலூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் கலை மற்றும் அறிவியல் படிப்புகளில் இறுதியாண்டு பயிலும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் சிறந்த நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

நான் முதல்வன் திட்டம், மார்ச் 2022 இல் தொடங்கப்பட்டது , ஆண்டுதோறும் மாநிலம் முழுவதும் உள்ள சுமார் 10 லட்சம் இளைஞர்களை நாட்டின் நலனுக்காக அவர்களின் திறமைகளை உணர உதவும் திறன்களுடன் இருப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**வேலைவாய்ப்பு நிறுவனங்கள்**

2022-2023 ஆம் ஆண்டில், அதே வேலை வாய்ப்பு இயக்கத்தின் போது, 1.19 லட்சம் மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இவர்களில் 61,920 பேர் பொறியியல் பிரிவில் இருந்தும், 57,315 பேர் கலை மற்றும் அறிவியல் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள். இந்த மாணவர்கள் காக்னிஜென்ட், டெக் மகேந்திரா, டி.வி.எஸ்.குழுமம், ஃபாக்ஸ்கான், பெக்ட்ரான், போஸ்க் குளோபல், சதர்லேண்ட் போன்ற நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.


“இந்த ஆண்டு, வேலை வாய்ப்பு இயக்கம் தொடங்கியதிலிருந்து (ஜனவரி 29, 2024 அன்று), இந்த நான்கு மாவட்டங்களில் உள்ள ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு நாங்கள் ஏற்கனவே சலுகைகளைவழங்கியுள்ளோம். அனைத்து மாணவர்களும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைச் சேர்ந்தவர்கள். வேலைவாய்ப்பு இயக்கம் அடுத்த இரண்டு மாதங்களில் அனைத்து மாவட்டங்களிலும் வெவ்வேறு கட்டங்களாக நடைபெறும்” என்று தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் (TNSDC) நிர்வாக இயக்குநர் ஜே.இன்னசென்ட் திவ்யா தெரிவித்தார்.

பொறியியல் மாணவர்களுக்கான பணி நியமனம் இம்மாதம் தொடங்கும்.

இந்த ஆண்டு, வேலை வாய்ப்பு இயக்கம் தொழில் துறை பயிற்சி நிறுவனங்கள் (ஐடிஐ) மற்றும் பாலிடெக்னிக்குகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என்றும் திருமதி திவ்யா கூறினார்.

**வேலை பெற உதவுகிறோம்!**

திருமதி திவ்யா மேலும் கூறுகையில், நான் முதல்வன் திட்டம் மாணவர்களுக்கு திறன்களை மட்டும் வழங்குவதுடன் நின்றுவிடவில்லை. “நாங்கள் அவர்களை தொழில்துறைகளுடன் இணைத்து அவர்களுக்கு வேலை கிடைக்க உதவுகிறோம். மேலும் நான் முதல்வன் திட்டத்தில்



THE HINDU

Thousands of final-year arts & science college students across four T.N. districts get job offers through *Naan Mudhalvan* placement programme

Placement programmes have begun in Krishnagiri, Salem, Ariyalur and Kallakurichi; they will take place across all districts in T.N. over the next two months, officials said



இன்டர்ன்ஷிப் வழங்குதல், வடிவமைக்கப்பட்ட பாடத்திட்டத்தை வழங்குதல் மற்றும் ஹேக்கத்தான்களுக்கான பிரச்சினை அறிக்கைகளை வழங்குதல் போன்றவற்றில் பெருமளவில் முதலீடு செய்துள்ளன,” என்றும் குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு இந்த வேலைவாய்ப்பு இயக்கத்தின் போது வழங்கப்பட்ட மிக உயர்ந்த சம்பள தொகுப்பு ஆண்டுக்கு ரூ.40 லட்சம் ஆகும் என்பது சிறப்புக்குரிய ஒன்று, இது மாநிலம் முழுவதும் உள்ள

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

## முதல்வர் மு.க.ஸ்டாலினின் 33 மாத ஆட்சியில் பல்வேறு

# புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ரூ.8.65 லட்சம் கோடி முதலீடுகள் ஈர்ப்பு!

### ஏறத்தாழ 30 இலட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கம்! ஒரு மாபெரும் தொழில் புரட்சிக்கு அடித்தளம்!

**சென்னை, பிப்.10-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 33 மாத ஆட்சியில் பல்வேறு ஒப்பந்தங்களின் மூலம் ரூ.8,65 இலட்சம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டு ஏறத்தாழ 30 இலட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கியதன் மூலம் ஒரு மாபெரும் தொழில் புரட்சிக்கு அடித்தளம்! உருவாக்கப்பட்டுள்ளது.**

இதுகுறித்து தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது: -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சென்னையில் வள்ளுவர் கோட்டம், தருமபுரியில் அதியமான் கோட்டம் எனத் தமிழ் வளர்க்கும் கோட்டங்களை அமைத்தார்கள்.

அதுபோல், முதலமைச்சர் அவர்கள் 2021 இல் பொறுப்பேற்றது முதல் இந்தியாவின் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் புதிய முதலீடுகளை ஈர்த்துத் தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளைப் புதிது புதிதாக அமைத்துத் தமிழ்நாட்டை ஒரு தொழில் கோட்டமாக உருவாக்கிடும் முயற்சியில் ஓய்வின்றி உழைத்து வருகிறார்கள்.

2030ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாடு 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சி பெற்ற மாநிலமாகவும், இந்தியப் பொருளாதாரத்துக்கு மிக முக்கியப் பங்களிக்கிற மாநிலமாகவும் தமிழ்நாட்டை உயர்த்திடும் பெரும் இலட்சிய இலக்கை நிர்ணயித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அரசு முனைப்புடன் செயல்படுகிறது.

> **“முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடைய 33 மாத ஆட்சிக் காலத்தில் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வாயிலாக ரூபாய் 8.65 இலட்சம் கோடி முதலீடுகள் வருவதற்கான வாய்ப்பு ஏற்பட்டு, அதன் மூலம் ஏறத்தாழ 30 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் சூழ்நிலை உருவாகி யுள்ளது. இது முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சிக்காலம் ஒரு மாபெரும் தொழிற் புரட்சிக்கான அடித்தளம் என்பதை வெளிப்படுத்துகிறது.”**

அதன் முதற்கட்டமாக, முதலீட்டாளர்க ளின் முதல் முகவரி தமிழ்நாடு என்ற பெயரில் சென்னை கோயம்புத்தூர், தூத்துக்குடி ஆகிய நகரங்களில் நடத்தப்பட்ட முதலீட்டாளர்கள் மாநாடுகள் மூலம் ரூ.1,90,803 கோடி ரூபாய்க்கான முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, 2,80,600 பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.

இரண்டாம் கட்டமாக, ஐக்கிய அரபு நாடுகள், சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான், ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு 17 ஆயிரத்து 371 பேருக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துகிற வகையில், 7 ஆயிரத்து 441 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகள் பெறப்பட்டன.

**உலகளாவிய தொழில் நிறுவனங்களுக்கு நம்பிக்கை!**

மூன்றாம் கட்டமாக, 2024 ஜனவரி 7, 8 ஆகிய நாட்களில் சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் தமிழ்நாடு அரசு நடத்திய உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் முன்எப்போதும் இல்லாத அளவாக, 6,64,180 கோடி ரூபாய் முதலீடுகளும், அவற்றின் மூலம் 14,54,712 பேருக்கு நேரடி வேலைவாய்ப்புகளும் 12,35,945 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் என மொத்தம் 26,90,657 வேலைவாய்ப்புகளுக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்



இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 10-02-2024

# முதல் தவறைச் செய்த உத்தரகாண்ட்

பொது சிவில் சட்டத்தைக் கொண்டுவந்ததன் மூலமாக இந்தியாவில் முதல் தவறுக்குப் பாதை அமைத்துக் கொடுத்திருக்கிறது உத்தரகாண்ட் மாநிலம். இவர்களைப் பின்பற்றி ராஜஸ்தான் மாநிலமும் பொது சிவில் சட்டத்தை அமல்படுத்தப் போவதாகச் சொல்லி இருக்கிறது.

பா.ஜ.க. விதைக்க விரும்பும் நச்சு விதையை உத்தரகாண்ட் முதலில் விதைத்து விட்டது. இதன் விளைவுகள் எப்படி இருக்கப் போகிறதோ?

பல்வேறு மொழிகள், இனங்கள், மதங்கள், கலாச்சாரங்கள், பண்பாடுகளை உள்ளடக்கிய பன்முகத்தன்மை கொண்ட நாடு இந்தியா. வேற்றுமைகள் எவ்வளவு இருந்தாலும் ஒற்றுமையுடன் அனைவரும் வாழ்ந்து வருகிறார்கள். இதில் வேற்றுமையை விதைக்கும் காரியத்தை ஆர்.எஸ்.எஸ்., ஜனசங், பா.ஜ.க. போன்ற அமைப்புகள் தொடர்ந்து செய்து வருகின்றன. மதத்தை அரசியலுக்கு இவை பயன்படுத்தி வருகின்றன.

**தங்களது அரசியல் லாபத்தை, மக்களது மத உணர்வுகளைத் தூண்டுவதன் மூலமாக அடைய முடியுமா என்று பார்க்கிறது பா.ஜ.க. இவர்களது அரசியல் இலக்கு, சிறுபான்மைச் சமூகத்தினர். அவர்களைக் கொச்சைப்படுத்தி அதன் மூலமாக பெரும்பான்மையினரை ஏமாற்றுவதே அவர்களது தந்திரம் ஆகும். பெரும்பான்மை மக்கள் அதற்குப் பலியாவது இல்லை. இருந்தாலும் பா.ஜ.க. அதனை தொடர்ச்சியாகச் செய்து வருகிறது.**

பொது சிவில் சட்டத்தைக் கொண்டு வருவது –

குடியுரிமை திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருவது–

பாபர் மசூதியை இடித்து ராமர் கோவில் கட்டுவது –

காஷ்மீருக்கான சிறப்புத் தகுதியை ரத்து செய்வது –

போன்றவை பா.ஜ.க.வினரின் வேலைத் திட்டங்கள் ஆகும். இவை குறித்த எந்த விமர்சனத்தையும் பா.ஜ.க. ஏற்றுக் கொள்வது இல்லை. காஷ்மீர் தலைவர்களை வீட்டுச் சிறையில் வைத்து 370 சிறப்புத் தகுதியை ரத்து செய்து விட்டார்கள். பாபர் மசூதி இடிக்கப்பட்டது. அதே இடத்தில் ராமர் கோவில் எழுந்து விட்டது. 'எப்போது வேண்டுமானாலும் குடியுரிமைச் சட்டம் வரலாம்' என்று சொல்லி வருகிறார்கள். பொது சிவில் சட்டத்தை உத்தரகாண்ட் நிறைவேற்றிக் காட்டி விட்டது.

**இந்தியாவில் கிரிமினல் சட்டங்கள் ஒரே மாதிரியாக உள்ளன. பண்பாடு, பழக்க வழக்கங்கள் என்பவை மாநிலத்துக்கு மாநிலம் மாறுபடுகிறது. எனவே, திருமணம், வாரிசுரிமை உள்ளிட்ட வழக்கங்கள் தங்களின் மதநம்பிக்கையின்படி பின்பற்றும் உரிமையை நமது அரசியல் சட்டம் அளித்துள்ளது. இதனால், சிவில் சட்டங்கள் மதங்களைப் பொறுத்து மாறுகிறது. இந்த நிலையை மாற்றுவது பா.ஜ.க.வின் திட்டங்களில் ஒன்றாக உள்ளது. எனவே தான் பொது சிவில் சட்டமானது ஜனநாயக சக்திகளால் எதிர்க்கப்படுகிறது.**

21வது சட்ட ஆணையம், பொது சிவில் சட்டம் தொடர்பாக பொதுமக்களிடம் விரிவான கேள்விகளை முன்வைத்தும், அனைத்துத் தரப்பினரின் கருத்துக்களையும் கேட்டும், அதனடிப்படையில் பொது சிவில் சட்டம் அவசியமானதுமல்ல; விரும்பத்தக்கதும் அல்ல என்று முடிவெடுத்து அறிவித்தது. அதனை மீறித்தான் பொது சிவில் சட்டத்தை உத்தரகாண்ட் அரசு அமல்படுத்தி இருக்கிறது.

பொது சிவில் சட்டத்துக்கு அனுமதி வழங்கக் கூடாது என வலியுறுத்தி 22வது சட்ட ஆணையத்திற்கு தி.மு.க. சார்பில் ஏற்கனவே கடிதம் எழுதப்பட்டுள்ளது.

தி.மு.க. பொதுச் செயலாளர் துரைமுருகன் அனுப்பிய கடிதத்தில்,

**"இந்திய மக்கள் பல்வேறு மத, மொழி, இனக் குடும்பமாக, 'வேற்றுமையில் ஒற்றுமை' என்ற அடிப்படையில் வாழ்ந்து வருகிறார்கள். அவரவர் பழக்கவழக்கங்களை அவரவர் பின்பற்றி வருகிறார்கள். இந்திய அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமை பிரிவு 25-ன்படி குடிமக்கள் அனைவரும் தாங்கள் சார்ந்துள்ள மத வழக்கங்களைப் பின்பற்றவும், பரப்பவும் உரிமை பெற்றவர்களாவர். இத்தகைய வேறுபாடுகள் நம்முடைய அரசமைப்புச் சட்டத்தை வலிமையாக்கி உள்ளது.**

**பா.ஜ.க.வின் 'ஒரு நாடு, ஒரு இனம், ஒரு மொழி, ஒரு பண்பாடு' என்ற கொள்கை சட்ட விரோதம் ஆகும். இந்த நோக்கத்துடன்தான் பொது சிவில் சட்டத்தைக் கொண்டு வருகிறார்கள். இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தால், மதச் சார்பின்மைக்கு குந்தகம் ஏற்படுத்துவதுடன், சட்டம் - ஒழுங்கு பாதிப்பு, அமைதியின்மை போன்ற பல கேடுகளை இந்திய சமுதாயத்தில் உருவாக்கும் நிலை ஏற்படும்"**

– என்று குறிப்பிட்டு இருந்தார்.

இந்தச் சட்டம் தனிநபர் உரிமையான; எந்த மதத்தையும் பின்பற்றுதல், வாரிசுரிமை, தத்தெடுத்தல் போன்றவற்றில் அரசமைப்புச் சட்டப் பிரிவு 25 வழங்கியள்ள உரிமைகளைப் பறிப்பதற்கும், பிரிவு -29 வழங்கியுள்ள சிறுபான்மை யினருக்கான உரிமைகளைப் பறிப்பதற்குமான முயற்சியாகும்.

அரசமைப்புச் சட்டப் பிரிவு-29, இந்திய நிலப் பரப்பில் வாழும் ஒவ்வொரு குழுவினருக்கும், அவர்களுடைய மொழி, எழுத்து, பண்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்கும் உரிமையை அளித்துள்ளது.அதற்கு இது விரோதமானது.

பொது சிவில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தனிமனித உரிமைகளைப் பறிப்பது ஏற்புடையதல்ல. சிறுபான்மை மக்களை மட்டுமல்ல; இது பட்டியலின மக்களையும் பாதிக்கும். பெரும்பான்மை இந்து மதத்தைச் சார்ந்த பட்டியலின மலைவாழ் மக்களின் பழக்க வழக்கங்கள், திருமணம் தொடர்பான சடங்கு சம்பிரதாயங்களையும் இந்தச் சட்டம் அழித்துவிடும்.

**பொதுசிவில் சட்டத்தின் தொடர்ச்சி என்பது; சிறுபான்மையினரின் உரிமையைப் பறிப்பதாகவும் – பட்டியல் இன, பழங்குடி மக்களது தனிச்சட்டங்கள் – உரிமைகளைப் பறிப்பதாகவும் படிப்படியாகச் செல்லும். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட தனி உரிமைச் சட்டங்களை ஒரே நாளில் தூக்கி எறியவும் இது அடிப்படை அமைத்துத் தரும்.இடஒதுக்கீடு எனப்படும் சமூகநீதிக்கே ஒரு காலத்தில் இதை வைத்து வேட்டு வைப்பார்கள்.**

●●

## மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகத்தில் படித்த மாற்றுத்திறனாளி வங்கித் தேர்வில் வெற்றி!

மதுரை, பிப். 10–

மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகத்தில் படித்த மாற்றுத்திறனாளி இளைஞர் ஸ்ரீகாந்த், வங்கித் தேர்வில் வெற்றி பெற்று உதவி மேலாளராக தேர்வாகியுள்ளார்.

மதுரை பழங்காநத்தம் பகுதியைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநரான மாரிமுத்துவின் மகன் ஸ்ரீகாந்த், பார்வை மாற்றுத்திறனாளியாவார். அவர், தனது கடின உழைப்பின் காரணமாக பி.ஏ., பி.எட்., படித்து முடித்துள்ளார். அரசுப்பணிக்கு செல்ல வேண்டும் என விருப்பம் கொண்ட ஸ்ரீகாந்த், டி.என்.பி.எஸ்.சி, வங்கி தேர்வு உள்ளிட்ட பல்வேறு போட்டித் தேர்வுகளை எழுதினார். இந்நிலையில் கடந்த 4 மாதங்களுக்கு முன்பு மதுரையில் உள்ள கலைஞர் நூற்றாண்டு நூலக மாற்றுத்திறனாளிகள் பிரிவில் பிரெய்லி முறையில் வடிவமைக்கப்பட்ட போட்டித் தேர்வு புத்தகங்களை படிக்க தொடங்கினார். 4 மாதங்களாக இடைவிடாது படித்த ஸ்ரீகாந்த், தனியார் வங்கி தேர்வில் வெற்றி பெற்று உதவி மேலாளராக தேர்வாகியுள்ளார். தான் உதவி மேலாளராக தேர்வு செய்யப்பட்டது மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாகவும், கலைஞர் நூலகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு என தனி பிரிவையே அமைத்துக்கொடுத்த முதலமைச்சருக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாகவும் ஸ்ரீகாந்த் கூறினார்.

## அன்னைத் தமிழுக்கு அருந்தொண்டாற்றுகிறார்!

# பெருங்கவிக்கோவின் தமிழ்த் தொண்டு போற்றுதலுக்குரியது!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் – பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் பிறந்தநாள் வாழ்த்துச் செய்தியில் புகழாரம்!



**சென்னை, பிப்.10–**

**பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்களுக்கு, நேற்று பிறந்தநாள்! இந்நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த வாழ்த்துச் செய்தியில் "பெருங்கவிக்கோவின் தமிழ்த் தொண்டு போற்றுதலுக்குரியது!" என்று புகழாரம் சூட்டியுள்ளார்.**

**மேலும் இந்நாளில் முதல்வர் அவர்கள், பெருங்கவிக்கோ அவர்களைத் தொலைபேசி வாயிலாகவும் தொடர்பு கொண்டு, அவருக்குத் தமது நெஞ்சார்ந்த பிறந்த நாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.**

**முதல்வர் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:–**

முகவை மண்ணில் முத்தாக விளைந்து, அன்னைத் தமிழுக்கு அருந்தொண்டாற்றும் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்!

'காலமெல்லாம் விழித்திருந்தே கடமையாற்றும் கவிஞன் நான்' எனத் தம் கவிதைகளால் தமிழர் வாழ்வில் புது மலர்ச்சியும் சிந்தனையும் உருவாக உழைக்கும் அவரது தமிழ்த் தொண்டு போற்றுதலுக்குரியது!

தமது 89ஆம் அகவைப் பிறந்த நாள் விழாவையும் நூல் வெளியீட்டுடன் கொண்டாடும் அவரது ஊக்கமும் உழைப்பும் அனைவரும் பின்பற்றத் தக்க பண்பாகும். தமிழ் ஆன்றோர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கும் "நோபல் தவம்" நூல் வெளியீட்டு விழா சிறந்திட விழைகிறேன்.

தமிழின் பெருமையை உலகெல்லாம் கொண்டு சேர்க்க அயராது உழைக் கும் பெருங்கவிக்கோ அவர்களின் அரும்பணி சிறக்க வாழ்த்து கிறேன்!

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

## தமிழ்நாட்டில் மழையால் பெரும் பாதிப்பு!

# ஒன்றிய அரசு இதுவரை நிதி தரவில்லை!

### மதுரையில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!!

*மதுரை, பிப்.10-*

நாடாளுமன்ற தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழு 07.02.24 அன்று மதுரை மாவட்டத்தில் மக்களை சந்தித்தது. மதுரை பாண்டிக் கோவில் அருகே உள்ள தனியார் திருமண மண்டபத்தில் தேர்தல் அறிக்கையில் இடம்பெற வேண்டிய பொதுமக்களின் கோரிக்கைகளை பெற்றனர். கோரிக்கை மனுக்களை பெற்ற பின்னர் கனிமொழி கருணாநிதி எம்.பி. செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

இந்த ஆண்டு நடக்கக் கூடிய நாடாளுமன்ற தேர்தலுகாக திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் முதலமைச்சர் அறிவுறுத்தலின்படி நியமிக்கப்பட்டு இருக்கக்கூடிய தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு பல்வேறு பகுதிகளுக்கு சென்று அங்கு இருக்கக் கூடிய மக்களை, பல்வேறு துறை சார்ந்த அமைப்புகளை சந்தித்து அவர்களுடைய கோரிக்கைகள் எல்லாம் பெற்று தேர்தல் அறிக்கையை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் செய்து வருகிறோம்.

வழக்கமாக திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கை என்பது மக்களுக்கான தேர்தல் அறிக்கையாக எப்போதும் இருக்கும். அதற்காக இந்த ஆண்டும் தேர்தல் அறிக்கை தூத்துக்குடி கன்னியாகுமரி அதை அடுத்து மதுரையிலே இன்று மக்களை சந்தித்து மக்கள் கோரிக்கைகளை மனுவாக வாங்கி வந்துள்ளோம்.

இன்று மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், நிறுவனங்களைச் சேர்ந்தவர்களின் கோரிக்கைகள் எல்லாம் பெற்று வருகிறோம். முதல்வர் அவர்களின் ஒப்புதலை பெற்று தேர்தல் அறிக்கையில் இடம்பெறும் என்றார்.

ஜி.எஸ்.டி.யில் இருக்கக் கூடிய பல்வேறு பிரச்சினைகள் குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் சிறு குறு தொழில் செய்யக்கூடிய தொழிலதிபர்கள் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை அளித்திருந்தார்கள். அதேபோல ரயில்வேயில் வழக்கமாக தென் மாநிலங்களுக்கு நிதி குறைவாக ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அது சம்பந்தமாக பல கோரிக்கைகள் வந்துள்ளது.

**100 நாள் வேலைத்திட்டம்!**

100 நாள் வேலை திட்டத்தில் அதில் இருக்கக்கூடிய பிரச்சினை அதாவது சரியாக சம்பளம் வழங்கவில்லை என்பது உட்பட்ட பல்வேறு பிரச்சினைகளை மக்களிடத்தில் இருந்து கோரிக்கையாக வந்துள்ளது என்றார்.

தமிழ்நாடு முதல்வர் ஆட்சியை பொறுப்பேற்ற பின்பு தி.மு.க.வுக்கு வாக்களிக்காதவர்கள் கூட ஏன் வாக்களிக்கவில்லை என்று நினைக்க கூடிய அளவிற்கு ஆட்சி நடத்தி வருகிறோம்.

முதல்வர் அவர்கள் கூட்டணி கட்சிகளை மதித்து அந்த பிரதிநிதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களை அரவணைத்து நடத்தி தான் வருகிறார்.

இதற்கு முன்னாடி இருந்த தேர்தல் அறிக்கை என்பது சட்டமன்ற தேர்தலுக்கான அறிக்கையாக இருந்தது. அதில் பெரும்பாலும் கொடுக்கப்பட்டிருக்க கூடிய வாக்குறுதிகளை நிறைவேற்றி இருக்கிறோம். மேலும் ஒவ்வொன்றாகவும் நிறைவேற்றி வருகிறோம்.

மகளிர்க்கு ஆயிரம் ரூபாய் திட்டம் எவ்வளவு நிதி கடுமையான நிதி நெருக்கடிகளும் வழங்கி வருகிறார் முதலமைச்சர். அவ்வாறு சட்டமன்றத்தில் தேர்தல் அறிக்கையில் வழங்கப்பட்ட ஒவ்வொரு வாக்குறுதிகளும் ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருகிறார்.

அதற்கு முன்னாள் நாடாளுமன்ற தேர்தலில் அவருடைய வாக்குறுதிகளை அவர்களால் நிறைவேற்ற முடியவில்லை. இரண்டு தேர்தல் முடிந்துவிட்டது இன்று வரை 15 லட்சம் ரூபாய் யாருக்கும் வந்து சேரவில்லை. யாருக்கும் சரியாக போய் சேராத ஒரு சூழ்நிலை உள்ளது.

அதேபோல தென் மாநிலங்களுக்கு ரயில்வே நிதியானது குறைந்து கொண்டே தான் வருகிறது. கல்விக்காக ஒதுக்கக்கூடிய அந்த நிதி குறைந்து கொண்டே தான் வருகிறது.

**மகளிர்க்கான இட ஒதுக்கீடு!**

பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதா கொண்டு வந்து நிறைவேற்றி இருக்கிறார்கள். ஆனால் அது எப்போது வரும் என்பது தெரியவில்லை. பத்து வருடமாக அல்லது இருபது வருடமாக என்பது கூட தெரியாத ஒரு சூழ்நிலை தான் உள்ளது.



இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் தான் ஒன்றிய அரசில் பயணிக்க வேண்டிய ஒரு அவலமான சூழ்நிலையை இருந்து கொண்டிருக்கிறோம்.

மழையால் சென்னை பாதிக்கப்பட்டது. அதேபோல தென் மாவட்டங்கள் மழையால் பாதிக்கப்பட்டது இன்று வரை தரப்பட்டிருக்கக்கூடிய நிதி எதுமில்லை.

**முதலமைச்சர் வழங்கிய நிவாரணம்**

முதலமைச்சர் அவர்கள் தான் நிவாரணம் கொடுத்து இருக்கிறார்கள். மத்திய அமைச்சர் அமைச்சகத்தில் இருந்து எந்த நிதியும் வந்ததில்லை. மதிப்பீடு செய்ய கமிட்டியினர் மூன்று முறை வந்து விட்டார்கள். இன்று வரை ஒரு பைசா கூட வரவில்லை. இப்படிப்பட்ட ஒரு மனநிலையுடன் தமிழ் நாட்டுக்கு எதையும் செய்யக்கூடாது என்ற ஒரு நிலையில் தான் இருக்கிறார்கள்.

கடந்த சட்டமன்ற தேர்தலில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவே ற்றப்பட்டதா என்ற கேள்விக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருகிறோம். மகளிருக்கு ஆயிரம் ரூபாய் மிக முக்கியமான ஒரு திட்டம் விரைவில் நிறைவேற்றப்பட்ட திட்டம். எவ்வளவு நிதி நெருக்கடி இருந்தாலும் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை முதல்வர் நிறைவேற்றி வருகிறார்.

அதோடு ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருகிறோம். தி.மு.க.வைப் பொருத்த வரை கொடுத்த வாக்குறுதிகளை ஒவ்வொன்றாக நாங்கள் நிறைவேற்றி வருகிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

இப்பேட்டியின் போது அமைச்சர்கள் பி.மூர்த்தி, பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், முன்னாள் எம்.பி., டி.கே.எஸ். இளங்கோவன், அரசு தலைமை கொறடா கோவி செழியன், ஏ.கே.எஸ். விஜயன், சட்டமன்ற உறுப்பினர்கள் எழிலரசன், எழிலன் நாகநாதன், சென்னை மேயர் பிரியா, மாவட்ட செயலாளர்கள் கோ.தளபதி எம்.எல்.ஏ., ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ., சேடப்பட்டி மு.மணிமாறன், கம்பம் ராமகிருஷ்ணன், தங்க தமிழ்ச்செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ. தமிழரசி, ஆ.வெங்கடேசன், மகாராஜன், சிவகங்கை மாவட்ட துணை செயலாளர் சேங்கைமாறன் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

# சேலம் பெரியார் பல்கலைக்கழகப் பதிவாளர் தங்கவேல் பணியிடை நீக்கம்!

### முறைகேடு குற்றச்சாட்டுகள் நிரூபணம்!

*சேலம், பிப். 10-*

சேலம் பெரியார் பல்கலைக்கழக பதிவாளர் தங்கவேல் பணியிடை நீக்கம் செய்ய பல்கலைக்கழக துணைவேந்தருக்கு தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக ஜெகநாதன் மற்றும் பதிவாளராக தங்கவேல் ஆகியோர் நியமிக்கப்பட்டதற்கு பிறகு பல்கலைக்கழகத்தில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றதாக தமிழ்நாடு அரசுக்கு தொடர் புகார்கள் வந்தன. இதனையடுத்து, உயர்கல்வித் துறையின் அரசு கூடுதல் செயலாளர் பழனிச்சாமி தலைமையில் இரண்டு பேர் கொண்ட விசாரணை குழுவை தமிழ்நாடு அரசு நியமித்து புகார்கள் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வந்தது. இந்த விசாரணை குழுவினர் தமிழ்நாடு அரசிடம் கடந்த 5ம் தேதி அறிக்கையாக தாக்கல் செய்தனர். இதில் பெரியார் பல்கலைக்கழகத்தில் பதிவாளராக பொறுப்பு வகிக்கும் தங்கவேல் மீது சுமத்தப்பட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், கணினி அறிவியல் துறையில் நியமனம் செய்ததில் முறைகேடு நடந்துள்ளது என்றும், கணினி அறிவியல் துறைக்கு தேவையான உபகரணங்களை ஒரே நிறுவனத்தில் அதுவும் அவரது உறவினர் நிறுவனத்திலேயே வாங்கியது உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் உறுதி செய்யப்பட்டுள்ளதாக பழனிச்சாமி விசாரணை குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சேலம் பெரியார் பல்கலைக்கழக பதிவாளர் தங்கவேலுவை பணி ஓய்வுபெற அனுமதிக்கக்கூடாது என்றும் அவர் உடனடியாக பணியிடை நீக்கம் செய்யப்பட வேண்டும் என்று பல்கலைக்கழக துணைவேந்தருக்கு, தமிழ்நாடு உயர் கல்வித்துறை முதன்மை செயலாளர் கார்த்திக் கடிதம் அனுப்பி உள்ளார்.



இராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் நகராட்சி தனியார் மண்டபத்தில் தமிழ் நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் 742மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.65.71கோடி மதிப்பிலான வங்கிகடனுதவி பெறுவதற்கான ஆணைகளை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி வழங்கினார். மாவட்ட ஆட்சியர் ச.வளர்மதி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., சோளிங்கர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.முனிரத்தினம், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் வடிவேலு மற்றும் கழக நிர்வாகிகள் இதில் கலந்து கொண்டனர்.

## அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேருங்கள்!

# பெண்களின் முன்னேற்றமே ‘திராவிட மாடல்’ அரசின் முதல் நோக்கம்!

## ஈரோட்டில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடன் வழங்கும் விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

ஈரோடு, பிப். 10–

**ஈரோடு சோலார் புதிய பேருந்து வளாகத்தில் நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) அரசு நலத்திட்ட உதவிகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் இணைப்பு வழங்கும் விழா நடைபெற்றது. இதில் மாவட்டத்தில் உள்ள 2 ஆயிரத்து 337 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 100 கோடியே 36 லட்சம் அளவிற்கு வங்கிக் கடன் இணைப்புகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி சிறப்புரையாற்றினார். அப்போது, பெண்களுடைய முன்னேற்றம்தான் திராவிட மாடல் அரசின் முதன்மையான நோக்கம் என்று குறிப்பிட்டார்.**

விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:-

தமிழ்நாடு முழுவதும் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு `மகளிர் மேம்பாட்டு நிறுவனம்’, `வாழ்ந்து காட்டுவோம் திட்டம்’, `நகர்புற வாழ்வாதார இயக்கம்’ போன்றவற்றின் மூலம் 2 ஆயிரத்து 504 கோடி ரூபாய் மதிப்பிலான வங்கிக் கடன் இணைப்பை இன்று வழங்கிட, நம் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். அதன் ஒரு பகுதியாகத்தான் இன்றைக்கு ஈரோடு மாவட்டத்தில் உள்ள 2 ஆயிரத்து 337 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு 100 கோடியே 36 லட்சம் ரூபாய் அளவிற்கு வங்கிக் கடன் இணைப்புகளை வழங்க, வந்திருப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். பெருமை அடைகின்றேன்.

ஈரோடு மாவட்டத்தில் நகராட்சி நிர்வாகம், கூட்டுறவு, நெடுஞ்சாலை, வேளாண்மை, பள்ளிக்கல்வி, நீர்வளம் உள்ளிட்ட ஒன்பது துறைகளுக்கு 209 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டப் பணிகளைத் தொடங்கி வைப்பது மற்றும் அடிக்கல் நாட்டுகின்ற நிகழ்ச்சிகளும் இங்கே உங்கள் முன்னிலையில் நடைபெற்றுள்ளன.

**தாய் வீட்டிற்கு வருவது போன்ற உணர்வு!**

ஈரோட்டிற்கு வரும் பொழுதெல்லாம் என்னுடைய தாய் வீட்டிற்கு, சொந்த வீட்டிற்கு வருகின்ற உணர்வு எப்பொழுதுமே ஏற்படும். அதற்குக் காரணம் இங்கு கூடி இருக்கின்ற தாய்மார்கள், மகளிர் நீங்கள் ஒவ்வொருவரும் என்னை உங்கள் வீட்டுப் பையனாக, உங்களுடைய மகனாக, உங்களுடைய சகோதரனாக, உங்களுடைய பேரனாக, உங்களுடைய அண்ணனாக நினைத்து, என்னிடம் வெளிக்காட்டுகின்ற அந்த அன்புதான், எனக்கு அப்படியொரு உணர்வை ஏற்படுத்துகின்றது.

இங்கு நல திட்ட உதவிகளைக் கொடுப்பதற்காகத்தான் அண்ணன் முத்துசாமி அவர்கள் என்னை அழைத்தார்கள். அதை நினைத்துத்தான் வந்தேன். மேடைக்கு வந்த பிறகு தான் தெரிகின்றது இன்னும் சில கோரிக்கைகளையும் அவர் வைத்திருக்கின்றார் என்று. இங்கு ஒரு விளையாட்டு அரங்கம் வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார். விரைவில், நம் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று அதையும் நிறைவேற்றித் தருவேன் என்ற வாக்குறுதியை நான் கொடுக்கின்றேன்.

**பெண் விடுதலைக்கான போர்க்குரல் தந்தை பெரியார்!**

ஈரோடு வந்தாலே எனக்குள் ஒரு மகிழ்ச்சி பொங்குவதற்கு இன்னொரு மிக முக்கியமான காரணம் இருக்கின்றது. ‘பகுத்தறிவுப் பகலவன்’, ‘சுய மரியாதைச் சூரியன்’, ‘பெண் விடுதலைக்கான போர்க்குரல்’ தந்தை பெரியார் பிறந்த மண் இது. நம் `திராவிட இயக்கத்தின் தொட்டில்’ என்று இந்த ஈரோடு மாவட்டத்தைச் சொல்லலாம்.



பெண்கள் தங்களுடைய செலவுக்கு தன்னுடைய தந்தையையோ, கணவனையோ, அண்ணனையோ, தம்பியையோ எதிர்பார்க்க வேண்டிய நிலைமையை மாற்றி, கிராமப்புறத்தில் இருக்கின்ற பெண்களும் பொருளாதாரச் சுதந்திரத்தோடு இருக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கிட்டத்தட்ட முப்பது வருடத்திற்கு முன்பு மகளிர் சுய உதவிக்குழுவை இந்தியாவிலேயே முதன் முறையாகத் தொடங்கினார்.

**12 லட்சத்து 22 ஆயிரத்து 803 சுய உதவிக் குழுக்கள்!**

நம்முடைய திராவிட மாடல் அரசு, இன்றைக்கு அந்தத் திட்டம் தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு குக்கிராமத்திலும் மகளிர் சுய உதவிக் குழுக்களை ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் லட்சக்கணக்கான பெண்கள் பயனடைந்து வருகிறார்கள். நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்து நமது முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றது முதல் இப்பொழுதுவரை 12 லட்சத்து 22 ஆயிரத்து 803 சுய உதவிக் குழுக்களுக்குச் சுமார் 69 ஆயிரத்து 554 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பாக வழங்கப்பட்டுள்ளது, என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**30 ஆயிரம் கோடி ரூபாய் கடன் வழங்க இலக்கு!**

2023 - 2024 ஆம் ஆண்டில் எங்களுக்கு வழங்கப்பட்ட டார்கெட் முப்பதாயிரம் கோடி ரூபாய் கடன் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதுவரை 25 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. விரைவில், எங்கள் துறையின் சார்பாக அந்த 30,000 கோடி டார்கெட்டையும் நாங்கள் அடைவோம். இந்த நேரத்தில் ஒரு விஷயத்தை உங்களிடத்தில் நினைவு படுத்த விரும்புகின்றேன். ஒன்றிய அரசுக்கு நம்முடைய மாநில அரசு 2016-ஆம் ஆண்டு முதல் 6 லட்சம் கோடி அளவிற்கு இதுவரை மக்கள் வரிப்பணம் செலுத்தி இருக்கின்றோம். ஆனால், நமக்கு ஒன்றிய அரசு திரும்பி வெறும் இரண்டரை லட்சம் கோடி ரூபாய்தான் திருப்பிக் கொடுத்திருக்கிறது. நாம் கொடுத்தது 6 லட்சம் கோடி. ஆனால், ஒன்றிய அரசு நம்முடைய தமிழக அரசுக்குக் கொடுத்தது இரண்டரை லட்சம் கோடி தான்.

அதாவது ஒன்றிய அரசுக்கு வரியாக நாம் ஒரு ரூபாய்க் கொடுத்தால் அவர்கள் நமக்குத் திருப்பித் தருவது வரும் 29 பைசாதான். இப்படிப்பட்ட ஒரு பொருளாதாரச் சூழலில்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மகளிர் நலனுக்காக இத்தனை கோடி மதிப்பிலான திட்டங்களைப் பார்த்துப் பார்த்துச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மகளிர் முன்னேற்றத்தின் மீது நம் அரசுக்கு இருக்கின்ற அக்கறையை எடுத்துக்காட்டத்தான் இந்தப் புள்ளி விவரத்தை உங்களுக்குக் கூறி இருக்கின்றேன். நம்முடைய திராவிட மாடல் அரசு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு எந்த அளவிற்கு ஆதரவாக இருக்கிறதோ, அதைவிட அதிகமாக நம்முடைய குழுக்கள் உறுப்பினர்கள் இந்த அரசின் திட்டங்கள் வெற்றி பெறுவதற்கு ஆதரவாக இருக்கின்றீர்கள்.

நம்முடைய திராவிட மாடல் செயல்படுத்துகின்ற பல்வேறு திட்டங்களில் மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகள் உங்களின் பங்களிப்பு அதிகமாக இருக்கின்றது. உதாரணத்திற்கு, தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகின்ற `மக்களைத் தேடி மருத்துவம்’ என்ற திட்டத்தில் நோயாளிகளின் வீட்டிற்குச் சென்று மருத்துவச் சேவைகளைச் செய்கின்ற மகளிர் சுய உதவிக் குழுக்கள் மிகப்பெரிய சேவையைச் செய்து வருகின்றன.

**காலை உணவுத் திட்ட உணவைச் சமைப்பவர்!**

தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசுப் பள்ளிகள் தொடக்கக் கல்வி ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய 17 லட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெறுகின்ற முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் தரமான உணவைச் சமைத்துக் கொடுப்பதும், மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகள் நீங்கள்தான். சுகாதாரம், உணவு, கல்வி ஆகிய மூன்றிலும் திராவிட மாடல் அரசு குறிக்கோளை அடைவதற்கு, மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மிகப்பெரிய அளவில் நீங்கள் உதவி செய்துகொண்டு வருகிறீர்கள். அதற்காக இங்கு கூடியிருக்கக்கூடிய அனைத்து தாய்மார்களுக்கும், தங்கைகளுக்கும் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பெண்களுக்கு கல்வி முக்கியம்!**

பெண்களுடைய முன்னேற்றம் தான் இந்தத் திராவிட மாடல் அரசின் முதன்மையான நோக்கம். அதற்காகவே, இந்த அரசு பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. ஒரு குடும்பத்தில் ஒரு பெண் படித்தால், அந்த மொத்த குடும்பமே படித்ததற்கு சமம் என்று சொல்வார்கள். காரணம், அந்தப் படித்த பெண் தனது குழந்தைகளுக்குப் படிப்பு சொல்லிக் கொடுப்பார்கள். அந்தக் குழந்தைகள் நல்ல முறையில் வளர்ந்து நல்ல வேலைக்குப் போவார்கள். அந்தக் குடும்பமே முன்னேறும். அதனால்தான் பெண்களுக்குக் கல்வி மிக மிக முக்கியம்.

அதேபோல் பெண்களுக்குப் பொருளாதாரச் சுதந்திரம் மிக மிக முக்கியம். பெண்கள் சம்பாதிக்கத் தொடங்கினால் பெண்கள் பணத்தைச் சேமிக்கத் தொடங்கினால், கையாளத் தொடங்கினால் அந்தக் குடும்பமே பொருளாதார வளர்ச்சி அடையும் என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். பெண்கள் உயர் கல்வி படிக்க வேண்டும் என்பதற்காக இந்த அரசு புதுமைப்பெண் என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியது. அரசுப் பள்ளியில் படித்து, கல்லூரிக்குப் படிக்கப் போகின்ற ஒவ்வொரு பெண்களின் வங்கிக் கணக்கிலும் மாதம் ஆயிரம் ரூபாய் என்ற புதுமைப்பெண் திட்டத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் துவங்கி வைத்தார்கள்.

**ஒரு கோடியே 16 லட்சம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய்!**

பெண்கள் பொருளாதாரத்தில் சொந்த காலில் நிற்க வேண்டும் என்று கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் இதுவரை ஒரு கோடியே 16 லட்சம் மகளிர் மாதம் 1,000 ரூபாய் நம்முடைய அரசு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார்கள். அதேபோல் நம்முடைய முதலமைச்சர் பொறுப்பேற்று முதல் கையெழுத்து, பெண்களுக்குக் கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டம். பெண்கள் அரசு நகரப் பேருந்துகளில் கட்டணமில்லாமல் பயணிக்கக் இத்திட்டத்தை அறிமுகப் படுத்தினார்.

ஒவ்வொரு மகளிரும் இந்தத் திட்டத்தின் மூலம் கிட்டத்தட்ட வருடத்திற்கு 12 ஆயிரம் ரூபாய் சேமிக்கிறார்கள். மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு உடனடியாக வங்கிக்கடன் இணைப்பையும் சேர்த்து வழங்குகின்றோம். அதேபோல் மகளிர் சுய உதவிக்குழுக்கள் தயாரிக்கின்ற பொருட்களை விற்பனை செய்வதற்கு இந்த அரசு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து வருகின்றது.

**இணையதளத்தின் மூலம் விற்பனை!**

சுய உதவிக்குழுக்கள் தயாரிக்கின்ற பொருட்களை விற்பனை செய்வதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் `பூமாலை வணிக வளாகம்’ ஏற்படுத்தப்பட்டுள்ளது. குழுக்களின் பொருட்கள் இணையதளத்தின் மூலம் விற்பனை செய்யும் வசதியையும் செய்து கொடுத்துள்ளோம். கூடுதலாக, இப்பொழுது மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை வாகனங்களில் ஏற்றிச்சென்று விற்பனை செய்யும் வகையில், 3 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் எக்ஸ்பிரஸ் விற்பனை மின் வாகனங்களும் இங்கே வழங்கப்பட உள்ளது.

பெரும்பாலும் மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளான நீங்கள் தயாரிக்கின்ற பொருட்களைத்தான் நான் பயன்படுத்துகின்றேன். இன்றைக்கு இந்த மேடையில்கூட வந்திருந்த அனைத்து சிறப்பு விருந்தினர்களுக்கும் நினைவுப் பரிசு கொடுத்தார்கள். அதுவும் நீங்கள் தயாரித்த பொருட்கள்தான். என்னுடைய வீட்டில் மட்டுமல்ல, நம்முடைய முதலமைச்சர் வீட்டிலும் நிறைய பொருட்கள் சுய உதவிக் குழுக்கள் நீங்கள் தயாரித்த பொருட்கள்தான் இருக்கின்றன.

**சட்டமன்றத்திலேயே வேண்டுகோள்!**

நான் மட்டுமல்ல, முதலமைச்சர் மட்டுமல்ல, சட்டமன்றத்திலேயே பேசினேன். “அனைவரின் வீட்டுக்கும் பரிசுப் பொருட்கள் கொடுக்கும் பொழுதும் தயவுசெய்து மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கின்ற பொருட்களைக் கொடுங்கள்” என்று வேண்டுகோள் வைத்தேன். ஏனென்றால், நீங்கள் தயாரிக்கின்ற பொருட்கள் அவ்வளவு தரமாக இருக்கும் என்ற நம்பிக்கையில்தான்.

இந்த நேரத்தில் ஈரோடு மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்படுகின்ற ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் சுய உதவிக்குழுக்கள் செயல்பாடுகள் சிலவற்றை மட்டும் உங்களோடு பகிர்ந்துகொள்வதில் பெருமை கொள்கின்றேன். ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டாரம் அட்டவணை அனுமன் பள்ளி ஊராட்சியில் `ஒற்றுமையே வெற்றி’ என்ற நோக்கத்துடன் செயல்படும் அட்டவணை அனுமன் பள்ளி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினர் கார்மெண்ட்ஸ் தொழிலை மிகச் சிறப்பாகச் செய்து வருகின்றார்கள்.

உங்களுடைய தொழிலை விரிவாக்கம் செய்திட, இந்த மேடையில் ரூபாய் 90 லட்சம் வங்கிக் கடன் இணைப்பை வழங்க இருக்கின்றோம். உங்களுடைய தொழில் சிறக்க, என்னுடைய வாழ்த்துகள். கோபி வட்டாரம் மேவணி ஊராட்சியில் துணி வியாபாரம் செய்து வரும் மேவணி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் சிறப்பாக செயல்பட்டு, வெற்றிகரமாக உங்கள் கூட்டமைப்பை நிகழ்த்தி வருகின்றீர்கள். இன்றைக்கு இந்த மேடையில் உங்களின் கூட்டமைப்பின் தொழில் விரிவாக்கத்திற்காக ரூபாய் 40 லட்சம் வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்பட இருக்கின்றது. உங்களுக்கு என்னுடைய வாழ்த்துகள். என்னுடைய பாராட்டுகள்.

அதேபோல் துணி வியாபாரம், ஜமுக்காளம் தயாரிப்பில் ஈடுபட்டு வருகின்ற அம்மாப்பாளையம் ஊராட்சி அளவிலான சகோதரிகள் தாமரை டான்வா மகளிர் சுய உதவிக் குழு மற்றும் செல்லியாண்டியம்மன் மகளிர் சுய உதவிக் குழு சகோதரிகளுக்கும் என்னுடைய வாழ்த்துகள், பாராட்டுகள்.

எனவே, அரசின் அத்தனை திட்டங்களையும் பயன்படுத்திக் கொண்டு பெண்கள் தங்கள் வீட்டையும் நாட்டையும் முன்னேற்ற, வளர்ச்சி அடைய செய்ய நீங்கள் அனைவரும் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தக்கூடிய அனைத்து திட்டங்களுக்கும் நீங்கள்தான் நம் முதலமைச்சரின் தூதுவர்கள். இந்த அனைத்துத் திட்டங்களையும் நீங்கள்தான் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

உங்களுக்கு இங்கே கடன் வழங்கப்பட்டது. அதை வெறும் கடன்தொகையாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள், நம்முடைய திராவிட மாடல் அரசு பார்க்கவில்லை. உங்களின் உழைப்பின் மீது வைத்திருக்கக்கூடிய நம்பிக்கையாகதான் நம் முதலமைச்சர் அவர்கள் பார்க்கிறார். இந்த நிகழ்ச்சியை முடித்துவிட்டு கோவை சென்று அங்கிருந்து மும்பை செல்கின்றேன்.

**விளையாட்டுத் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற மாநிலம்!**

இன்றைக்கு இந்தியாவிலேயே விளையாட்டுத் துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்ற மாநிலம் என்று தமிழ்நாட்டை தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். எனவே, அந்த விருதைப் பெறுவதற்கு முன்பு, தாய்மார்கள் உங்களுடைய வாழ்த்துகளைப் பெறுவதற்காகதான் இங்கு வந்திருக்கின்றேன்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகியவற்றின் கீழ் நலத்திட்டங்களைப் பெற்ற பயனாளிகள் உங்கள் அனைவருக்கும் மீண்டும் மீண்டும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் முத்துசாமி, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள், ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், ஏ.ஜி.வெங்கடாசலம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் செந்தில்குமார் ஐ.ஏ.எஸ், ஈரோடு மேயர் நாகரத்தினம் சுப்ரமணியம், துணை மேயர் செல்வராஜ், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் நவமணி கந்தசாமி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திவ்யலட்சுமி ஐ.ஏ.எஸ், செயல் இயக்குநர் ஸ்ரேயாசிங் ஐ.ஏ.எஸ், மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜகோபால் சிங்காரா ஐ.ஏ.எஸ்., ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் சிவகிருஷ்ணமூர்த்தி ஐ.ஏ.எஸ்., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜவகர் ஐ.பி.எஸ்., மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார்,

ஈரோடு வடக்கு மாவட்ட செயலாளர் நல்லசிவம், நெசவாளர் அணிச் செயலாளர் சிந்து ரவிச்சந்திரன், இளைஞர் அணி துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் திருவாசகம், திருவேங்கடம் உள்ளிட்ட கழகத்தினர் பலரும் கலந்துகொண்டனர்.

மேலும் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் அமைச்சர்கள், மக்கள் பிரதிநிதிகள் காணொலிக் காட்சி வாயிலாக இணைந்திருந்தனர். ஈரோட்டில் நலத்திட்ட உதவிகள் கொடுக்கத் தொடங்கியதும் அந்தந்த மாவட்டங்களில் அவர்கள் நலத்திட்ட உதவிகளையும் வழங்கினர்.





ஈரோடு மாவட்டத்திற்கு வருகை தந்த கழக இளைஞர் அணி செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், ஈரோடு தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் வீட்டு வசதி துறை அமைச்சர் சு.முத்துசாமி முன்னிலையில் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ் ஏற்பாட்டில் ஈரோடு தெற்கு மாவட்டத்தில் கிளாம்பாடி பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் கே.தர்மராஜ் விபத்தில் அடிபட்டு கால் அறுவை சிகிச்சை செய்யப்பட்ட நிலையில் அவருக்கு மருத்துவ உதவி தொகை ரூபாய் 1,00,000 மற்றும் ஈரோடு மாநகரம் கோட்டை பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.நடராஜ் சிறுநீரக பாதிப்பு சிகிச்சை பெறுவதற்காக மருத்துவ உதவித்தொகை ரூபாய் 50,000 அவர்களிடம் வழங்கினார்.

# ‘வெற்றிப் பயணம் தொடரும்!’ முதல்வர் பெருமிதம்!

... முதல் பக்கத் தொடர்ச்சி!

சில முக்கிய கல்வி நிறுவனங்களில் மாணவர்களுக்கு வழங்கப்படும் ‘பேக்கேஜ்’களுக்கு இணையாக உள்ளது.

இந்த ஆண்டு, தளவாடங்கள், வங்கி, காப்பீடு, சுகாதாரம், விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த பல நிறுவனங்கள் வேலை வாய்ப்பு இயக்கத்தில் பங்கேற்கின்றன. பல குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களும் வேலை வாய்ப்பு இயக்கத்தில் ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளன.

**மேலும் சில நிறுவனங்கள்**

இந்த ஆண்டு பங்குபெறும் நிறுவனங்களின் எண்ணிக்கை குறித்த வினாவிற்கு, திருமதி திவ்யா கூறியதாவது: “இது ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும். சில நிறுவனங்கள் ஏற்கனவே குழுவில் வந்துவிட்டன, வரும் வாரங்களில் மேலும் சில சேரும்.

கிருஷ்ணகிரியில் நடந்த வேலை வாய்ப்பு இயக்கத்தில், 2,999 பேர் பதிவு செய்திருந்தனர். இதில் 1,591 பேர் நேர்காணலுக்கு வந்திருந்தனர். சுமார் 580 விண்ணப்ப தாரர்கள்/சுய விவரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மேலும் 461 சுயவிவரங்கள் இரண்டாவது சுற்றுக்கு தேர்வு செய்யப்பட்டன. இங்கு வழங்கப்படும் அதிக பட்ச தொகுப்பு ஆண்டுக்கு ரூ.3.35 லட்சம்.

சேலத்தில், 3,243 மாணவர்கள் பதிவு செய்திருந்தனர்; நேர்காணலில் 1,145 பேர் கலந்து கொண்டனர். மொத்தம் 425 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, இடத்திலேயே சலுகைகள் வழங்கப்பட்டன. இங்கு ஆண்டுக்கு ரூ.2.4 லட்சம் பேக்கேஜ் அதிகமாக இருந்தது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்திலும் சில சலுகைகள் வழங்கப்பட்டன. வேலை வாய்ப்பு இயக்கத்தில் மொத்தம் 24 நிறுவனங்கள் பங்கேற்றன, மேலும் 967 விண்ணப்பதாரர் களுக்கு இடத்திலேயே சலுகைகள் வழங்கப்பட்டன. அதிகபட்சமாக ஆண்டுக்கு ரூ.3 லட்சம் வழங்கப்பட்டது. கள்ளக்குறிச்சியில் வேலை வாய்ப்புக்காக 3,129 பேர் பதிவு செய்துள்ளதாகவும், 1,701 பேர் பங்கேற்றதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரியலூர் வேலை வாய்ப்பு இயக்ககத்தில், நேர்காணல் நாளில் 1,990 பேர் பதிவு செய்து 561 பேர் வந்திருந்தனர். சுமார் 50 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர், 426 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**முதல்வரின் சமூக வலைதளப் பதிவு**

கழக அரசின் இந்த சாதனைத் திட்டம் படைத்துள்ள புரட்சிகர விளைவுகளை ‘தி இந்து’ ஆங்கில ஏடு செய்தியாக்கி வெளியிட்டுள்ளது கண்டு மகிழ்ந்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட, ‘எக்ஸ்’ வலைதளப் பதிவு வருமாறு:-

**மனநிறைவு தரும் செய்தி!**

**இந்த வெற்றிப் பயணம் தொடரும்...**

**தலைமுறைகள் பல முன்னேற்றம் காண முதல் தலைமுறைப் பட்டதாரிகள் அனைவரும் நல்ல வேலைக்குச் செல்ல வேண்டும் என்பதே நமது ‘திராவிட மாடல்’ அரசின் நோக்கம்! நமது திட்டங்களால் அந்த நோக்கத்தை நிறை வேற்றுவோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வலைதளப் பதிவிட்டுள்ளார்கள்.

# ரூ.8.65 லட்சம் கோடி முதலீடுகள் ஈர்ப்பு!

... முதல் பக்கத் தொடர்ச்சி!

நான்காம் கட்டமாக 27.1.2024 அன்று புறப்பட்டு ஸ்பெயின் நாட்டிற்குச் சென்று அங்குள்ள பொருளாதாரம் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சக அதிகாரிகள், ஸ்பெயின் தொழில் கூட்டமைப்பு பொறுப்பாளர்கள், இன்வெஸ்ட் ஸ்பெயின் என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள் ஆகியோரைச் சந்தித்து தமிழ்நாட்டிலுள்ள தொழில் வாய்ப்புகளையும், அரசு வழங்கும் சலுகை களையும், கிடைக்கும் திறன் வாய்ந்த மனித வளத்தையும் எடுத்துக் கூறி, தமிழ்நாட்டில் தொழில் தொடங்கிட வருமாறு முதலமைச்சர் அவர்கள் அழைப்பு விடுத்தார் கள். அவற்றின் பயனாக ரூ.3,440 கோடி ரூபாய் அளவிற்குத் தொழில் முதலீடு களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

**“நியூயார்க் டைம்ஸ்” பாராட்டு!**

தமிழ்நாடு குறித்தும், தமிழ்நாடு அரசு குறித்தும் உலகளாவிய தொழில் நிறுவனங்களுக்கு உள்ள நம்பிக்கையை இது காட்டுகிறது. தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியையும், தமிழ்நாட்டின் பொருளாதார மேம்பாட்டையும் புகழ்ந்து உலக அளவில் முக்கியப் பத்திரிகையான ‘நியூயார்க் டைம்ஸ்’ செய்தி வெளியிட்டு பாராட்டியது.

‘ஆண்டுவாரி முதலீட்டா ளர்கள் சந்திப்பு 2022 நடைபெற்றபோது ஆசிய ஓசியான மண்டலத்திற்கான சிறந்த முதலீட்டு நிறுவனத் திற்குரிய விருது தமிழ்நாடு அரசின் வழிகாட்டி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

புதிய தொழில் முதலீட்டாளர்கள் ஒப்பந்தங்கள் செய்துள்ள நிலையில் தமிழ்நாட்டைப் பெரிய அளவில் தொழில்மயமாக்க அடுத்த 5 ஆண்டுகளில் 45,000 ஏக்கர் பரப்பளவில் நில வங்கி உருவாக்கப்படுகிறது. இதற்காக, சிப்காட் நிறுவனம் ஏறத்தாழ 33,489 ஏக்கர் நிலம் தெரிவு செய்துள்ளது. இதில், 22,941 ஏக்கர் நிலம் அரசின் நிருவாக அனுமதி பெற்று கையகப்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின், இதுவரை 44 தொழிற்சாலைகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. 27 தொழிற்சாலைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலமாக 74 ஆயிரத்து 757 இளைஞர்கள் மற்றும் மகளிர்க்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப் பட்டுள்ளன.

**தமிழ்நாட்டில் அடுத்தடுத்து தொழிற்சாலைகள் உருவாக்கம்!**

இப்படித் தொழில் முதலீடு களுக்கான ஒப்பந்தங்கள் செய்யப்படுவதுடன், ஒப்பந்தங்கள் தொழில் நிறுவனங்களாக உருப்பெறத் தேவையான நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்காக முதலமைச்சர் அவர்கள் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் குழு ஒன்றை அமைத்துள்ளார்கள். இந்த குழுவின் தொடர் நடவடிக்கைகளின் மூலம் பல தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் அடுத்தடுத்து உருவாகும் வாய்ப்பு உள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடைய 33 மாத ஆட்சிக் காலத்தில் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வாயிலாக ரூபாய் 8.65 இலட்சம் கோடி முதலீடுகள் வருவதற்கான வாய்ப்பு ஏற்பட்டு, அதன் மூலம் ஏறத்தாழ 30 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இது முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சிக்காலம் ஒரு மாபெரும் தொழிற் புரட்சிக்கான அடித்தளம் என்பதை வெளிப்படுத்துகிறது.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# ஒன்றிய அரசின் பாகுபாடான வரிப் பகிர்வு!

## மாநிலங்களவையில் புள்ளி விவரங்களுடன் பி.வில்சன் தகவல்!



ஒன்றிய அரசின் வரிப்பகிர்வு கொள்கை மூலம், வரி அதிகம் செலுத்தும் தென் மாநிலங்களுக்கு வரிப்பகிர்வு குறைவாகவும், வரி குறைவாக செலுத்தும் வட மாநிலங்களுக்கு அதிக வரிப் பகிர்வும் அளிக்கப்படுவது குறித்து வில்சன் எம்.பி. மாநிலங்களவையில் பதிவிட்டுள்ள தகவல்கள் மக்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

பொதுவாக மத்தியில் ஆளும் அரசு தென் மாநிலங்களை புறக்கணிப்பதாகவும், இதனால் வடக்கே வாழ்கிறது தெற்கே தேய்கிறது என தமிழ்நாட்டில் ஆட்சி செய்த அரசியல்வாதிகள் தெரிவித்து உள்ளனர். சமீபகாலமாக, இந்த விவகாரம் மீண்டும் தலைதூக்கத் துவங்கி உள்ளது. அதிக வரி செலுத்தும் மாநிலங்களான தென் மாநிலங்களுக்கு, வட மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் ஒன்றிய அரசு குறைந்த அளவே வரிப் பகிர்வு அளிப்பதாக எழும் குற்றச்சாட்டே இந்த விவகாரத்திற்கு முக்கிய காரணம்.

இந்நிலையில், இந்த விவகாரம் பூதாகரமானதற்கு காரணமாக, தமிழ்நாடு அரசு கோரிய வெள்ள நிவாரணத் தொகையை ஒன்றிய அரசு வழங்காததுதான் என கூறப்படுகிறது. தமிழ்நாட்டில் 2023ஆம் ஆண்டு சென்னை, வட மாவட்டங்கள் மற்றும் தென்மாவட்டங்களில் மழை வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நிவாரணம் அளிக்கக் கோரி ஒன்றிய அரசிடம் தமிழ்நாட்டில் அரசு கோரிக்கை விடுத்திருந்த நிலையில், ஒன்றிய அரசின் குழுவினரும் வெள்ளப் பாதிப்புகளை நேரில் வந்து ஆய்வு செய்திருந்தனர்.

இந்நிலையில், நாடாளுமன்றத்தில் நடைபெற்று வரும் இடைக்கால பட்ஜெட் கூட்டத்தொடரில், பிப்ரவரி 2ஆம் தேதி பேசிய திருப்பெரும்புதூர் எம்.பி.யும், திமுக நாடாளுமன்ற குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, “வெள்ள நிவாரண பாதிப்புகளை சரி செய்ய தமிழ்நாடு அரசு சார்பில் 37 ஆயிரம் கோடி கேட்டு ஒரு பைசா கூட வழங்கவில்லை. ஒன்றிய அரசு மாற்றாந் தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்கிறது” எனப் பேசினார். மேலும், நிவாரணம் வழங்காத ஒன்றிய அரசைக் கண்டித்து பிப்ரவரி 8ஆம் தேதி எம்.பி.க்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதாகவும் கூறினார்.

முன்னதாக, வெள்ள நிவாரணத்திற்காக கோரிய தொகை வழங்காததால், அதிக ஜி.எஸ்.டி. வரி செலுத்தும் மாநிலமாக இருந்தும், தங்களுக்கு நிவாரணத் தொகையை வழங்காமல் இருப்பதாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர்களும் தங்கள் கண்டனங்களைத் தெரிவித்திருந்தனர்.

அதேபோல், 1ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்ட மத்திய இடைக்கால பட்ஜெட்டில் அநீதி இழைக்கப்பட்டிருப்பதாக கர்நாடக மாநில காங்கிரஸ் குற்றம் சாட்டி இருந்தது. மேலும், வரிப் பகிர்வில் இதே நிலை நீடித்தால், தென் மாநிலங்களுக்கு தனி நாடு கேட்கும் நிலை ஏற்படும் என காங்கிரஸ் எம்.பி .டி.கே.சுரேஷ் பகிரங்கமாகத் தெரிவித்தார்.

இந்நிலையில், முறையான வரிப்பங்கீடு செய்யாததாக ஒன்றிய அரசுக்கு எதிராக பிப்ரவரி 7ஆம் தேதி டெல்லியில் கர்நாடக காங்கிரஸார் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், கேரளாவின் கடன் வாங்கும் வரம்பு, வருவாய் பற்றாக்குறை மானியத்தைக் குறைத்ததற்காக கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் தலைமையில், டெல்லி ஜந்தர் மந்தரில் எம்எல்ஏக்கள் மற்றும் எம்பிக்கள் ஒன்றிய அரசுக்கு எதிராக நேற்று (பிப்.8) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒன்றிய அரசின் நிதிப் பகிர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து தென் மாநிலங்களான கர்நாடகா, தமிழ்நாடு, கேரளா ஆகிய மாநில அரசுகள் போராட்டத்தில் இறங்கியுள்ள நிலையில், ஒன்றிய அரசுக்கு மாநிலங்கள் அளிக்கும் ஜி.எஸ்.டி. வரி மற்றும் அதில் இருந்து மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு வழங்கும் வரிப் பகிர்வு குறித்து புள்ளி விவரங்களுடன் திமுக மாநிலங்களவையில் வில்சன், அவரது X சமூக வலை தளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அவரது பதிவில், “ஜிஎஸ்டி மற்றும் நேரடி வரியில், ஒன்றிய அரசு தென் மாநிலங்களுக்கு எதிராக பாகுபாடு காட்டுகிறது. தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா, கேரளா, கர்நாடகா போன்ற தென் மாநிலங்கள், ஜிஎஸ்டி மற்றும் நேரடி வரிகளுக்கு கடந்த 5 ஆண்டுகளில் பங்களித்த மொத்த வரி ரூ.22 லட்சத்து 26 ஆயிரத்து 983.39 கோடி.

கடந்த ஐந்து ஆண்டுகளில் உத்தரப் பிரதேசத்தால் பங்களிக்கப்பட்ட தொகை ரூ.3 லட்சத்து 41 ஆயிரத்து 817.60 கோடி. கடந்த 5 ஆண்டுகளில் மேலே குறிப்பிட்ட தென் மாநிலங்களுக்கு விடுவிக்கப்பட்ட மத்திய வரிகள் மற்றும் தீர்வைகள் மொத்தம் ரூ.6 லட்சத்து 42 ஆயிரத்து 295.05 கோடி. உத்தரப் பிரதேசத்திற்கு விடுவிக்கப்பட்ட தொகை ரூ.6 லட்சத்து 91 ஆயிரத்து 375.12 கோடி” எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒவ்வொரு மாநிலத்தில் இருந்தும் பெறப்பட்ட வரி விவரம் குறித்தும், வரி ஒதுக்கீடு குறித்தும் மாநிலங்களவையில் வில்சன் எழுப்பிய கேள்விகளுக்கு, ஒன்றிய நிதித்துறை இணை அமைச்சர் பங்கஜ் சவுத்ரி பதில் அளித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

அதில் ஒவ்வொரு மாநிலமும் செலுத்திய ஒரு ரூபாய் அடிப்படையில், மத்திய அரசு திருப்பி அளித்த தொகை குறித்த விவரங்களை பதிவிட்டுள்ளார். அதில், “தமிழ்நாடு 26 பைசா, கர்நாடகா 16 பைசா, தெலங்கானா 40 பைசா, கேரளா 62 பைசா, மத்தியப் பிரதேசம் 1 ரூபாய் 70 பைசா, உத்தரப் பிரதேசம் 2 ரூபாய் 2 பைசா, ராஜஸ்தான் 1 ரூபாய் 14 பைசா” திரும்ப கிடைப்பதாக பதிவிட்டுள்ளார்.

ஒன்றிய அரசின் வரிப் பகிர்வு குறித்த இந்த தகவல் தற்போது மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# செயற்கை நுண்ணறிவு மாபெரும் புரட்சிக்குத் தயாராகி வருகிறது!

## ‘கணித்தமிழ்’ மாநாட்டில் - அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் உரை!

சென்னை, பிப். 10 -

சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில், பன்னாட்டு கணித்தமிழ் மூன்று நாள் மாநாடு நேற்று முன்தினம் துவங்கியது. மாநாட்டை துவக்கி வைத்து அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பேசியதாவது:-



கணினி தொழில்நுட்பம் என்பதை கடந்து, அதன் மற்றொரு எல்லையை நாம் தொட்டிருக்கிறோம். ஏ.ஐ., எனப்படும், செயற்கை நுண்ணறிவு வாயிலாக, கல்வி துறையில் பெரும் மாற்றம் வரலாம்; மருத்து வம், தொழிற்சாலை களுக்கும், இது வரமாக அமையும்.

இந்த தொழில்நுட்பத்தில், மொழியின் பங்கு முக்கியம். அதன் வாயிலாகவே, இந்த நுண்ணறிவை நாம் பயன்படுத்தி பயன் பெற போகிறோம். அந்தத் தேவைகளுக்கு ஏற்ற வகையில், நம்மையும், நம் மொழியையும் தயார்படுத்தும் நோக்கில், இந்த மாநாடு நடத்தப்படுகிறது.

இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ள கருத்துக்கள் தான், ஏ.ஐ., யுகத்தில் தமிழின் திசையை தீர்மானிக்க போகின்றன. செயற்கை நுண்ணறிவானது மாபெரும் புரட்சிக்கும், பெரும் பாய்ச்சலுக்கும் தன்னைத் தயார்படுத்தி வருகிறது.

உலகெங்கிலும் ஏ.ஐ., பற்றி வரும் தகவல்கள், நாம் கற்பனை செய்து பார்க்க முடியாத செயல்களை எல்லாம், எதிர்காலத்தில் சாதித்துக் காட்டும் என்று கூறப்படுகிறது. அப்படி அந்தத் தொழில்நுட்பம் வளரும்போது, தமிழ் மொழியில், அதற்கான தரவுகள் கிடைக்கும் போது, நமக்கு அதனால் பயன் அதிகமாக கிடைக்கும்.

இது, தரவுகளின் காலம். இங்கே எவ்வளவுக்கு எவ்வளவு தரவு உள்ளதோ; அவ்வளவுக்கு அவ்வளவு அந்த மொழி முன்வரிசைக்கு செல்லும். அதற்கு நாம் அனைவரும் உழைக்க வேண்டும்.

தமிழ் மொழியின் கடந்த கால பெருமைகளைப் பேசி, நாம் ஓய்ந்துபோய்விடக் கூடாது. காலத்தின் வேகத்திற்கு ஈடுகொடுத்து ஓடுவதற்கான ஆற்றலை, தமிழ் மொழியிடமிருந்து பெற வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாக ராஜன் பேசினார்.


மூன்றாம் ஆண்டு நினைவு நாள்



இரா.விசுவநாதன்

முன்னாள் அவைத் தலைவர், 105 வது வட்டம் அண்ணாநகர் பகுதி – தி.மு.க

மறைந்த நாள்: 10.02.2021

என்றென்றும் தங்கள் வழியில்
இருவண்ணக் கொடி நிழலில்...

திருமதி. கிருஷ்ணவேணி விசுவநாதன்

வி.நந்தகுமார் பி.ஏ.,
ந.கவிதா
ந.சூர்யா பி.காம்.,
ந.மாதங்கி

வி.நன்மாறன் பி.எஸ்சி.,பி.எல்.,
கூடுதல் அரசு வழக்குரைஞர், சென்னை உயர்நீதி மன்றம்
ஆ.கலைமதி பி.ஏ.,பிஎட்.,
ந.க.இயல் பி.எஸ்சி.,
ந.க.இசை




இராமநாதபுரத்தில் 08.02.2024 அன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், ஊரகவளர்ச்சி மற்றும் ஊரகவளர்ச்சித்துறையின் மூலம் மாவட்டச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., ஆட்சித்தலைவர் பா.விஷ்ணு சந்திரன், சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக்கடன் இணைப்பு வழங்கினர். இதில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவர் உ.திசைவீரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஈரோட்டில் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு கடனுதவி - பல்வேறு நலத்திட்ட உதவிகள் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!


















பெண்களின் முன்னேற்றத்திற்கு பொருளாதார சுதந்திரமே தொடக்கப்புள்ளி என்பதை உணர்ந்து மகளிர் முன்னேற்றத்துக்காக கழக அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், தமிழ்நாடெங்கும் உள்ள மகளிர் சுய உதவிக்குழுக் களுக்கு ரூ.2,504 கோடி அளவுக்கு வங்கி கடன் இணைப்புகளை வழங்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். அதன் ஒரு பகுதியாக, தந்தை பெரியார் பிறந்த ஈரோடு மண்ணில் 2,337 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 20,500 மகளிருக்கு ரூ.100.34 கோடி வங்கி கடன் இணைப்புகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். மேலும், மகளிர் சுய உதவிக் குழு சகோதரிகள் தயாரிக்கும் பொருட்களை ஏற்றிச் சென்று விற்பனை செய்திடும் வகையில், ரூ.3.20 கோடி மதிப்பில் 100 மதி எக்ஸ்பிரஸ் மின் வாகனங்கள் வழங்கப்படுவதன் அடையாளமாக, 6 மின் வாகனங்களை ஈரோட்டைச் சேர்ந்த மகளிருக்கு வழங்கி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் போன்றவற்றின் கீழ் பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி பெண்களின் சுயசார்பு பொருளாதாரத்தை உறுதி செய்வதிலும், அவர்களின் வளர்ச்சியிலும் நமது திராவிட மாடல் அரசு என்றென்றும் உறுதியுடன் செயல்படுமென அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தி உரை நிகழ்த்தினார். அப்போது அமைச்சர் சு.முத்துசாமி, மாவட்டச் செயலாளர் என்.நல்லசிவம், துணை பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி., ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் எம்.எல்.ஏ., வெங்க டாசலம் எம்.எல்.ஏ., உள்பட அரசு அதிகாரிகள், கழக முன்னணியினர் உடனிருந்தனர்.

### கூட்டாட்சி உருக்குலைந்த நாட்டை பிரதமர் மோடி உருவாக்குகிறார்!

# நாடாளுமன்றத் தேர்தலில் ‘இந்தியா’ கூட்டணி வெற்றி பெறும்!

## மாநிலங்களவையில் திருச்சி சிவா பேச்சு!

**புதுடெல்லி, பிப். 10-**
**கூட்டாட்சி உருக்குலைந்த நாட்டை பிரதமர் மோடி உருவாக்கி வருகிறார் எனவே வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ‘இந்தியா’ கூட்டணி வெற்றி பெற்று நாட்டை அதன் உண்மையான இடத்திற்கு கொண்டு வரும் என்று மாநிலங்களவையில் கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா, குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.**

அவர் பேசியது வருமாறு:

ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட சில ஆளுநர்களை போல் அல்லாமல், ஒன்றிய அரசால் கொடுக்கப்பட்ட குறிப்பை, மரபுக்கு மீறி எவ்வித திருத்தமும் செய்யாமல் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் வாசித்த குடியரசு தலைவருக்கு நன்றி சொல்லி என் உரையை தொடங்குகிறேன்.

இந்த அரசு கூட்டாட்சிக்கு எதிரானது, மதச்சார்பின்மைக்கு எதிரானது, ஏழைகளுக்கு எதிரானது, பணக்காரர்களுக்கு ஆதரவானது, பெண்களுக்கு எதிரானது, சிறு தொழில்களுக்கு எதிரானது, பொதுத்துறை நிறுவனங்களுக்கு எதிரானது, பெரு முதலாளிகளுக்கு ஆதரவானது, விவசாயிகளுக்கு எதிரானது, தொழிலாளர்களுக்கு எதிரானது, ஒன்றிய ஒன்றிய அரசுக்கு ஆதரவானது, மாநில அரசுகளுக்கு எதிரானது! ஏன் நான் இவற்றையெல்லாம் சொல்கிறேன்?

அரசுக்கு எதிரான இந்த குற்றச்சாட்டுகளை தவிர்த்து விட்டு செல்ல முடியாது! மேலும் இவை அடிப்படை ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுகளும் அல்ல!

இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் மாநிலக் கட்சிகளையும், உள்ளூர் பிரச்சனைகளையும் குறைத்து மதிப்பிடுவதற்கான முயற்சிகள் பட்டவர்த்தனமாக செய்யப்படுகின்றன.

இந்த அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்து கொள்வதற்கு நாங்களே அனுபவப்பட்ட சாட்சி. உதாரணத்திற்கு வருவாய் அதிகார பங்கீட்டை எடுத்துக் கொள்ளுங்கள். 14ஆவது நிதிக் குழு 42 சதவீதம் பரிந்துரை செய்துள்ளது. ஆனால் நாம் அவ்வளவு பெறுவது இல்லை. அது 34 சதவீதம் பிறகு 31.3 சதவீதம் எனக் குறைந்து தற்போது மிகவும் குறைவாக 25 சதவீதம் பெறுகிறோம்.

2021-22 ஆம் நிதி ஆண்டில் ஒரு லட்சத்து 70 ஆயிரம் கோடியாக இருந்தது அடுத்த ஆண்டு குறைந்து, ஒரு லட்சத்து 40 ஆயிரம் கோடியாகி, தற்போது ஒரு லட்சத்து 24 ஆயிரம் கோடி ஆகிவிட்டது. தமிழ்நாடு ஒன்றிய அரசுக்கு மிகப் பெரிய அளவில் நேரடி வரியை வழங்கி வருகிறது. ஆனால் நாங்கள் தமிழ்நாட்டில் இருந்து ஒரு ரூபாய் ஒன்றிய அரசுக்கு வரியாக செலுத்தினால் பங்கீட்டுத் தொகையாக 29 பைசா மட்டுமே திரும்ப கிடைக்கிறது. ஆனால் இதே உத்தரபிரதேசத்தை எடுத்துக் கொண்டால் அவர்கள் ஒரு ரூபாய் வரியாக கட்டி இரண்டு ரூபாய் 73 பைசா பங்கிட்டு தொகையாக திரும்பப் பெறுகிறார்கள்.

**இது என்ன ஏற்றத்தாழ்வு? ஏன் இந்த பாகுபாடு?**

இது என்ன ஏற்றத்தாழ்வு? ஏன் இந்த பாகுபாடு? ஒரே நாடு என்கிறீர்கள், அனைவரும் சமம் என்கிறீர்கள், பிறகு ஏன் இந்த துரோகம்? ஜிஎஸ்டி நடைமுறையை எடுத்துக் கொண்டால் உத்தேசமாக தமிழ்நாட்டுக்கு 20,000 கோடி இழப்பீடு ஏற்படுகிறது. அவசர அவசரமாக ஜிஎஸ்டியை அமல்படுத்தியதன் விளைவு இது. நாங்கள் ஏராளமாக அனுபவித்து விட்டோம்.

சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு மக்களுக்கு எது தேவையோ அதை சட்டமாக சட்டமன்றத்தில் நிறைவேற்றுகிறது. ஆனால் அப்படி நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை அனுமதி பெறுவதற்கோ சட்டமாக மாற்றுவதற்கோ குறுக்கீடாக தடையாக ஆளுநர் மாளிகை இருக்கிறது . இதனால் அதிலும் குறிப்பாக எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்கள் சட்டங்களை நிறைவேற்ற தடுமாறி வருகின்றன. எங்கெல்லாம் எதிர்க்கட்சிகள் ஆளுகிறதோ, அங்கெல்லாம் இந்த ஒன்றிய அரசின் கங்காணிகள் நுழைந்து மாநிலஅரசை செயல்பட விடாமல் அவர்களின் கைகளை கட்டிப்போட்டுள்ளன.



மிக முக்கியமாக தற்போது தமிழ்நாட்டில் மிகப் பெரிய வெள்ளச் சேதம். முதலில் புயலாக புறப்பட்டு பின்பு பெருமழையாக மாறியது .தென் மாவட்டங்களும் தலைநகர் சென்னையும் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டன . நாங்கள் உடனடி நிவாரண நிதியாக 5000 கோடி ரூபாய் கேட்டோம் ஆனால் 450 கோடி தந்தார்கள் கேட்டதில் பத்து சதவீதம் கூட தரவில்லை. பிறகு பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் நேரில் சம்பவ இடங்களுக்கு வந்து அங்கு என்ன நடந்துள்ளது என்பதை பார்வையிட்டார்.

பிரதமரை தமிழ்நாடு முதலமைச்சர் நேரில் சந்தித்து சேதமதிப்பீடு ரூபாய் 37 ஆயிரத்தை உடனடியாக விடுவிக்க கேட்டுக் கொண்டார் ஆனால் எதுவும் நடக்கவில்லை. பிறகு நாடாளுமன்றத்தின் அனைத்து கட்சி குழு சென்று உள்துறை அமைச்சரை சந்தித்து இழப்பீடு வழங்குமாறு சொன்னது. செய்வதாகச் சொன்னார் உள்துறை அமைச்சர். ஆனால் செய்யவில்லை. நெருக்கடியான இப்படிப்பட்ட நேரங்களிலும் கூட எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்கள் எவ்வாறு மோசமாக பாதிக்கப்படுகின்றன என்பதற்கு அவர்களே சாட்சியாக இருக்கிறார்கள். இது ஒன்றிய அரசு மாநில அரசை நடத்தும் கூட்டாட்சி தத்துவத்திற்கு முரணானது. ஆகையால்தான் நான் இந்த அரசை கூட்டாட்சி தத்துவத்திற்கு முரணான அரசு என்று குற்றம் சாட்டுகிறேன். இது சாதாரணமாக அவர்கள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டு மட்டுமல்ல இதுவே உண்மை.

**மாநிலங்களின் கருத்தை ஒன்றிய அரசு கேட்பதில்லை!**

உதாரணத்திற்கு எனது அண்டை மாநிலமான ஆந்திர பிரதேசத்தை எடுத்துக் கொள்வோம். கடந்த பத்து ஆண்டுகளாக கட்சிப் பாகுபாடு இன்றி இதை நான் கேட்டு வருகிறேன். ஆந்திர பிரதேச மறுசீரமைப்புச் சட்டம் 2014க்கு பிறகு அவர்கள் தங்கள் மாகாணத்துக்கு சிறப்பு அந்தஸ்து கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். போலாவரம் திட்டம் நமக்கு மிகவும் அறிமுகமான ஒன்று. ஆனால் அது சம்பந்தமாக எதுவுமே கவனத்தில் கொள்ளப்படவில்லை காரணம் அங்கு பிஜேபி ஆட்சியில் இல்லை. பத்தாண்டுகள் ஓடி விட்டன. ஆனால் இன்னும் அவர்கள் தங்கள் மாகாணத்துக்கு சிறப்பு அந்தஸ்து கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள் எதுவும் நடக்கவில்லை. இப்படித்தான் மாகாணங்கள் கூறுகின்ற எதையும் காதிலே கேட்காமல் இந்திய அரசு நடந்து கொள்கிறது. இது நியாயமான முறை அல்ல என்று நாங்கள் சொல்லுகிறோம்.

ஏன் நான் மதச்சார்பின்மைக்கு முரணான அரசு என்று சொல்கிறேன்? குடியுரிமை திருத்தச் சட்டத்தை நான் நினைவிற்கு கொண்டு வர விரும்புகிறேன். மத ரீதியாக துன்புறுத்தப்பட்டு அண்டை நாடுகளிலிருந்து அகதியாக வருபவருக்கு மிகவும் நேர்மையாக, ரொம்ப தாராளமாக குடியுரிமை அளிக்கப்படுவதாக வெளிப்படையாக தெரிந்தது. ஆனால் அந்த மசோதா சட்டமாக்கப்படும் போது தெளிவாகச் சொல்லியது என்னவென்றால் 2014க்கு முன் பதிவு செய்யப்பட்டவர்கள்,மூன்று அண்டை நாட்டிலிருந்து வந்தவர்கள், ஐந்து மதத்தைச் சார்ந்தவர்களுக்கு மட்டுமே குடியுரிமை வழங்கப்படும் என்று சொல்லியது. அந்த மூன்று அண்டை நாடுகள் பாகிஸ்தான் பங்களாதேஷ் மற்றும் ஆப்கானிஸ்தான். அந்தக் குறிப்பிட்ட ஐந்துமதம் இந்துக்கள் கிறிஸ்தவர்கள் பார்சிகள் சீக்கியர்கள் மற்றும் பௌத்தர்கள். எங்களுடைய கேள்வி என்னவென்றால் தாராளமாக குடியுரிமை வழங்கப்படும் பொழுது மதரீதியாக துன்புறுத்தப்படுபவர்கள் பட்டியலில் இருந்து இஸ்லாம் மதத்தை சேர்ந்தவர்களை மட்டும் ஏன் தவிர்த்தீர்கள்? மூன்று அண்டை நாட்டைச் சேர்ந்தவர்கள் என்றால் நீங்கள் ஏன் மற்றொரு அண்டை நாடான இலங்கையை தவிர்த்து விட்டீர்கள் ? இலங்கையில் இருந்து வந்து ஒன்றரை லட்சம் தமிழர்கள் இங்கே குடியுரிமை இல்லாமல் வாழ்கிறார்கள். குடியுரிமை இல்லாமல் அவர்கள் ஒவ்வொரு நாளும் அனுபவிக்கும் சித்திரவதைகளை இங்கே விவரிக்க முடியாது. பலமுறை அவற்றை நாங்கள் இங்கே கவனத்திற்கு கொண்டு வந்துள்ளோம் ஆனால் கவனிக்கப்படவில்லை. அதனால் அந்த மசோதாவிற்கு நான் இங்கு ஒரு திருத்தம் கொண்டு வந்தேன். மத மற்றும் இன அடிப்படையில் ஆன ஒடுக்குமுறைக்கு ஆளான அண்டை நாட்டில் இருந்து வருபவர்கள் என்று சேர்த்து அதில் நான்காவது நாடாக இலங்கையையும் ஆறாவது மதமாக இஸ்லாமையும் சேர்த்துக் கொள்ள திருத்தம் கொண்டு வந்தேன் .அந்தத் திருத்தம் இந்த அரசால் இங்கே தோற்கடிக்கப்பட்டது.

முத்தலாக் மசோதா கொண்டு வரப்பட்டபோது அந்த மசோதா இஸ்லாமிய பெண்களுக்கு ஆதரவானது என்று சொல்லப்பட்டது. எல்லோரும் ஓ அப்படி இருக்கட்டும் என்று சொன்னார்கள். ஆனால் உண்மையில் அது இஸ்லாமிய ஆண்களை பலிகடாவாக்கும் ஒரு மசோதா. அரசாங்கம் கொண்டுவரக்கூடிய ஒரு மசோதா பாதுகாக்க கூடிய மசோதாவாக இருக்க வேண்டுமே தவிர பலிகடாவாக்கக் கூடிய மசோதாவாக இருக்கக் கூடாது .நான் விதவைகளின் நல்வாழ்வுக்காக ஒரு தனி நபர் மசோதா கொண்டு வந்தேன்.

துணைத் தலைவர் அவர்களே இந்தியாவில் நாலரை கோடி விதவைகள் இருக்கிறார்கள் பிருந்தாவனில் மட்டும் 20 முதல் 60 வயதுக்கு உட்பட்ட ஒன்றரை லட்சம் விதவைகள் இருக்கிறார்கள். அவர்கள் நாதியற்றவர்கள். அவர்கள் பிச்சை எடுக்கிறார்கள், ரிக்ஷா இழுக்கிறார்கள், சிலரால் சுரண்டப்படுகிறார்கள் . தமிழ்நாட்டில் விதவைகளுக்காக பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. நான் தகவலுக்காக சொல்லுகிறேன் இந்த அவையில் நான் கொண்டு வந்த அந்த விதவைகளுக்கான மசோதா தோற்கடிக்கப்பட்டது.

பெண்களின் நலனுக்காக, அதிலும் குறிப்பாக இஸ்லாமிய பெண்களின் நலனுக்காக முத்தலாக் மசோதா கொண்டுவரப்படுவதாக சொல்கிறீர்கள் ஆனால் உண்மை அது அல்ல. நீங்கள் இஸ்லாமிய ஆண்களை தண்டிப்பதற்காக இந்த முத்தலாக் மசோதாவை கொண்டு வருகிறீர்கள். பெண்களின் நலனில் உண்மையிலேயே அக்கறை கொண்டவர்களாக இருந்தால் ஏன் விதவைகள் நல்வாழ்வுக்காக நான் கொண்டு வந்த மசோதாவை ஆதரிக்கவில்லை. இது இரட்டை நிலைப்பாடு.

**மகளிர்க்கு எதிரான ஒன்றிய அரசு!**

பெண்கள் இட ஒதுக்கீடு மசோதா கொண்டுவரப்பட்ட போது பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் நீண்ட நாள் ஆசை நிறைவேறியதாகச் சொன்னார்கள். ஆனால் எப்பொழுது?மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்த பிறகு , தொகுதி வரையறை செய்து முடித்த பிறகு! இவையெல்லாம் செய்வதற்கு நீண்ட காலம் பிடிக்கும். இது வேகமாக ஓடச் செய்ய குதிரைக்கு முன் நீட்டும் கேரட்டை போல உள்ளது. இவர்கள் பெண்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டது போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள், ஆனால் உண்மை அது அல்ல. நீங்கள் உண்மையிலேயே பெண்கள் நலனில் அக்கறை கொண்டவர்களாக இருந்தால், இந்த அரசுக்கு நான் பரிந்துரைக்கிறேன் நீங்கள் அவ்வளவு தூரம் செல்ல வேண்டியதில்லை.

மீண்டும் சொல்கிறேன் என்னுடைய மாநிலமான தமிழ்நாட்டில் பெண்களுக்கு வேலைவாய்ப்பில் 40 சதவீத இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது. ஏன் நீங்கள் கொடுக்கவில்லை? ஏன் நீங்கள் கொடுக்கக் கூடாது?என்னுடைய தனிநபர் மசோதா கிடப்பில் கிடக்கிறது. அதனால் தான் நான் சொல்கிறேன். இந்த அரசு பெண்களுக்கு எதிரானது. மதச்சார்பின்மைக்கு எதிரானது . நாட்டு பிரிவினையின் போது அனைத்து முஸ்லிம்களும் என்னோடு பாகிஸ்தானுக்கு வாருங்கள் என்று முகமது அலி ஜின்னா அழைத்தார். ஆனால் இங்குள்ள முஸ்லிம்கள் நாங்கள் முஸ்லிம்கள்தான், ஆனால் எங்களது தாய் நாடு இந்தியா என்று இங்கேயே இருந்து விட்டார்கள். இந்த நாட்டுக்காக தியாகங்கள் செய்கிறார்கள் .எத்தனையோ முஸ்லிம்கள் இராணுவத்தில் பணியாற்றுகிறார்கள்.

அப்துல் கலாமை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். நாட்டில் அனைவரும் பாதுகாப்பாக இருப்பதை உணர வேண்டும் ஆனால் இங்கு அப்படி இல்லை. இவை அனைத்தையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவை அனைத்தையும் அடிப்படை காரணங்களாக கொண்டு தான் நான் இது மதச்சார்பின்மைக்கு எதிரான அரசு என்று சொல்லுகிறேன். இந்த அரசின் அணுகுமுறையை பொறுத்து தான் இது பெண்களுக்கு எதிரான அரசு என்று நான் சொல்லுகிறேன்.

என்னுடைய சக நாடாளுமன்ற உறுப்பினர் இந்த பலவற்றை மேற்கோள்காட்டினார். மக்கள் தொகை அடிப்படையில் சமமாக இருக்கின்ற இந்தியாவையும் சீனாவையும் தனிநபர் வருமான அடிப்படையில் ஒப்பிட்டால் , இந்தியாவின் அளவு சீன தனிநபர் வருமானத்தில் நான்கில் ஒரு பங்கு ஆகும். நாட்டின் மீது அக்கறை கொண்டவனாக ஒரு நல்ல குடிமகனாக ஒரு நல்ல நாடாளுமன்ற உறுப்பினராக நான் ஒரு அதிர்ச்சி தரத்தக்க செய்தியை இங்கே சொல்ல விரும்புகிறேன். பட்டினி குறியீட்டில் உலகத்தில் 139 வது இடத்தில் இந்தியா உள்ளது.

ஜி-20 மாநாட்டை மிகவும் வெற்றிகரமாக நடத்தி முடித்து விட்டீர்கள் .ஆனால் ஜி 20 உறுப்பினராக உள்ள நாடுகளிலேயே மிகக் குறைந்த தனிநபர் வருமானம் கொண்ட நாடு இந்தியா. 22 கோடி மக்கள் இந்தியாவில் வறுமையில் உழல்கிறார்கள்.குடியரசுத் தலைவர் உரையில் கூட Garibi hatao என்ற கோஷம் இருக்கிறது. ஆனால் நாங்கள் 25 கோடி ஏழை மக்களை வறுமையில் இருந்து மீட்டு விட்டோம் என்று சொல்கிறீர்கள் அப்படியானால் இது எங்கிருந்து வந்தது? இன்னும் 22 கோடி மக்கள் வறுமை கோட்டிற்கு கீழே இருக்கிறார்கள்? இது என்ன குறியீடு ? வறுமை கோட்டிற்கு கீழ் என்பதை எந்த அளவுகோலை வைத்து தீர்மானிக்கிறீர்கள்?

**பெருமுதலாளிகளுக்கு ஆதரவானவர்கள்!**

கிராமப்புறத்தில் ஒரு குடும்பத்திற்கு ஒரு நாளைக்கு 27 ரூபாய் வீதம் ஒரு மாதத்திற்கு எண்ணிக்கை 816 ரூபாய். அதுவே நகர்ப்புறத்தில் ஒரு குடும்பத்திற்கு ஒரு நாளைக்கு 33 ரூபாய் வீதம் ஒரு மாதத்திற்கு ஆயிரம் ரூபாய். கற்பனை செய்து பாருங்கள் ஒரு மாதத்திற்கு 800 ரூபாயோ அல்லது ஆயிரம் ரூபாயோ கொண்டு வாழ முடியுமா? குடும்பம் நடத்த முடியுமா ? ஆனால் அரசின் சார்பில் வாசிக்கப்பட்ட குடியரசுத் தலைவர் உரையில் நாங்கள் மக்களை வறுமையில் இருந்து மீட்டெடுத்து விட்டோம், உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதார சக்தியாக இந்தியா இருக்கிறது, விரைவில் மூன்றாவது இடத்திற்கு வந்து விடுவோம் என்றெல்லாம் சொல்லி இருக்கிறீர்கள் . அனைத்துக்கும் இந்த கார்ப்பரேட்டுகளே காரணம். நீங்கள் ஏழைகளுக்கு எதிரானவர்கள் பெருமுதலாளிகளுக்கு ஆதரவானவர்கள்.

நாட்டின் மொத்த வருமானத்தில் 57 சதவீதத்தை 10 சதவீத மக்கள் பெறுகிறார்கள். நாட்டின் செல்வத்தில் 65 சதவீதத்தை 10 சதவீத மக்கள் அனுபவித்து மகிழ்கிறார்கள். நாட்டின் செல்வத்தில் மூன்று சதவீதம் மட்டுமே 50 சதவீத மக்களுக்கு செல்கிறது. இந்நிலையில் எப்படி நீங்கள் மக்களை வறுமைக் கோட்டுக்கு மேலே உயர்த்துவீர்கள். இது என் நாட்டு ஏழைகளின் நிலை. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி அளிப்பு திட்டத்தின் கீழ் 4.14 கோடி பேர் பயன்பெற்றார்கள் தற்போது அது 6.16 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது .கொரோனாவின் போது எத்தனை துறைகள் பாதிக்கப்பட்டன? எதையாவது மீட்டெடுத்தீர்களா? பழைய நிலைக்கு கொண்டு வந்தீர்களா? இல்லை.

ஆனால் அரசாங்கம் சிலரின் ஏகபோகத்துக்கே கவனம் செலுத்துகிறது. அவர்கள் பொருளாதாரத்தையும் அரசின் கொள்கை முடிவையும் கூட கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள் .நான் அவர்கள் யார் என்று சொல்ல விரும்பவில்லை. ஒட்டுமொத்த நாடாளுமன்ற கூட்டத்தொடரே எப்போது பறிபோனது யாருக்காக பறிபோனது என்பது அனைவருக்கும் தெரியும் . சில தனியார் தொழிலதிபர்கள் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள்.

விவசாயத்திற்கு அடுத்தபடியாக 20 கோடி பேருக்கு வேலைவாய்ப்பளிக்கும் குறு தொழில்கள்துறை நாட்டில் முக்கியமான துறை. இத்துறை நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சி வீதத்தில் 29 சதவீதப் பங்களிக்கிறது. ஏற்றுமதியில் 45 சதவீத பங்களிப்பு வகிக்கிறது . நான் தொழில்துறைக்கான நாடாளுமன்ற நிலை குழுவின் தலைவராக இருப்பதால் எனக்கு இதைப் பற்றி நன்றாக தெரியும். நீங்களும் இதைப் பற்றி நன்றாகவே அறிவீர்கள். இந்த சிறு குறு தொழில் துறை போதுமான அளவுக்கு கவனிக்கப்படவில்லை. அதனால் பல தொழில்கள் நசிந்து விட்டன .பலர் வீதிக்கு வந்து விட்டார்கள்.

2300 தனிப்பட்ட கம்பனிகளின் வாராக்கடன் தொகை ரூபாய் இரண்டு லட்சம் கோடி. இந்திய வங்கிகள் பெரு முதலாளிகளுக்கு 5.3 லட்சம் கோடி கடனை தள்ளுபடி செய்துள்ளனர். நம் நாட்டில் மொத்தம் சிறு குறு தொழில் துறையில் 6 கோடி அலகுகள் உள்ளன. இது 18.65 லட்சம் அலகுகள் அல்லது 19 லட்சம் அலகுகள் செயல்படாமல் இருக்கின்றன. இவற்றின் கடன் மதிப்பு 16 ஆயிரத்து 340 கோடி. இந்த 18 அலகு 19 லட்சம் அலகுகளில் வேலை வாய்ப்பு பெற்றவர்கள் சுமார் ஒரு கோடி பேர் . இந்த 16 ஆயிரம் கோடி ரூபாயை இவர்கள் திரும்ப செலுத்தாததால் ஒரு கோடி பேர் வேலை இழந்து 19 லட்சம் அலகுகள் நசிந்து விட்டன. ஆனால் 2300 தொழிலதிபர்கள் 2 லட்சம் கோடி ரூபாயை திருப்பி செலுத்தவில்லை. ஏற்கனவே அவர்களுடைய கடன் 5.3 லட்சம் கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது .இங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு எச்சரிக்கை மணி.

**ரூ.4880 கோடிக்கு விளம்பரங்கள்!**

இந்த அரசு “குறைய அரசு, நிறைய நிர்வாகம்” என்று சொல்லிக் கொண்டிருக்கிறது. ஆனால் குறைந்த சாதனைகள் நிறைய தம்பட்டம் அடிக்கப்படுகிறது . ஆனால் மக்களின் வரிப்பணம் ரூபாய் 4880 கோடி அரசாங்கத்தின் விளம்பரத்திற்காக மட்டுமே செலவு செய்யப்பட்டுள்ளது.

இந்த அவையில் இருக்கிற என் சகாக்கள் அனைவருக்கும் வேளாண் மசோதா எவ்வாறு நிறைவேற்றப்பட்டது என்பதை நினைவு கூற முடியும். பல்வேறு சட்டங்களை நிறைவேற்றி விட்டோம் என்று நீங்கள் பெருமையாக சொல்லிக் கொள்ளலாம். இங்கே பல்வேறு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டிய படி, யாரெல்லாம் அரசாங்கத்திற்கு எதிராக இங்கே குரல் எழுப்பினார்களோ, யாரெல்லாம் அரசின் தவறுகளை சுட்டிக் காட்டினார்களோ, அவர்களையெல்லாம், அந்த எதிர்க்கட்சி உறுப்பினர்களையெல்லாம் அவையை விட்டு வெளியேற்றிவிட்டு நீங்கள் சட்டங்களை நிறைவேற்றினீர்கள். 2014 ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கத்தை சுட்டிக்காட்டினார்கள். அந்த கால கட்டத்தில் 71% மசோதாக்கள் நாடாளுமன்ற குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டன . ஆனால் தற்போது 17 சதவீத மசோதாக்கள் மட்டுமே நாடாளுமன்ற குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்படுகிறது.

ஏன் ஆரம்பத்தில் 71% ஆக இருந்தது தற்போது 17 சதவீதமாக குறைந்துள்ளது. காரணம் என்னவென்றால் மசோதாக்கள் ஆய்வு செய்யப்படுவதை இவர்கள் விரும்பவில்லை. இந்த அவையில் விவாதத்துக்கு ஒரு மணி நேரம் இரண்டு மணி நேரம் 3 மணி நேரம் என ஒதுக்கப்படுகிறது. உறுப்பினர்களுக்கு இரண்டு நிமிடம் மூன்று நிமிடம் என ஒதுக்கப்படுகிறது. ஆனால் நாடாளுமன்ற குழுவின் ஆய்வுக்கு அனுப்பினால் அங்கே விரிவான விவாதம் நடக்கும். நாடாளுமன்ற குழுவின் ஆய்வுக்கு அனுப்பினால், அங்கே பங்குதாரர்கள் நேரடியாக சென்று தங்களது பரிந்துரைகளை செய்யலாம் அந்த பரிந்துரைகள் தீவிரமாக பரிசீலிக்கப்படும் அரசாங்கமும் அங்கு வந்து திருத்தம் செய்வதற்கும் பதிலளிப்பதற்கும் கடமைப்பட்டுள்ளது. ஆனால் இந்த அரசாங்கமோ அனைத்து நாடாளுமன்ற குழுவின் முக்கியத்துவத்தையும் இழக்க செய்துவிட்டது.

விவசாயத்துக்கான நிதிநிலை அறிக்கை ஆண்டுதோறும் குறைந்து கொண்டே வருகிறது ஆனால் உள்துறைக்கும் ராணுவத்துக்கும் மட்டும் நிதிநிலை அறிக்கையில் அதிக நிதி ஒதுக்கப்படுகிறது. அது சரி ஏன் விவசாயத்திற்கான ஒதுக்கீடு மட்டும் குறைந்து கொண்டே செல்கிறது? அவையின் துணைத் தலைவர் அவர்களே விவசாயம் இந்தியாவின் முதுகெலும்பு. மீண்டும் நான் 2008 பொருளாதார மந்தநிலையை நினைவு படுத்த விரும்புகிறேன். அந்தப் பொருளாதார மந்த நிலையால் உலகமே பாதிக்கப்பட்டது. ஐரோப்பாவில் தொடங்கிய அந்த பொருளாதார மந்த நிலை உலகம் முழுவதும் தாக்கத்தை ஏற்படுத்தியது . ஆனால் அந்தப் பொருளாதார மந்த நிலை இந்தியாவை பாதிக்காமல் காத்தது பொதுத்துறை நிறுவனங்களும் வேளாண் துறையுமே ஆகும் . ஆனால் அந்த இரண்டு துறையையுமே தற்போது நீங்கள் நசுக்குகிறீர்கள்.

வேளாண் மசோதா எந்த நோக்கத்திற்காக கொண்டுவரப்பட்டது? ஒரு சில பெரும் முதலாளிகளை ஊக்குவிப்பதற்கு கொண்டுவரப்பட்டது. அதிலும் அந்த மசோதா இந்த அவையில் முறையாக நிறை வேற்றப்படவில்லை. நாடு முழுவதும் விவசாயிகள் வீதிக்கு வந்து போராடிய பின்பு தான் அந்த சட்டம் திரும்ப பெறப்பட்டது. நிதிநிலை அறிக்கையில் விவசாயத்திற்கான ஒதுக்கீடு குறைந்து கொண்டே வருவதோடு மட்டுமல்லாமல் விவசாயிகளின் உற்பத்தி பொருள் ஏற்றுமதிக்கு தடை விதித்தீர்கள். மே மாதம் 2022 ஆவது வருடம் கோதுமை ஏற்றுமதிக்கு தடை விதித்தீர்கள். அதேயாண்டு செப்டம்பர் மாதம் அரிசி ஏற்றுமதிக்கு தடை விதித்தீர்கள் .வெங்காய ஏற்றுமதிக்கு 2022 டிசம்பரில் தடை விதித்தீர்கள். விவசாயிகளை முன்னேற்றவும் இல்லை அவர்களது உற்பத்தி பொருள்களுக்கு ஏற்றுமதிக்கு அனுமதியும் இல்லை அவர்களுக்கு ஆதரவு அளிக்கவும் இல்லை இந்த அரசு. உர விலையும் இடுபொருள்களின் விலையும் உயர்ந்து கொண்டே செல்கிறது . ஆனால் உற்பத்தி பொருட்களின் விலை செலவுக்கு கட்டுபடியாக கூடிய அளவுக்கு இல்லை.

**விவசாயிகளின் வருமானம் உயரவில்லை!**

விவசாயிகளின் வருமானத்தை இரு மடங்கு உயர்த்துவதாக வாக்குறுதி அளித்தீர்கள் அது நடக்கவே இல்லை. ஏழு கோடி பேருக்கு வேலை இல்லை ஆனால் நீங்கள் 7 லட்சம் பேருக்கு மட்டுமே வேலை கொடுத்துள்ளீர்கள். ஆனால் ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு புதிய வேலை வாய்ப்பு உருவாக்கப்படும் என்று வாக்களித்தீர்கள். கருப்பு பணத்தை முற்றிலும் ஒழித்து ஒவ்வொருவர் வங்கி கணக்கிலும் 15 லட்சம் செலுத்துவோம் என்றீர்கள். சிலர் அவ்வாறு நாங்கள் சொல்லவில்லை என்றார்கள். கருப்பு பணத்தை முற்றிலுமாக ஒழித்தால் ஒவ்வொருவர் வங்கி கணக்கிலும் 15 லட்சம் செலுத்தலாம் என்று தான் சொன்னோம் என்றார்கள். கருப்பு பணத்தை ஒழித்து விட்டீர்களா 15 லட்சம் வங்கி கணக்கில் செலுத்தி விட்டீர்களா? இதெல்லாம் தேர்தலுக்காக சொன்ன வெத்து வாக்குறுதி ஜும்லா என்று நீங்களே சொல்கிறீர்கள்.

வேளாண் மசோதா எப்படி முறையாக கொண்டு வரப்படவில்லையோ, அதேபோல் அரசியலமைப்புச் சட்டத்தின் 370 வது பிரிவை ரத்து செய்யும் மசோதாவும் முறையற்ற முறையிலேயே நடைபெற்றது. அவை விவாதங்கள் எவ்வாறு நடைபெற வேண்டுமோ அவ்வாறு அவை நடைபெறுவதில்லை. வடகிழக்கு மாகாணங்களின் மீது நீங்கள் அதிக அக்கறை எடுத்துக் கொள்கிறீர்கள் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் மணிப்பூரில் என்ன நடந்தது? அங்கே இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலை உலகமே பார்த்தது.

மணிப்பூரில் அங்கே பிரச்சனை நடந்து கொண்டிருந்த போது பலர் அமைதியாக இருந்தனர். மணிப்பூர் பிரச்சனையால் ஒட்டுமொத்த தேசமே தேங்கியது. பெண்கள் எப்படி நடத்தப்பட்டார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். அரசாங்கம் நாடாளுமன்றத்துக்கு கட்டுப்பட்டது நாடாளுமன்றம் மக்களுக்கு கட்டுப்பட்டது. நாடாளுமன்றத்தில் நாங்கள் விவாதிக்க வேண்டும் விவாத பொருளை ஆராய வேண்டும் அதில் நாங்கள் முடிவெடுக்க வேண்டும். நாடாளுமன்றம் என்பது விவாதத்திற்காக. விவாதமே இல்லை என்றால் நாடாளுமன்றம் எதற்காக? உறுப்பினர்கள் தங்களது கோரிக்கைக்கு விளக்கம் அரசாங்கத்திடம் இருந்து பெற வேண்டும் என்பதற்காக நாடாளுமன்ற வருகின்றனர் ஆனால் அங்கே பதிலில்லை அமைதி நிலவுகிறது. மக்களவையில் நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வந்த போதும் கூட விளக்கம் அளிக்கப்படவில்லை. மணிப்பூர் பற்றி எந்தவிதமான தீர்மானமும் எந்த விதமான விளக்கமும் அரசு தரப்பில் இருந்து அளிக்கப்படவில்லை.

பாதுகாப்பையும் மீறி நாடாளுமன்றத்துக்குள் அத்துமீறி இருவர் ஊடுருவினர். நாங்கள் அது பற்றி விவாதிக்க அனுமதிக்கப்படவுமில்லை அரசாங்கம் அதை பற்றி விளக்கம் அளிக்கவும் இல்லை. நாங்கள் நாடாளுமன்றத்துக்கு வெளியே எதையும் கேட்கவில்லை. நாங்கள் விளக்கம் கேட்கவே விரும்புகிறோம் அரசாங்கம் நாடாளுமன்றத்துக்கு கட்டுப்பட்டது ஆனால் இந்த நாட்டில் என்ன நடக்கிறது? நீங்கள் நாடாளுமன்றத்தில் வந்து விளக்கம் அளிப்பது மக்களுக்கு விளக்கம் அளிப்பது போல ஆனால் அப்படி இங்கு நடக்கவில்லை. எனக்கு கொடுக்கப்படும் நேரத்தால் நான் கட்டுப்படுத்தப்படுகிறேன் . இந்த அரசு நாட்டின் பல பகுதிகளை சீரழித்து விட்டது. எனவே அந்தப் பகுதியில் இருந்து வருகின்ற எனது சகாக்களுக்கு சகோதரிகளுக்கு நான் பேசுவதற்கு வழி விட வேண்டும்.

**தமிழ்நாட்டிற்கு நிதி தரப்படவில்லை!**

தமிழ்நாடு அரசு புயல் நிவாரண நிதியாகவோ வெள்ள நிவாரண நிதியாகவோ கேட்ட நிதி அளிக்கப்படவில்லை. நிதியமைச்சர் மாநிலங்களின் மீது அதிக கவனம் செலுத்த வேண்டும் குறிப்பாக எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களின் மீது கவனம் செலுத்த வேண்டும்.

மகாத்மா காந்தி கிராமப்புற இந்தியாவை கனவு கண்டார், பண்டித ஜவஹர்லால் நேரு நவீன இந்தியாவை உருவாக்கினார், லால் பகதூர் சாஸ்திரி வேளாண் இந்தியாவை விரும்பினார், விபி சிங் சமூக நீதி இந்தியாவை உருவாக்கினார், மன்மோகன் சிங் உலகமயமான இந்தியாவை உருவாக்கினார், நரேந்திர மோடி அவர்கள் கூட்டாட்சி உருக்குலைந்த இந்தியாவை உருவாக்குகிறார். நாங்கள் இவற்றையெல்லாம் இங்கு பேசுவதற்கு வருத்தப்படுகிறோம். மக்கள் உங்களுக்கு பத்து ஆண்டுகள் அளித்தார்கள். இந்த பத்து ஆண்டின் ஒட்டு மொத்த விளைவு என்ன? வேலைவாய்ப்பின்மை அதிகரித்து இருக்கிறது வறுமை அதிகரித்திருக்கிறது ஏழைகள் அதிகரித்திருக்கிறார்கள் என்பதை அறிக்கையை சுட்டி காட்டுகிறது. சிறு குறு தொழில்கள் நசுக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட நசுக்கப்பட்ட தொழில்களை பெரும் முதலாளிகள் தங்களது கைகளில் எடுத்துக் கொள்கிறார்கள். சிறு குறு தொழில்கள் பாதுகாக்கப்பட வேண்டும். நான் ஒன்று இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் என்ன நடந்தது? லீக் போட்டிகளில் நடந்த பத்து போட்டியிலும் வெற்றி மேல் வெற்றி குவித்து வந்தது இந்திய அணி . நாட்டிற்கே பெருமை சேர்க்கும் தருணம் என்று அனைவரும் இறுதிப் போட்டியில் காத்திருந்தோம். பிரதமர் அவர்களும் மைதானத்தில் காத்திருந்தார்கள். ஆனால் என்ன நடந்தது.

பத்து போட்டிகளில் வெற்றி மேல் வெற்றி குவித்த இந்திய அணி இறுதிப் போட்டியில் தோற்று விட்டது. நீங்கள் இரண்டு லோக்சபா தேர்தலில் தொடர்ந்து வெற்றி பெற்றீர்கள் இடைத்தேர்தல்களிலும் வெற்றி பெற்றீர்கள் ஆனால் இந்திய கிரிக்கெட் அணிக்கு இறுதிப்போட்டியில் என்ன நடந்ததோ அது போன்று 2024 தேர்தலில் இந்த அரசுக்கும் நடக்கும்.

நாங்களே வேதனைப்பட்டோம், நாங்களே அனுபவித்தோம் இன்று நாங்களே சாட்சியாகவும் இருக்கிறோம். நாங்கள் இங்கே இருக்கிறோம் அவர்கள் அங்கே இருக்கிறார்கள் மீண்டும் சொல்கிறேன் அதிகாரத்தில் இருப்பவர்களை ஏற்றுக் கொள்ள முடியவில்லை . கூட்டாட்சி தத்துவத்தை உயர்த்திப் பிடிக்க விரும்புகிறோம், உரிமைகள் பாதுகாக்கப்பட்ட மாநிலங்கள், மதச்சார்பற்ற நாட்டையே நாங்கள் விரும்புகிறோம். இளைஞர்கள் மீதும் உழைப்பாளிகள் மீதும் கவனம் செலுத்த வேண்டும். இந்தியா அதனுடைய உண்மையான நிலையிலே இருக்க வேண்டும். ஆனால் நீங்கள் அதை செய்யவில்லை.

2024 நாடாளுமன்ற தேர்தலில் ஐ.என்.டி.ஐ.ஏ. கூட்டணி வெற்றி பெறும். இந்தியாவை மீண்டும் அதனுடைய உண்மையான இடத்திற்கு கொண்டு வருவோம்.

இவ்வாறு திருச்சி சிவா பேசினார்.



ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்து தென்காசி புதிய பேருந்து நிலையம் அருகில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட செயலாளர் முத்துப்பாண்டி தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் ஜெயபாலன்,வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ. காங்கிரஸ் மாவட்ட தலைவர் பழனி நாடார் எம்.எல்.ஏ. ம.தி.மு.க.மாவட்ட செயலாளர் உதயசூரியன்,இந்திய கம்யூனிஸ்டு இசக்கிதுரை,வி.சி.க. செல்வம்,இந்திய யூனியன் முஸ்லிம் லீக் செய்யது பட்டாணி உள்பட கழக நிர்வாகிகள்,கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலை - எடக்கல்லில் - முத்தமிழ் அறிஞர்

## கலைஞர் தமிழ் இலக்கிய மன்ற தமிழ் கூடல் விழா!

### மாம்பலம் ஆ.சந்திரசேகர் சிறப்புரை!

திருவண்ணாமலை, பிப். 10-
திருவண்ணாமலை, எடக்கல் அரசு உயர் நிலைப் பள்ளியில் முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ் இலக்கிய மன்ற தமிழ் கூடல் விழா, விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஆண்டு விழா இன்று (10.2.2024) மாலை 3 மணியளவில் நடைபெறுகிறது.

விழாவில் ஆசிரியர் சி.வெற்றிவேல் வரவேற்கிறார்.

பெருந்துறைபட்டு எஸ். வசந்தி செல்வராகவன் முன்னிலை வகிக்கிறார்.

தலைமை ஆசிரியர் கோ. பிச்சை ரெத்தினம் விழாவிற்கு தலைமை வகிக்கிறார்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக உலக தமிழ்ச் சங்கத் தலைவர் மாம்பலம் ஆ.சந்திரசேகர் பங்கேற்று சிறப்பிக்கிறார்.

இவ்விழாவில் ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் மகான் பள்ளி மேலாண்மைக்குழு ரா.சசிகலா பெற்றோர் - ஆசிரியர் கழகத் தலைவர் எம்.குப்புசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

ஆசிரியை சி.விஜய லஷ்மி நன்றி கூறுகிறார்.

இவ்விழாவில் ஆசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், மாணவர்கள் பங்கேற்கின்றனர்.



தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் தொகுதி எண்டப்புளி ஊராட்சி புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் புதிய வகுப்பறை கட்டிடம் சரவணகுமார் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் எல்.எம்.பாண்டியன், தங்கவேல், முகமது இலியாஸ், பாஸ்கர அய்யன், கருத்தராசு, பால்பாண்டி, அன்னபிரகாஷ், கண்மணி, சரவணன், பாலாமணி பழனி முருகன், சரவணகுமார், ராம்ஜி, சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், வார்டு, கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்

# வஞ்சிக்கப்படும் தமிழ்நாடு....விழித்துக்கொள்வோம்! உரிமைகளை மீட்போம்!

17வது மக்களவையின் கடைசி நாடாளுமன்றக் கூட்டத்தொடர் டெல்லியில் நடைபெற்று வருகிறது. மக்களவைத் தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில், இந்த கூட்டத்தொடர் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகப் பார்க்கப்பட்டது. இதில், குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசிய பிரதமர் மோடி, மறைமுகமாக தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களை சீண்டினார்.

மோடி தனது உரையில், " சிலர் என் வரி, என் பணம் என்று பேசுகிறார்கள். இது என்ன மாதிரியான பேச்சு.. இது நாட்டிற்கே ஆபத்தான பேச்சு" என்று குறிப்பிட்டார். தமிழ்நாட்டிடம் இருந்து அதிகமான நிதியைப் பெறும் ஒன்றிய பாஜக அரசு, நமக்குத் திருப்பித் தருவதோ மிக மிக சொற்பம் என்று தொடர்ந்து சுட்டிக்காட்டி வருபவர் நம் முதலமைச்சர்தான். தமிழ்நாட்டின் உரிமைக் குரலை நம் முதலமைச்சர் ஓங்கி

ஒலித்து வந்ததன் விளைவு, இன்று பாஜக ஆளாத மற்ற மாநிலங்களும் அதே குரலை எழுப்பத் தொடங்கியுள்ளன. குறிப்பாக நேற்று ( பிப்ரவரி 8 ம் தேதி) டெல்லியில் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள நிதிப்பகிர்வில் கேரளாவிற்கு இழைக்கப்படும் அநீதியைக் கண்டித்து போராட்டம் நடத்தினார்.

தமிழ்நாட்டில் திமுக வினர், ஒன்றிய பாஜக மாற்றாந் தாய் மனப்பான்மையோடு தமிழ்நாட்டு மக்களுக்கு அல்வா கொடுப்பதை குறிப்பிடும் விதமாக, மக்களுக்கு அல்வா கொடுத்து பாஜக வின் முகத்திரையை கிழித்தனர்.



தமிழ்க் கேள்வி
**தி.செந்தில் வேல்**
மூத்த ஊடகவியலாளர்.

உள்ளபடியே நிதிப்பகிர்வில் என்னதான் நடக்கிறது என்பதை நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் வில்சன் அவர்கள் கேளவி எழுப்ப அதற்கு ஒன்றிய நிதித் துறையின் இணை அமைச்சர் அளித்துள்ள பதில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு உள்ளிட்ட பாஜக ஆட்சி செய்யாத தென்னிந்திய மாநிலங்கள் மிகப்பெரும் அளவில் வஞ்சிக்கப்படுவது அந்த ஆவணத்தின் மூலம் அம்பலமாகியுள்ளது. அதை அனைவரும் தெரிந்து கொள்வது அவசியம். அதற்கு முன், வில்சன் அவர்களைத் தொடர்பு கொண்டு பாராட்டுகளைத் தெரிவித்தேன், அவர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உங்கள் அப்பன் வீட்டுப் பணமா என்று எழுப்பிய அந்த உரிமைக் குரல்தான் என்னை இது குறித்த உண்மைகளை அறியச் செய்யத் தூண்டியது என்றார். அந்த வகையில் .உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் நாம் பாராட்டியே ஆக வேண்டும்.

இனி நாம் எப்படி எல்லாம் வஞ்சிக்கப்படுகிறோம் என்பதைப் பார்ப்போம்..

கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாடு ஒன்றிய அரசுக்கு செலுத்திய வரி என்பது, ரூபாய் 6,00,674.49 கோடி (ஆறு லட்சத்து அறுநூற்றின் எழுபத்தி நான்கு புள்ளி நான்கு ஒன்பது கோடி ரூபாய்) ஆனால், ஒன்றிய அரசின் நிதிப்பகிர்வில் இருந்து தமிழ்நாடு பெற்றது, வெறும், 1,58,145.62 கோடி ரூபாய். ( ஒரு லட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து நூற்றி நாற்பத்தி ஐந்து புள்ளி ஆறு இரண்டு கோடி ரூபாய் ) இதே போலத்தான் கேரளா, ஆந்திரா, கர்நாடகா, தெலுங்கானா என்று பாஜக ஆளாத தென் மாநிலங்களும் ஒன்றிய பாஜக அரசின் மாற்றாந்தாய் மனப்போக்கால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

ஒட்டுமொத்தமாக தென்னிந்திய மாநிலங்கள் மூலமாக ஒன்றிய அரசுக்கு கிடைத்த வரி வருவாய் ரூபாய் 22,26,983.39 கோடி ஒட்டுமொத்த தென்னிந்திய மாநிலங்கள் அனைத்திற்கும் சேர்த்து ஒன்றிய அரசு திருப்பிக் கொடுத்த நிதி வெறும் ரூபாய் 6,42,295.05 கோடி அதாவது உத்தரப்பிரதேசம் என்ற ஒரு மாநிலத்திற்கு மட்டும் ஒன்றிய அரசு வழங்கியது ரூபாய் 6,91,375.12 கோடி. ஒட்டுமொத்த தென்னிந்தியாவிற்கும் வழங்கியது ரூபாய் 6,42,295.05 கோடி. ஒட்டுமொத்த தென்னிந்தியாவை விட ஒரே ஒரு மாநிலத்திற்கு ( உத்தரப்பிரதேசத்திற்கு ) கூடுதல் நிதியை வழங்கியுள்ளது பாஜக அரசு. எளிமையாகச் சொல்ல வேண்டும் எனில், 1 ரூபாய் செலுத்திய தமிழ்நாட்டிற்கு வெறும் 26 பைசா மட்டுமே திருப்பி அளித்துள்ளது பாஜக அரசு அதுவே 1 ரூபாய் மட்டுமே கொடுத்துள்ள உத்தரப்பிரதேசத்திற்கு 2 ரூபாய் 2 பைசா அளித்துள்ளது.

1 ரூபாய் அளித்த மத்தியப் பிரதேசத்திற்கு 1 ரூபாய் 70 பைசாவும், 1 ரூபாய் அளித்த ராஜஸ்தானுக்கு 1 ரூபாய் 14 பைசாவும் ஒன்றிய பாஜக அரசு கொடுத்துள்ளது. இதைச் சுட்டிக் காட்டி கேள்வி எழுப்பிய நம் முதலமைச்சரைத் தான் மறைமுகமாக நாடாளுமன்றத்தில் சாடுகிறார் பிரதமர். ஆனால், இதே பிரதமர் குஜராத் முதலமைச்சராக இருந்தபோது, குஜராத் நிதிப்பகிர்வில் பாதிக்கப்படுவதாக குற்றம் சாட்டியவர்தான்.

ஆக முதலமைச்சராக இருந்தபோது ஒரு பேச்சு, பிரதமராக மாறிய பின் ஒரு பேச்சு என்று மாற்றி மாற்றி பேசுவது மட்டுமின்றி, வட இந்தியாவில் மட்டும் கணிசமான இடங்களைப் பிடித்தால் போதும் மீண்டும் ஆட்சியைப் பிடித்துவிடலாம் என்ற நம்பிக்கையில் பாஜக தென்னிந்திய மாநிலங்களை வஞ்சித்து வருவது ஆதாரங்களுடன் அம்பலமாகியுள்ளது.

திராவிடக்கொள்கைகளால் தமிழ்நாடு வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து பயணித்து இந்தியாவின் முதன்மை மாநிலமாக மாறியுள்ளது. மதவாத கொள்கைகளால் தாங்கள் ஆட்சி செய்யும் மாநிலங்களை பின்னோக்கி இழுத்துச் சென்று அவற்றின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக மாறியுள்ளது பாஜக.

வரும் மக்களவைத் தேர்தலில் பாஜக மீண்டும் ஆட்சிக்கு வந்தால், நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை வட இந்தியாவில் அதிகப்படுத்தும். தென்னிந்தியாவில் எம்.பி.க்களின் எண்ணிக்கை குறைக்கப்படும். அதன் பின்னர் வட இந்தியாவில் மத வெறியை ஊட்டியும் வட இந்திய மாநிலங்களுக்கு மட்டும் கூடுதல் நிதியைப் பகிர்ந்தளித்தும் தொடர்ந்து வெற்றி பெற முடியும் என்ற நிலையை பாஜக உருவாக்கும். அவ்வாறான நிலை உருவானால் அது இந்தியக் கூட்டாட்சித் தத்துவத்திற்கு மிகப்பெரிய பேராபத்தாக முடியும் என்பதை கருத்தில் கொண்டு வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பாஜகவை தமிழ்நாட்டில் இருந்து மட்டுமல்ல இந்தியாவில் இருந்தே அப்புறப்படுத்துவோம் மாநில உரிமைகளைக் காப்போம்



காந்திகிராமம் அறக்கட்டளையின் கீழ் செயல்படும் தம்பிதோட்டம் மேல்நிலை பள்ளியில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ. 10 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட நவீன கலையரங்கத்தை ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி திறந்து வைத்து மாணவர்கள் மத்தியில் பேசினார். அருகில் ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், காந்திகிராமம் அறக்கட்டளை அறங்காவலர் வி.கே.சிவக்குமார் ஒன்றிய செயலாளர் முருகேசன் உட்பட பலர் உள்ளனர்.

# சரண் சிங், பி.வி. நரசிம்ம ராவ், எம்.எஸ் சுவாமிநாதனுக்கு 'பாரத ரத்னா' விருது!

## பிரதமர் மோடி அறிவிப்பு!



புதுடெல்லி, பிப். 10-
முன்னாள் பிரதமர்கள் சவுத்ரி சரண் சிங், பி.வி. நரசிம்ம ராவ், வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் ஆகியோருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதனை பிரதமர் மோடி தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

**சரண் சிங்**

முன்னாள் பிரதமர் சவுத்ரி சரண் சிங்குக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட இருப்பது குறித்த அறிவிப்பில், "முன்னாள் பிரதமர் சவுத்ரி சரண் சிங்குக்கு பாரத ரத்னா விருது வழங்கப்படுவது நமது அரசின் அதிர்ஷ்டம். நாட்டிற்கு அவர் ஆற்றிய ஒப்பற்ற பங்களிப்புக்காக இந்த மரியாதை அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. அவர் தனது முழு வாழ்க்கையையும் விவசாயிகளின் உரிமைகள் மற்றும் நலனுக்காக அர்ப்பணித்தவர். உத்தரப் பிரதேச முதல்வராக இருந்தாலும் சரி, உள்துறை அமைச்சராக இருந்தாலும் சரி, எம்.எல்.ஏ.வாக இருந்தாலும், தேசத்தைக் கட்டியெழுப்ப அவர் எப்போதும் உத்வேகம் அளித்தார். அவசர நிலைக்கு எதிராகவும் உறுதியாக நின்றார். நமது விவசாய சகோதர சகோதரிகளுக்கு அவர் காட்டிய அர்ப்பணிப்பும், நெருக்கடி நிலையின்போது ஜனநாயகத்திற்கான அவரது அர்ப்பணிப்பும் ஒட்டுமொத்த தேசத்திற்கும் உத்வேகம் அளிக்கிறது" என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**பி.வி.நரசிம்மராவ்**

இதபோல், முன்னாள் பிரதமர் பி.வி. நரசிம்ம ராவுக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட உள்ளது குறித்த அறிவிப்பில், "நமது முன்னாள் பிரதமர்பி.வி.நரசிம்ம ராவ்க்கு பாரத ரத்னா விருது வழங்கப்படும் என்பதை பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். ஒரு சிறந்த அறிஞராகவும், அரசியல் தலைவராகவும் இருந்து பல்வேறு பதவிகளின் மூலம் நாட்டிற்காக அவர் பணிபுரிந்தார். ஆந்திரப் பிரதேச முதல்வர், மத்திய அமைச்சர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர் என ஒவ்வொரு பணியின் மூலமும் அவர் சமமாக நினைவு கூரப்படுகிறார். இந்தியா பொருளாதார ரீதியாக முன்னேற அவரது தலைமை முக்கிய பங்கு வகித்தது. நாட்டின் செழிப்பு மற்றும் வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளத்தை அவர் அமைத்தார்.

நரசிம்மராவ் பிரதமராக இருந்த காலம், பொருளாதார வளர்ச்சியின் புதிய சகாப்தத்தை வளர்த்தது. மேலும், இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை, மொழி மற்றும் கல்வித் துறைகளில் அவர் வழங்கிய பங்களிப்புகள் மகத்தானவை. இந்தியாவின் கலாச்சாரம் மற்றும் அறிவுசார் பாரம்பரியத்தை செழுமைப்படுத்திய ஒரு தலைவராக நரசிம்ம ராவ் திகழ்ந்தார்" என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

**எம்.எஸ்.சுவாமிநாதன்**

தமிழகத்தைச் சேர்ந்த வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்எ.எஸ். சுவாமிநாதனுக்கு பாரத ரத்னா விருது வழங்க இருப்பது குறித்த அறிவிப்பில், "விவசாயம் மற்றும் விவசாயிகள் நலனில் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் ஆற்றிய மகத்தான பங்களிப்பைப் போற்றும் வகையில், இந்திய அரசு அவருக்கு பாரத ரத்னா விருது வழங்குவது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. சவாலான காலங்களில்இந்தியாவிவசாயத்தில் தன்னிறைவை அடைய உதவுவதில் அவர் முக்கிய பங்கு வகித்தார். மேலும், இந்திய விவசாயத்தை நவீனமயமாக்குவதில் சிறந்த முயற்சிகளை அவர் மேற்கொண்டார்.

கண்டுபிடிப்பாளராக, வழிகாட்டியாக, ஏராளமான மாணவர்களிடம் கற்றல் மற்றும் ஆராய்ச்சியை ஊக்குவித்தவராக திகழ்ந்த அவரது விலைமதிப்பற்ற பணியை நாங்கள் அங்கீகரிக்கிறோம். டாக்டர் சுவாமி நாதனின் தொலைநோக்கு தலைமை இந்திய விவசாயத்தை மாற்றியமைத்தது மட்டுமல்லாமல், நாட்டின் உணவுப் பாதுகாப்பு மற்றும் செழுமையையும் உறுதி செய்துள்ளது. நான் நெருக்கமாக அறிந்த சிலரில் அவரும் ஒருவர். அவருடைய நுண்ணறிவையும், சேவையையும் நான் எப்போதும் மதிப்பேன்" என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். சிலதினங்களுக்கு முன்பு பிஹார் முன்னாள் முதல்வர் கர்ப்பூரி தாக்கூர், முன்னாள் துணை பிரதமர் லால் கிருஷ்ண அத்வானி ஆகியோருக்கும் பாரத ரத்னா விருது வழங்கப்பட இருப்பது குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி பெற்று வருகிறது!

# மோடி ஆட்சியில் இந்தியா 50 ஆண்டுகாலம் பின்னடைவு!

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை பேச்சு!

புதுடெல்லி, பிப்.10-
ஒட்டுமொத்த துறைகளிலும் ஒன்றிய பா.ஜ.க. அரசு தோல்வி அடைந்திருக்கிறது என மக்களவையில் திருவண்ணாமலை சி.என். அண்ணாதுரை பேசியுள்ளார்.

மக்களவையில் நடந்த இடைக்கால பட்ஜெட் மீதான விவாதத்தின் போது, திருவண்ணாமலை தொகுதி சி.என்.அண்ணாதுரை பேசியதாவது:-

ஒட்டு மொத்த இந்திய மக்களுக்கும் ஒன்றிய அரசின் பட்ஜெட் ஏமாற்றம் அளிக்கிறது. கடந்த 10 ஆண்டுகால பா.ஜ. ஒன்றிய ஆட்சி 50 ஆண்டுகள் பின் நோக்கி தள்ளும் ஆட்சியாக செயல் பட்டுள்ளது. செய்யக் கூடியவைகளை விட்டுவிட்டு, செய்யக்கூடாதவைகளை செய்திருக்கிறது. ஆண்டுக்கு 2 கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும்



என்றனர். அதன்படி, 10 ஆண்டுகளில் 20 கோடி இளைஞர்களுக்கு வேலை வழங்கியதற்கான எந்தத் தகவலும் இல்லை.

கிராமப்புற ஏழை எளிய மக்கள் பயன்பெறும் தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்திற்கான நிதியை ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக குறைத்திருக்கிறது. விவசாயிகளின் வருமானத்தை இரண்டு மடங்காக உயர்த்துவோம் என்றனர். ஆனால்,கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு துணைபோதும் வகையில், விவசாயிகளை குழி தோண்டி புதைக்கும் மூன்று வேளாண் சட்டங்களை கொண்டுவந்து, கடும் எதிர்ப்புகளால் திரும்பப்பெற்றது. ஒட்டுமொத்த துறைகளிலும் ஒன்றிய அரசு தோல்வி அடைந்திருக்கிறது.

**பாரபட்சம் காட்டப்படுகிறது!**

நிதி ஒதுக்குவதில் பாரபட்சம் காட்டப்படுகிறது. ரயில்வே, விமானம், நெடுஞ்சாலை, சிறுதுறைமுகங்கள் துறைகளில் தென்னிந்தியாவை, குறிப்பாக தமிழ்நாட்டை ஒன்றிய அரசு புறக்கணிக்கிறது. தென்னக ரயில்வேவுக்கு ரூ.6331 கோடி ஒதுக்கியிருக்கிறது. அதன்மூலம், 25 சதவீத பணிகளைகூட நிறைவேற்ற முடியாது. வருமானவரி, ஜி.எஸ்.டி., இதர வரி, டோல்கேட் வருவாய்களை தென்னியந்தியா, குறிப்பாக தமிழ்நாடு அதிகமாக வழங்கி வருகிறது. ஆனால், அந்த நிதியை பகிர்ந்து அளிப்பதில், எங்கே செல்கிறது என தெரியவில்லை. கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு கடன், வட்டி தள்ளுபடி செய்வது என மக்கள் விரோத பணிகளை செய்து வருகிறது. ஏழை மாணவர்கள் கல்விக் கடன், விவசாயிகளுக்கு கடன் வழங்குவதற்கு கட்டுப்பாடுகள். ஆனால், கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு சலுகைகளை வாரி வழங்கியிருக்கிறது.

பெட்ரோல், டீசல், காஸ் விலைவாசி விண்ணை முட்டுகிறது. துறைமுகம், ரயில்வே, விமான நிலையம், பொதுத் துறை நிறுவனங்களை விற்பனை செய்யும் விற்பனையாளராக ஒன்றிய அரசு செயல்படுகிறது. பாதுகாப்புத் துறையில் போர்விமானம், போர்க் கப்பல் கட்டுவதில் அனுபவம் இல்லாத, இதுவரை ஒரு பொம்மை விமானமோ. கப்பலோ செய்யாத நிறுவனங்களுக்கு அந்த பணிகளை வழங்கியிருக்கிறது. வல்லரசு என்றும், பொருளாதாரத்தில் மூன்றாவது இடத்தை பெறப்போவதாகச் சொல்லும் ஒன்றிய அரசு, சொந்த விமான சேவை இல்லாத நிலையிலும், சோமாலியாவுக்கு அடுத்து சொந்த விமானம் இல்லாத அரசாகவும் உள்ளது.

வளர்ச்சியை நோக்கி செல்லாமல், மதம், சனாதானம். மொழி திணிப்பு, மாநில உரிமைகள் பறிப்பு, எதிர்க்கட்சிகளைப் பிரிப்பது, ஒழிப்பது, கூட்டாட்சித் துவங்களை மதிக்காமல், வாக்களிக்கும் மாநிலங்களுக்கு சலுகைகள், வாக்களிக்காத மாநிலங்களுக்கு பாதங்களை ஒன்றிய அரசு செய்கிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

## மேற்கு வங்காளத்தில் பணிபுரிந்த

# துணை ராணுவ வீரர் திடீர் மறைவு!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் அஞ்சலி!

சிவகங்கை. பிப். 10-
சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி தாலுகா அ. காளாப்பூரைச் சேர்ந்த பொன்னுசாமி தங்கம்மாள் ஆகியோரின் இரண்டாவது மகன் வினோத் வயசு 36.

இவர் மேற்கு வங்காளத்தில் இந்திய ராணுவ துணை அதிகாரியாக பணியாற்றி வருகிறார். வினோத்திற்கு மனைவி ஒரு மகன் உள்ளார்கள் . விடுமுறையில் இவர் சென்னைக்கு வந்துள்ளார். திடீரென்று ஏற்பட்ட உடல்நலக் குறைவால் சென்னையில்மறைவெய்தினார்.

இறந்து போன வினோத்தின் உடல் பிரேத பரிசோதனைக்கு பிறகு சொந்த ஊரான அ. காளாப்பூருக்கு கொண்டு வரப்பட்டது. நேற்று காலையில் மரணம் அடைந்த ராணுவ வீரர் வினோத் உடலுக்கு கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

வினோத்தின் மனைவி தாய் தந்தை மற்றும் உறவினர்களுக்கு ஆறுதல் கூறினார்.

வினோத்தின் இறுதிச் சடங்குகள் போலீஸ் மரியாதையுடன் நடைபெற்றது.

இறுதிச்சடங்கில் வினோத் உடலுக்கு மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர் ஆர். செல்வ குமார், ஒன்றிய துணை செயலாளர் முத்துகுமார், நிர்வாகிகள் முத்தழகு தேசிகன் மற்றும் கிராம மக்கள் கலந்து கொண்டார்கள்.




விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி வட்டம் , அயன்ரெட்டியாபட்டியில் நீர்வளத்துறை சார்பில், குண்டாறு வடிநிலக்கோட்டத்தில், ரூ .15.78 கோடி மதிப்பில் சென்னம்பட்டி வலது பிரதான கால்வாய் நெடுகை 1120 மீ. அருகே தெற்கு ஓடையின் குறுக்கே தடுப்பு பகிர்மான கட்டடம் கட்டி பாசன நீர் வழங்குதல் மற்றும் சென்னம்பட்டி வலது பிரதான கால்வாய் புனரமைத்தல் பணிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தலைமையில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு துவக்கி வைத்தார்.




ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்து பாளையங்கோட்டை லூர்துநாதன் சிலை அருகில் நெல்லை மாவட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்டச் செயலாளர் ஸ்ரீராம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க.செயலாளர்இ ரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன் கான், மாவட்ட காங்கிரஸ் தலைவர் சங்கரபாண்டியன், ம.தி.மு.க மாவட்ட செயலாளர் நிஜாம்,இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் சடையப்பன் வி.சி.க. மாவட்ட செயலாளர் முத்துவளவன், சி.பி.ஐ.எம்.எல். ரமேஷ்,இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி மாவட்ட தலைவர் பாட்டபத்து முகமது அலி,மனிதநேய மக்கள் கட்சி ஆட்டோ காஜா ஆகியோர் கண்டன உரையாற்றினர். நிறைவில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயற்குழு உறுப்பினர் கனகராஜ் நிறைவுரையாற்றினார். நிகழ்வில் கழக நிர்வாகிகள்,கூட்டணி கட்சி நிர்வாகிகள், திரளாக கலந்து கொண்டனர்.



நெல்லை மாநகராட்சி எதிரில் உள்ள மாநகராட்சி வர்த்தக மையத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் கா.ப. கார்த்திகேயன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சட்ட பேரவைத் தலைவர் மு. அப்பாவு பங்கேற்று 7 ஆண்டுகளுக்கு மேலாக பலமுறை விண்ணப்பித்தும் சாதி சான்றிதழ் கிடைக்காமல் இருந்த 'புதிரை வண்ணார்' என்ற பட்டியல் இனத்தைச் சார்ந்த ரகு மற்றும் அவருடைய 6 குழந்தைகளுக்கும் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட நிகழ்ச்சியில் சாதி சான்றிதழ்களை வழங்கினார். உடன் மாநகராட்சி ஆணையாளர் தாக்கரே சுபம் ஞானதேவ் ராவ், துணை மேயர் ராஜ்,மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெகதீஸ், திட்ட இயக்குனர் சுரேஷ்,ஒன்றிய செயலாளர் ஜோசப்பெல்சி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கனகராஜ் உள்பட பலர் உள்ளனர்.



விளாத்திகுளத்தில் ரூ.1கோடி மதிப்பீட்டில் சார்நிலைக் கருவூல அலுவலக கட்டிடத்தினை தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர், திருமதி பெ.கீதாஜீவன் திறந்து வைத்தார். நிகழ்விற்கு விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்கண்டேயன் தலைமை வகித்தார்.மேலும் தூத்துக்குடி மாவட்ட கருவூல அலுவலர் மகாராஜன், விளாத்திகுளம் வட்டாட்சியர் ராமகிருஷ்ணன், விளாத்திகுளம் மத்திய ஒன்றியச் செயலாளர் ராமசுப்பு விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற தலைவர் சூர்யா அய்யன்ராஜ் விளாத்திகுளம் மேற்கு ஒன்றியச் செயலாளர் அன்புராஜன் விளாத்தி குளம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் சின்னமாரிமுத்து, புதூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் செல்வராஜ், புதூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் மும்மூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர் ராஜாக்கண்ணு, தூத்துக்குடி வடக்கு மாவட்ட முன்னாள் இளைஞர் அணி துணை அமைப்பாளர் இமானுவேல், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர் உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மகளிர் உரிமைத்தொகை-திண்டுக்கல் மாவட்டம்

# ஆத்தூர் தொகுதியில் தகுதியுள்ள அனைவருக்கும் கிடைக்க நடவடிக்கை!

## அய்யங்கோட்டையில் புதிய நியாயவிலை கடை திறப்பில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

சின்னாளபட்டி, பிப்.10-

ஆத்தூர் தொகுதியில் மகளிர் உரிமைத்தொகை தகுதியுள்ள அனைவருக்கும் கிடைக்க நடவடிக்கை எடுப்பேன் என ஆத்தூர் ஒன்றியம் அய்யங்கோட்டையில் புதிய நியாய விலைகடை திறப்பு விழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதோடு மருதாநதி நீர்வரத்து வாய்க்கால்கள் மற்றும் ஆத்தூர் தொகுதியில் உள்ள மழைநீர் வரத்து வாய்க்கால்கள் சிமெண்ட் வாய்க்கால்களாக மாற்றப் படும் என அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதியளித்தார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியத்தில் அய்யன்கோட்டை ஊராட்சியில் புதிய நியாயவிலை கடை திறப்புவிழா மற்றும் தேவரப்பன் பட்டியில் பால் கொள்முதல் நிலையம் திறப்புவிழா, மற்றும் கதிர்நாயக்கன்பட்டியில் புதிய அங்கன்வாடி மைய கட்டிடம் சித்தரேவில் புதிய நியாயவிலை கடை திறப்பு விழா நடைபெற்றது. அய்யன்கோட்டையில் நடைபெற்ற விழாவிற்கு ஒன்றிய பெருந்தலை வர் மகேஸ்வரி முருகேசன் தலைமை தாங்கினார்.

மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பாஸ்கரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர்கள் ராமன், பிள்ளையார் நத்தம் முருகேசன், ஒன்றிய துணை பெருந்தலைவர் ஹேமலதா மணிகண்டன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊராட்சி மன்ற தலைவர் சுந்தர் ராஜன் வரவேற்று பேசினார்.

விழாவில் புதிய நியாய விலை கடை திறந்து வைத்து விட்டு பொதுமக்கள் மத்தியில் பேசிய ஊரக



வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, தமிழக முதல்வர் திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கப்பட்டு தமிழகம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வரும் மகளிர் உரிமைத் தொகை திட்டம் கிராமப்புற பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி வருகிறது. ஒரு சில பெண்கள் தங்களுக்கு மகளிர் உரிமைத்தொகை கிடைக்கவில்லை என கோரிக்கை மனு கொடுத்துள்ளார்கள். அவர்களுக்கு நான் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

ஆத்தூர் தொகுதியில் தி.மு.க. ஆட்சியின் போது 12 வருடங்களுக்கு முன்பு தகுதியுள்ள அனைவருக்கும் முதியோர் உதவி தொகை கிடைத்ததோ அதுபோல தகுதியுள்ள அனைத்து மகளிருக்கும் மகளிர் உரிமைத் தொகை நிச்சயம் கிடைக்கும் அதற்கான நடவடிக்கையும் நான் எடுத்து வருகிறேன் என்றார்.

அதன்பின்னர் தேவரப்பன்பட்டிக்கு சென்று பால் கொள்முதல் நிலையம் திறந்து வைத்து விட்டு பயனாளிகளுக்கு பட்டா வழங்கிய பின்பு அவர்கள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 306 கிராம ஊராட்சிகளில் தனித்தன்மை வாய்ந்த தேவரப்பன்பட்டி ஊராட்சி காரணம் இந்த ஊராட்சியில் மக்கள் முன்னேற்றத்திற்கான நலத்திட்டங்கள் அதிகளவில் செயல்படுத்தப்பட்டுள்ளது தான் காரணம் என்றார். இங்குள்ள மக்கள் விவசாய தொழில், கால்நடை விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்காக பால் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டுள்ளது. இதை கால்நடை விவசாயிகள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். முன்பு மருதாநதிக்கு செல்ல வேண்டிய பாதை கரடுமேடாக இருந்தது. இப்போது சிறப்பான சாலை வசதி அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இது போல மருதாநதி நீர்வரத்து வாய்க்கால்கள், வடக்கு வாய்க்கால் மற்றும் தெற்கு வாய்க்கால்கள் சிமெண்ட் வாய்க்கால்களாக மாற்றப்படும். இது தவிர ஆத்தூர் தொகுதியில் நீர்த்தேக்கங்கள் மற்றும் விவசாய குளங்களுக்கு வரும் நீர் வரத்து வாய்க்கால்கள் அனைத்தும் சிமெண்ட் வாய்க்காலாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றார்.

விழா மேடையில் ஒரு பெண் தன்னுடைய மண் வீடு இடிந்துவிட்டது. புதிதாக வீடு வழங்க வேண்டும் என கோரிக்கை மனு கொடுத்தார். அதை பெற்றுக்கொண்ட ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ. பெரியசாமி விரைவில் தமிழக முதல்வர் வீடு இல்லாத பயனாளிகளுக்கும், குடிசை வீடுகளில் உள்ள பயனாளிகளுக்கும் வீடுகள் வழங்க விரைவில் அறிவிப்பு வெளியிடுவார். அந்த அறிவிப்பு கிராமப்புற ஏழைகளுக்கு வரப்பிரசாதமாக அமையும் என்றார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வழங்கல் அலுவலர் சிவக்குமார், ஆத்தூர் வட்டாட்சியர் வடிவேல்முருகன், தனி வட்டாட்சியர் சிவக்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தட்சிணாமூர்த்தி, குமரவேல், ஒன்றிய பொறியாளர் முருகபாண்டி, ஆத்தூர் சட்டமன்ற முகாம் அலுவலக அலுவலர் வடிவேல் முருகன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணலூர் மணி கண்டன், தொண்டரணி அமைப்பாளர் குமரேசன், துணை அமைப்பாளர் கும்மப்பட்டி விவேகானந்தன், அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், அய்யம்பாளையம் பேரூராட்சி மன்ற தலைவர் ரேகா அய்யப்பன், பேரூர் கழக செயலாளர் தங்கராஜ்,

ஒன்றிய குழு உறுப்பினர்கள் வண்ணம்பட்டி காணிக்கைசாமி, செல்வி காங்கேயன், வக்கம்பட்டி காணிக்கைராஜ், பாப்பாத்தி, சித்தரேவு சாதிக், தேவரப்பன்பட்டி அழகு சரவணக்குமார், ஜோதி மலைச்சாமி, ஆத்தூர் மேற்கு ஒன்றிய துணைச் செயலாளர்கள் கலா பச்சை, கருத்தராஜா, ஒன்றிய பொருளாளர் தேவரப்பன்பட்டி போஸ், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் காங்கேயன் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக அய்யன் கோட்டை ஊராட்சிக்கு வந்த ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு ஊராட்சி பொது மக்கள் கும்ப மரியாதையுடன் மலர்தூவி உற்சாக வரவேற்பு அளித்தனர்.

### சிவகங்கை மாவட்டம்

# காளையார் கோவில் - மானாமதுரை - திருப்புவனத்தில் ரூ.20 கோடியில் முடிவுற்ற திட்டப்பணிகள்!

## அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தொடங்கி வைத்தார்!

சிவகங்கை, பிப்.10-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில், மானாமதுரை திருப்புவனம் ஆகிய 3 தாலுகாக்களில் ரூ. 19கோடியே 91லட்சத்தில் முடிவடைந்த 3புதிய திட்டப்பணிகளை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் தொடங்கி வைத்தார்.

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் தாலுகா கே. சொக்கநாதபுரத்தில் ரூ. 21 லட்சத்து 80 ஆயிரம் மதிப்பில் புதிய ஊராட்சி மன்ற கட்டிட அலுவலக திறப்பு விழா ரூ.10 லட்சத்தில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் சிறுவர் பூங்கா ரூ.41 லட்சத்தில் புதிய வார சந்தை ஆகிய பணிகள் அர்ப்பணிப்பு விழா மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது. ஊராட்சி மன்ற தலைவர் மு. கண்ணன் வரவேற்றுப் பேசினார்.

புதிய ஊராட்சி மன்ற கட்டிடம், சிறுவர் பூங்கா வாரச்சந்தை ஆகியவற்றை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட திட்ட அலுவலர் சிவராமன், வாழ்த்துரை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் ஆர்.எம்கென்னடி திருமலை முத்து ராமலிங்கம், அவை தலைவர் சுப. தமிழரசன், குருவாயூர் கண்ணன் துணைத். தலைவர் சுகுமார் , ஒன்றிய கவுன்சிலர் ராமலிங்கம் ராசாராம், மெய்யப்பன், உட்பட ஊராட்சிவார்டு உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். இந்த நிகழ்ச்சியில் மகளிர்களுக்கு இலவச நலத்திட்ட உதவிகளை அமைச்சர் வழங்கினார்.

மானாமதுரை தாலுகா செய்களத்தூரில் ரூ.10 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய நியாயவிலை கடை, ராஜகம்பீரத்தில் ரூ.9லட்சத்து 13 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய நியாய விலைக் கடை, திருப்புவனம் தாலுகா கீழடியில் புதிதாக ரூ.25 லட்சத்து 99ஆயிரத்தில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்றங்களைக் கட்டிடம் ஆக மொத்தம் ரூ.19 கோடியே 91லட்சம் மதிப்பீட்டில் முடிவடைந்த பணிகளை தொடங்கி வைத்தார்.

மேலும் மானாமதுரை தாலுகா செய்களத்தூரில் ரூ. 8 கோடியில் புதிதாக கட்டப்பட உள்ள தொழில் பயிற்சி மையத்திற்கான கட்டிடப் பணிகள் துவக்க விழா, சிவகங்கை தாலுகா படமாத்தூரில் பள்ளி கல்வித்துறை சார்பில் ரூ.1 கோடியே 6லட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட உள்ள 5 கூடுதல் வகுப்பறை கட்டிடப்பணிகள் ஆகியவற்றை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமை வகித்தார்.

இந்த நிகழ்ச்சியில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ.ராம.சிவராமன், த.சேங்கை மாறன், எஸ். மாரியப்பன்கென்னடி, பாலா சுந்தர், திருமதி லதா அண்ணாதுரை, முத்துசாமி, துரை. ராஜாமணி, எம். அண்ணா துரை, க.பொன்னுச் சாமி, ஏஆர். ஜெயமூர்த்தி, முத்துக் குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.



சிவகங்கையில் நடைபெற்று வரும் 3வது புத்தகக் கண்காட்சியில் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பார்வையிட்டு புத்தகங்களை வாங்கினார்.

# நாடாளுமன்றத் தேர்தல் -2024

## 'நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு' மேற்கொள்ளும்

# விரிவான சுற்றுப்பயணம்

## (திருத்தப்பட்டது)

# தலைமைக் கழக அறிவிப்பு

மாண்புமிகு **தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர்** அவர்கள் வழங்கிய அறிவுரையின் படி, 2024 - நாடாளுமன்றத் தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு பிப்ரவரி 5ஆம் தேதி தொடங்கி தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களுக்கு கனிமொழி கருணாநிதி, எம்.பி., அவர்கள் தலைமையில் பயணம் செய்து பல்வேறு தரப்பினர், பொதுமக்கள், கழக நிர்வாகிகளைச் சந்தித்து தேர்தல் அறிக்கைக்கான பரிந்துரைகளைக் கேட்க இருக்கிறது.

கீழே குறிப்பிட்டுள்ளவாறு மாவட்டக் கழகச் செயலாளர்கள் தேர்தல் அறிக்கைக் குழுவினருடன் தொடர்பு கொண்டு தங்கள் மாவட்டத்திற்குரிய வணிகர் சங்கங்கள், விவசாயிகளின் பிரதிநிதிகள், நெசவாளர்கள், மீனவ சங்கங்கள், தொழில் முனைவோர், தொழிற்சங்கங்கள், மாணவர் சங்கங்கள், கல்வியாளர்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் அழைத்து வந்து தி.மு.க. தேர்தல் அறிக்கைத் தயாரிப்புக் குழுவினரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு விரிவான சுற்றுப் பயண விவரம் (திருத்தப்பட்டது)

| தேதி | இடம் | கழக மாவட்டம் |
|---|---|---|
| 2024 " பிப்ரவரி - 10 காலை | கோயம்புத்தூர் | கோவை வடக்கு, கோவை தெற்கு, கோவை மாநகர், நீலகிரி |
| மாலை | திருப்பூர் | ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு,கரூர் |
| " பிப்ரவரி - 11 | சேலம் | சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு கள்ளக்குறிச்சி தெற்கு |
| " பிப்ரவரி - 16 | தஞ்சாவூர் | தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய, தஞ்சை தெற்கு, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு |
| " பிப்ரவரி - 17 | விழுப்புரம் | விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, அரியலூர், பெரம்பலூர் |
| " பிப்ரவரி -18 காலை | வேலூர் | வேலூர் ,இராணிப்பேட்டை, திருப்பத்தூர் |
| மாலை | ஆரணி | திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு |
| " பிப்ரவரி 21, 22, 23 | சென்னை | சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மேற்கு, திருவள்ளூர் மத்திய |

குறிப்பு: மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் கழக தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு வரும் சில நாட்களுக்கு முன்பாகவே, இக்குழு வருவதை உள்ளூர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவதோடு, கோரிக்கை மனு பெறுவதற்கான இடவசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 18
நாள் : 6.2.2024

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



மாநில அளவிலான குடியரசு தினவிழா ஹேண்ட்பால் போட்டிகளில் முதலிடத்தை பெற்ற சின்னாளபட்டி சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி அணியை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பாராட்டி நிதியுதவி வழங்கி வாழ்த்தினார். அருகில் தி.மு.க. செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, நடராஜன் உட்பட பலர் உள்ளனர்.

### முன்னாள் டி.ஜி.பி. சைலேந்திர பாபு நூலகத்திற்கு

# முதல்வர் மு.க.ஸ்டாலின் - 300 புத்தகங்கள் வழங்கினார்!

மார்த்தாண்டம்,பிப்.10-

குழித்துறையில் முன்னாள் டி.ஜி.பி., சைலேந்திர பாபு நூலகத்திற்கு முதல்வர் ஸ்டாலின் அவர்கள் 300 புத்தகம் மற்றும் வாழ்த்து செய்தி அனுப்பியுள்ளார்.

முன்னாள் டி.ஜி.பி., சைலேந்திர பாபு குழித்துறையில் உள்ள தனது குடும்ப வீட்டை அண்மையில்,பொது நூலகமாக மாற்றினார். பள்ளி, கல்லூரி மற்றும் போட்டி தேர்வு எழுதும் மாணவ, மாணவியர் பயன்பெறும் விதத்தில் இங்கு ஏராளமான புத்தகங்கள் வைக்கப்பட்டு உள்ளது.

யு.பி.எஸ்.சி., டி.என். பி.எஸ்.சி., தேர்வுகளுக்கான புத்தகங்களும் உள்ளன. தினசரி ஏராளமான மாணவ, மாணவிகள் இங்கு வந்து தங்கள் பெயரை பதிவு செய்து புத்தகங்கள் படித்து செல்கின்றனர். இந்நிலையில், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தனக்கு கட்சியினர், அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் அன்பளிப்பாக வழங்கிய 300 புத்தகங்களை இந்த நூலகத்திற்கு வழங்கி உள்ளார்.

**இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முன்னாள் டி.ஜி.பி., சைலேந்திர பாபுவுக்கு எழுதிய கடிதத்தில் கூறி உள்ளதாவது:**

**தாங்கள் பிறந்த ஊரான குழித்துறையில் உள்ள தங்களது வீட்டை ஒரு பொது நூலகமாக மாற்றி உள்ளதாக எனக்கு அனுப்பிய கடிதத்தால் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். மேலும் தாங்கள் படித்த அந்த மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு அங்கு பயிற்சி வகுப்புகளும் நடத்த உள்ளது பாராட்டத்தக்க முயற்சி ஆகும். தி.மு.க., தலைவராக பொறுப்பேற்றது முதலாக என்னை சந்திக்க வருபவர்கள் எனக்கு அன்பளிப்பாக புத்தகங்களையே வழங்குமாறு நான் கேட்டுக்கொண்டதோடு, அவ்வாறு எனக்கு அளிக்கப்படும் புத்தகங்களை தமிழகம் முழுவதும் உள்ள நூலகங்களுக்கு அனுப்பி வருகிறேன்.**

**அதன்படி, தாங்கள் அமைத்துள்ள நூலகத்திற்கு புத்தகங்கள் கோரி நீங்கள் எனக்கு எழுதிய கடிதத்தின் அடிப்படையில், பல்வேறு துறைகள் சார்ந்த 300 புத்தகங்களை வழங்குகிறேன். பிறந்த மண்ணின் அறிவு வளர்ச்சிக்காகவும், அவர்கள் உயர் வேலைவாய்ப்புகள் அடைவதற்காகவும் தாங்கள் மேற்கொள்ளும் முன்னெடுப்பு வெற்றி அடைய வாழ்த்துகிறேன்.**

இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சைலேந்திரபாபு எழுதியுள்ள கடிதத்தில் தமது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துள்ளார்.

அவரது கடிதம் வருமாறு:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு,

தாங்கள் அனுப்பியுள்ள 300 புத்தகங்களும் தாங்களின் 19.1.2024 நாளிட்ட கடிதமும் பெற்றுக் கொண்டேன்.

எனது பெற்றோரின் பெயரில் என் ஊரில் துவங்கிய என் வீட்டு நூலகத்திற்கு 300 நூல்களை வழங்கிய தங்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு சைலேந்திர பாபு தமது கடிதத்தில் கூறியுள்ளார்.

### நெல்லை சங்கர் நகரில்

# கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

## ஆர்.எஸ்.பாரதி - மைதீன்கான் பங்கேற்பு!

நெல்லை. பிப். 10 -

நெல்லை மத்திய மாவட்டம் சங்கர்நகர், நாரணம்மாள்புரம் பேரூர் தி.மு.க சார்பில் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா,கழக அரசின் மூன்றாண்டு சாதனை விளக்கம் விழா, கழக இளைஞர் அணி மாநாடு வெற்றி விழா ஆகிய முப்பெரும் விழா மாபெரும் பொதுக்கூட்டம் தாழையூத்து பஜார் திடலில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு.பேச்சி பாண்டி யன் தலைமையில் நடைபெற்றது. கிட்டா பாண்டியன், மகாலிங்கம்,துரைசுடலை முத்து, பெரியதுரை,கனிராஜ்,முத்துப்பாண்டி, ராஜாமணி, முண்டன் என்ற பாண்டி, முருகன்,ராமசாமி,செல்வகுமார், நாகூர் மைதீன், ஜெய்லானி,முத்துராஜ், பாலசுப்பிரமணியன்,தங்கம்,பிச்சம்மாள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.சங்கர்நகர் பேரூர் செயலாளர் செல்வபாபு, வரவேற்புரையாற்றினார். சங்கர்நகர் சிறப்பு நிலை பேரூராட்சி தலைவர் பட்டு லெட்சுமி,நாரணம்மாள்புரம் சிறப்பு நிலை பேரூராட்சி தலைவர் உமா மகேஸ்வரி ஆகியோர் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினர்.நிகழ்வில் கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பார்வதி பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன் கான்,தலைமை கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றி கொண்டான்,நெல்லை தொகுதி பார்வையாளர்,மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் வசந்தம் ஜெயக்குமார், மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள்,மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலை ராஜா,மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், மாநில மகளிர் தொண்டரணி துணைச்செயலாளர் விஜிலாசத்யானந்த்,சட்ட திட்ட தீர்மானக் குழு உறுப்பினர் சுப.சீதா ராமன் ஆகியோர் உரையாற்றினர்.

பின்னர் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி பேசியதாவது.

ஊரின் வளர்ச்சிக்கு ஊராட்சித் தலைவரின் பங்கு மிகவும் முக்கிய மானது.100 ஆண்டுகள் முன்பு நடக்காத அளவில் கன மழை வெள்ளம் காரணமாக தூத்துக்குடி மக்கள் பரிதவித்தார்கள் குடிப்பதற்கு கூட அவர்களுக்கு தண்ணீர் கிடையாது.

சகோதரி கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் சாதாரண தொண்டன் போன்று வெள்ளப் பாதிப்புகளை முழுமையாக சென்று பார்வையிட்டு மக்களுக்கு ஆறுதல் கூறினார்கள்.அனைத்து அமைச்சர்களும் தொழிலாளர்கள் போன்று பணியாற்றினார்கள்.

முதலமைச்சர் அவர்கள் சொன்ன வாக்குறுதியை செய்து கொடுத்துள்ளார்.

அவர் வெற்றி பெற்று முதல்வராக பொறுப்பேற்று பல நலத்திட்டங்களை மக்களுக்கு தந்தாலும்,ஆட்சி ஒரு நெருக்கடி நிலையை சந்தித்து வருகிறது. மழை வெள்ளத்தால் தென் மாவட்டம் கடும் பாதிப்புக்கு உள்ளானது. மக்கள் வீடிழந்து, உணவுக்கும் தண்ணீருக்கும் பரிதவித்தனர். அப்போது முதல்வர் அவர்கள் ரூபாய் 6000,1000 என வழங்கினார். இயற்கை பேரிடர்க்கு ஒன்றிய அரசிடம் கூறிய நிதியைக் கேட்டால் தர மறுக்கிறார்கள்.

முதலமைச்சராக பொறுப்பேற்று இரண்டு ஆண்டு காலத்தில் ஒரு ஆண்டு கொரோனா,உங்களை எல்லாம் காப்பாற்றியுள்ளார்.உங்களுக்கு முக கவசம்(மாஸ் )இல்லாமல் செய்தவர் முதலமைச்சர் அவர்கள். நிதி நெருக்கடி உள்ளிட்ட இக்கட்டான சூழ்நிலையிலும்

கலைஞர் மகளிர் உதவித்தொகை ஏறத்தாழ 7 ஆயிரம் கோடிக்கு மேல் ஒன்றரை கோடி மக்களுக்கு மாதந்தோறும் வங்கி கணக்கில் வந்து விழுகிறது.

ஆனால் மோடி 15 லட்சம் ரூபாய் தருவேன் என்றார் 10 ஆண்டுகள் கடந்து விட்டது இன்னும் பணம் வரவில்லை.15 பைசா கூட கொடுக்கவில்லை. ஆனால் முதலமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றினார். அவர் கலைஞரின் பிள்ளை.முதல்வர் அவர்களின் ஊக்கத் தொகை பெறும் இளம் பெண்கள் வருங்காலத்தில் மருத்துவர், ஆட்சியர், தாசில்தார் போன்ற உயர் அதிகாரிகள் பொறுப்பில் கண்டிப்பாக அமர்வார்கள்.அப்போது முதல்வர் மு.க.ஸ்டாலினை நினைத்துப் பார்ப்பார்கள்.ஒரு காலத்தில் படித்த பெண்களின் சதவீதம் 30 ஆக இருந்தது. தற்போது கல்வி ஊக்கத்தொகை வழங்குவதால் படித்த பெண்களின் எண்ணிக்கை 52 சதவீதமாக உயர்ந்துள்ளது.

பேரறிஞர் அண்ணா அருகே கலைஞர் அவர்களை அடக்கம் செய்ய 6 அடி இடம் கொடுக்காமல் எடப்பாடி மறுத்தார். யாருமே கேட்காமலே விஜயகாந்துக்கு அரசு மரியாதை வழங்கினார்.நமது முதல்வர் அவர்கள். 2016 இல் விஜய் காந்திற்கு தி.மு.க கூட்டணியில் சேர கலைஞர் அவர்கள் அழைப்பு விடுத்தார். தனியாக நிற்காமல் எங்கள் கூட்டணிக்கு வந்திருந்தால் கலைஞர் கண்டிப்பாக முதல்வராக இருந்திருப்பார். கலைஞர் இறக்கும் பொழுது எதிர்க் கட்சித் தலைவர் பதவி இல்லாமல் இறக்க காரணம் விஜயகாந்த் தான்.

ஒன்றிய அரசு அமலாக்கத்துறை, வருமானவரித் துறை,சி.பி.ஐ. ஆகியவற்றின் மூலம் மிரட்டுகிறது. ஒரு ஆட்சி அழியும் முன்பு இப்படித்தான் நடக்கும். இது 1977 எமர்ஜென்சியை நினைவுபடுத்துகிறது. இவ்வாறு கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேசினார்.



ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு உரிய நிதியை வழங்காமல் புறக்கணிப்பதைக் கண்டித்து நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் நெல்லை டவுனில் ஒன்றிய அரசின் நிதி பங்கீடு குறித்து பொதுமக்களுக்கு விவரிக்கும் வகையில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், தலைமைக் கழக வழக்கறிஞர் சூரியா வெற்றி கொண்டான் ஆகியோர் முன்னிலையில் மக்களுக்கு அல்வா கொடுக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் ஒன்றிய அரசைக் கண்டித்து முழக்கங்கள் எழுப்பி, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# சாத்தான்கள் வேதம் ஓதுகின்றன!...

“குடியுரிமைச் சட்டம் இன்னும் ஒரு வாரகாலத்திற்குள் செயல்படுத்தப்படும்; இது நான் அளிக்கும் உத்தரவாதம்” என்று மேற்கு வங்க மாநிலத்தில் ஒன்றிய இணை அமைச்சர் சாந்தனு தாகூர் தனது மாநில பொதுக்குழு கூட்டத்தில் சொல்லி இருக்கிறார். ஒரு செய்தி சேனலுக்கும் அளித்த பேட்டியிலும் கூறி இருக்கிறார்.

அதைப்போல, கல்கத்தாவில் கலந்து கொண்டு ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் “சி.ஏ.ஏ இந்த மண்ணின் சட்டம்; அதனை அமல்படுத்துவது தவிர்க்க முடியாதது; மம்தா பானர்ஜி மக்களைத் தவறாகப் பயன்படுத்துகிறார்” எனப் பேசியிருக்கிறார்.

அரசு நலத்திட்டங்களைத் தொடங்கி வைத்த மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி பேசுகையில், “...நான்கு ஆண்டுகள் சி.ஏ.ஏ சட்டத்தைக் கிடப்பில் போட்டுவிட்டு, தற்போது தேர்தல் ஆதாயத்திற்காகப் பா.ஜ.க. பேசுகிறது. நான் உயிருடன் இருக்கும் வரை சி.ஏ.ஏ சட்டத்தை ஒரு போதும் மேற்கு வங்க மாநிலத்தில் அனுமதிக்க மாட்டேன் “... என்று முழக்கமிட்டுள்ளார்!

இதனைப் போல, தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக வெளிநாடு சென்ற தமிழ்நாடு முதல்வர் தளபதி ஸ்டாலின் அவர்கள், “.... மதநல்லிணக்கத்திற்கு எதிரான பா.ஜ.க அரசின் நாசக்காரச் செயல்களையும், அ.தி.மு.க.வின் நயவஞ்சக நாடகத்தையும் மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள் எனவும், பா.ஜ.க கொண்டுவரும் குடியுரிமைச் திருத்தச் சட்டத்தை (சி.ஏ.ஏ) தமிழ்நாட்டில் கழக அரசு ஒருபோதும் அனுமதிக்காது; இலங்கைத் தமிழர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் எதிரான இந்தச் சட்டத்தைக் தமிழ்நாட்டில் கால் வைக்க விடமாட்டோம்!” ..எனவும் தாம் வெளியிட்டுள்ள நறுக்கொலி பதிவில் (டுவிட்டர்) உறுதிப்படக் குறிப்பிட்டுள்ளார்.

மோடி அரசுக்குக் கூஜா தூக்கிக் கூனிக் குறுகிக் கப்பம் செலுத்தி வந்த அரசுதான் எடப்பாடியின் அ.தி.மு.க. அரசு. கடந்த கால அரசியல் நாடகங்களையெல்லாம் மறைத்துவிட்டு, “சிறுபான்மை மக்களுக்கு சி.ஏ.ஏ சட்டத்தால் எந்தப் பாதிப்பும் ஏற்படுவதை அ.தி.மு.க ஒரு போதும் அனுமதிக்காது” என்று எடப்பாடிகள் நாடகமாடி செய்தியாளர்களுக்குத் தற்போது தகவல் தந்திருப்பது நகைச்சுவை மிகுந்த கேலிக்குரியதாகும்.

மோடி அரசு குடியுரிமைச் சட்டம் கொண்டு வந்த போது, அ.தி.மு.க.ஆதரவு அளித்து வாக்களித்தது. இது குறித்து அப்போதே (The Hindu 19.12.2019) எனும் ஆங்கில ஏட்டின் செய்தியாளர் கேள்வி கேட்டபோது, “தமிழ்நாடு தலைமைச் செயலகத்திலிருந்து துணைச் செயலாளர் ஒருவர் அதிமுக நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தொடர்பு கொண்டு, “...முதல்வர் இ.பி.எஸ். இட்ட கட்டளைப் படி, இந்தச் சட்ட மசோதாவை ஆதரித்து வாக்களிக்க வேண்டும்; ..எனக் கேட்டுக் கொண்டதால், அதன்படி நாங்கள் வாக்களித்தோம்,” ..எனக் குடியுரிமைச் சட்டத்திற்கு ஏன் வாக்களித்தோம் என்பதை மாநிலங்களவை அ.தி.மு.க உறுப்பினரான எஸ் .ஆர். பாலசுப்ரமணியம் அவர்களே அந்நாளில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார். தற்போது அ.தி.மு.க. நடத்தி வரும் பொய்ப் பித்தலாட்டத்தை ஆதாரங்களுடன் இங்கே நாம் பதிவு செய்ய வேண்டியுள்ளது!

மாநிலங்களவையில் வாக்களித்த அ.தி.மு.க. எம்.பி.கள் 10 பேர் யார்? யார்? என்ற விவரம். வருமாறு: 1. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், 2. என். சந்திரசேகரன், 3. ஏ. முகமது ஜான், 4, ஏ.கே. முத்துக்கருப்பன், 5.ஏ.நவநீதகிருஷ்ணன், 6. ஆர்.சசிகலா புஷ்பா, 7. ஏ கே .செல்வராஜ், 8. ஆர் .வைத்திலிங்கம், 9.ஏ.விஜயகுமார், 10. விஜிலா சத்ய நாத் மற்றும் 11.பா.ம.க அன்புமணி இராமதாஸ் ஆகிய 11 பேரும் மோடி கொண்டு வந்த குடியுரிமைச் சட்டத்திற்கு ஆதரவாக மாநிலங்களவையில் வாக்களித்தவர்கள் என்பதை மறந்து கிடப்பில் போட்டு விடக் கூடாது. மக்களவையில் ஓ. பன்னீர்செல்வம் மகனான தேனி அ.தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர் இரவீந்திர நாத் ஆதரவு தெரிவித்து வாக்களித்துள்ளார் இவர்கள் 11 பேரும் குடியுரிமைச் சட்டத்திற்கு எதிராக வாக்களித்து இருந்தால், மோடி அரசு உறுதியாக அச்சட்டத்தை நிறைவேற்றியிருக்க முடியாது.



**கவிஞர் தமிழ்தாசன்**

*கழகத் தீர்மானக் குழுத் தலைவர்*

காரணம் மக்களவையில் எதிர்த்து வாக்களித்ததற்கான ஆதாரம் மக்களவை வலைதளத்தில் 615 ஆம் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது மாநிலங்கள் அவையில் எதிர்த்து வாக்களித்த தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் விவரம்: 1. ஆர்.எஸ்.பாரதி, 2. டி.கே.எஸ். இளங்கோவன், 3. எம். சண்முகம், 4. திருச்சி சிவா, 5. பி. வில்சன், 6. ம.தி.மு.க எம்.பி வைகோ, 7. காங்கிரஸ் எம் பி. பி.சிதம்பரம், ஃ மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் எம்.பி 8. டி. கே. ரங்கராஜன் இப்படியான எட்டுப் பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்த தி.மு.க கூட்டணி எம்.பி.கள் எதிர்த்து வாக்களித்துள்ளனர். வாக்குப்பதிவு காணொளிப் பதிவும், மற்றும்.அவைத்தலைவர் அறிவிப்பும் ஆதாரமாக உள்ளன. அதனை நாம் இப்போதும் பார்க்கலாம். Ayes 125 Noes 105. அன்புமணி இராமதாஸ் மற்றும் பத்து அதிமுக உறுப்பினர்களின் வாக்குகள் தான் சி.ஏ.ஏ சட்டம் நிறைவேறக் காரணமாயிற்று .அந்த 11 பேரும் எதிர்த்து வாக்களித்திருந்தால், ஆதரவு 12511 =114. எதிர்ப்பு 105+ 11 = 116. ஆகவே, 116 114 என்ற கணக்கில் சி.ஏ.ஏ. சட்டம் உறுதியாகத் தோற்கடிக்கப்பட்டிருக்கும். வரலாறு இப்படி இருக்கும்போது,,சி .ஏ.ஏ வுக்கு எதிராக வாக்களிக்காமல் திமுக கூட்டணி வெளிநடப்பு செய்ததாகப் பொய் செய்திகளை அ.தி.மு.கவின் அடிவருடி அடிமைகளால் அவதூறு செய்திகள் பரப்பப்பட்டு வருகின்றன.

மோடி அரசு கொண்டு வந்த குடியுரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று 14க்கும் மேற்பட்ட மாநிலங்களில் பொறுப்பேற்றிருந்த முதலமைச்சர்கள் அறிவித்ததுடன், அந்தந்த மாநிலச் சட்டமன்றங்களில் தீர்மானமே கொண்டு வந்தார்கள். மம்தா பானர்ஜி மேற்கு வங்காளம், அமிருந்தர் சிங் பஞ்சாப், பினராய் விஜயன் கேரளா, கமல்நாத் மத்திய பிரதேசம், நவீன் பட்நாயக் ஒடிசா, நாராயணசாமி புதுவை, உத்தவ்தாக்கரே மராட்டியம், ஜெகன்மோகன் ரெட்டி ஆந்திரா, அசாம் உள்ளிட்ட வட கிழக்கு பகுதி மாநிலங்கள் 12 எம்.எல்.ஏக்கள் எதிர்ப்பு, பா.ஜ.க கூட்டணியில் இருந்த நிதீஷ் குமார் பீகார், சத்தீஸ்கர், ஜார்கண்டு உள்ளிட்ட 14 மாநிலங்கள் அன்றைக்கு அச் சட்டத்திற்கு கடுமையான முறையில் எதிர்ப்பு தெரிவித்து இருந்தனர்..ஆனால், மோடி அரசுக்குக் கைத்தடியாக இருந்த எடப்பாடி தலைமையிலான. அ.தி.மு.க அரசு குடியுரிமைச் சட்டத்தை எதிர்க்க நெஞ்சில் துணிவில்லை.

இச்சட்டத்தை எதிர்ப்பதில் கேரளாவில் ஆளுங்கட்சியான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், எதிர்க்கட்சியான காங்கிரசும் ஒரே அணியில் நின்று, குடியுரிமை திருத்தக் கொடுமைச் சட்டத்திற்கு எதிரான போராட்டங்களில் கலந்து கொண்டனர்.

உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி தேசிய குடிமக்கள் பதிவேடு National Register of Citizens அல்லது National Register of Indian Citizens (N.R.C) கீழ்க் கணக்கெடுப்பின் போது (31.8.2019), அசாமில் 19 இலட்சம் பேர் (19, 06, 657) நாடற்றவர்கள் அதாவது, இந்தப் பதிவேட்டில் இடம்பெறாதவர்கள் என்று அறிவிக்கப்பட்டனர். அவர்களில் 7 இலட்சம் பேர் இந்துக்கள் எனக்கூறி அவர்களுக்காக மட்டும் அசாம் முதல்வர் சோன்வால் வாதிட்டார். மற்ற இஸ்லாமிய சிறுபான்மை மக்களுக்காக அவர் வாதிட முன்வரவில்லை. மறு கணக்கெடுப்பு என்ற பெயரால் குளறுபடி செய்து,அதனால் அன்றைய பாராளுமன்றத்தில் அமளிதுமளி ஏற்பட்டது.

இந்து மதத்திற்கு ஒரு நாடு என்றும், இஸ்லாமியர்களுக்கு ஒரு தனி நாடு என்றும் மத அடிப்படையில் பிரிக்கப்பட வேண்டும் என்ற குரலை எழுப்பியவர் இந்து மகாசபை தலைவராக இருந்த வீர சாவக்கர்தான். கோல்வாக்கர், வீரசாவக்கர் போன்றவர்களின் கொள்கையை நிலைநாட்டுவதற்கு மத வெறி பிடித்த மோடி அரசு இந்தியாவை ஒரு இந்து ராஷ்டிர நாடாக்க முயற்சி செய்து வருகிறது.

சீரழிந்து கொண்டிருக்கும் பொருளாதாரப் பிரச்சினைகளைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல், மதவெறி கொள்கைகளில் மட்டும் கவனம் செலுத்தி, நாட்டு மக்களிடையே பேதத்தையும், பிளவையும் ஏற்படுத்தி இந்திய அரசியல் சட்டத்தின் மதசார்பற்ற தன்மை,சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய அத்தனை அடிப்படை அம்சங்களின் வேர்களையும், அடியோடு பிடுங்கி எறியும் விதத்தில்; மக்கள் நம்பிக்கை அளித்த தனிப் பெரும்பான்மையைத் தாறுமாறாகப் பயன்படுத்துகிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு எல்லா காரியங்களுக்கும் துணை நின்று, வாக்குமளித்தும்; தன் பதவி காப்பாற்றப்பட்டால் போதும் அடிக்கும் பகல் கொள்ளைகளைக் கண்டுகொள்ளாமல் இருந்தால் போதும் என்ற நிலையில் இருக்கும் எடப்பாடி பழனிச்சாமி பதவி காலம் தமிழக சரித்திரத்தில் கற்காலமாகிவிட்டது”.. என்று அப்பொழுதே கழகத் தலைவர் தளபதி அறிக்கை ஒன்றில் எச்சரிக்கை செய்திருந்தார்.

முஸ்லிம்களை இரண்டாம் தரக் குடிமக்களாகக் கருதும் இந்துத்துவாக் கொள்கை வெறி பிடித்த பா.ஜ.க அரசு,ருத்ர தாண்டவம் ஆடி இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தது. சமத்துவ உரிமை எனும் சட்டத்தின் முன் சமம் (Equality before Law Article 4), வேற்றுமை பாராட்டல் தடுப்பு (Prohibition of discrimination Article 15) சம வாய்ப்பு (Equality of Opportunity Article 16) தீண்டாமை ஒழிப்பு (Abolition of Untouchability Article 17) விருதுகள் ஒழிப்பு (Abolition i of titles Article 18) என்பன போன்ற அரசியல் அமைப்புச் சட்ட உறுப்புகளுக்கு எதிராக இந்தச் சட்டத் திருத்தம் அமைந்துள்ளது எனவும், அரசியலமைப்புச் சட்ட உறுப்புகள் 21, 25, 26 ஆகியவற்றுக்கும் எதிரானதாகவுமுள்ளது எனவும். ஆகவே, இச்சட்டத்தை கைவிட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள், சமூக செயற்பாட்டாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்து போராடி வந்தனர்.

நாடாளுமன்ற இரு அவைகளிலும் ஜனநாயக விரோத குடியுரிமைச் சட்டத் திருத்தத்தைக் கொடுங்கோல் ஆட்சி நடத்தி வரும் பாஜக அரசு நிறைவேற்றியது. அதன்படி பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்கதேசம் ஆகிய நாடுகளிலிருந்து ஆவணங்களின்றி அகதிகளாக இருந்து வசித்து வரும் இந்துக்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், பார்சிகள், பௌத்தர்கள், ஜெயினர்கள் ஆகியோருக்கு மட்டுமே இந்திய குடியுரிமை வழங்க வகை செய்து மசோதாவில் திருத்தம் கொண்டு வரப்பட்டது. அண்டை நாடுகளான இலங்கை, மியான்மர், பூட்டானிலிருந்து வந்தவர்களுக்கு குடியுரிமை அளிப்பது பற்றிச் சட்டத்தின் குறிப்பிடப்படவில்லை. இதன் மூலம் இந்தியாவில் ஐந்து ஆண்டுகள் வசித்தால் போதும்; 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 31ம் நாளுக்கு முன்பாக இந்தியா வந்துள்ளவர்கள் குடியுரிமை பெறத் தகுதியானவர்கள் எனச் சட்டத் திருத்தத்தில் கூறப்பட்டிருந்தது. இச்சட்டம் அரசியலமைப்புச் சட்டம் உறுப்பு 14 க்கு எதிரானது. மதச்சார்பற்ற இந்தியாவின் முஸ்லிம் மக்களை தனிமைப்படுத்த அவர்களுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட பாசிச சட்டமாகும்.

இதன் மூலம் தேசிய குடியுரிமைச் சட்டத்தில் எந்த ஒரு மதத்தை, மொழியை, இனத்தைப் பிரித்துக் காட்டிப் பிளவு படுத்திக் குடியுரிமை பெறுவதற்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. அப்படி எந்த இடத்திலும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் அனுமதித்துள்ளதா? ஆனால், தற்போது பா.ஜ.க அரசால் கொண்டு வரப்பட்டுள்ள குடியுரிமைச் திருத்தச் சட்டத்தில் இஸ்லாமியருக்கும், இலங்கைத் தமிழர்களுக்கும் குடியுரிமை தராமல் அவர்களெல்லாம் பாதுகாப்பு முகாம்கள் அடைத்து வைக்கப்படும் சூழ்நிலைகள் ஏற்பட்டுள்ளன.

1983 ஆம் ஆண்டு முதலே தமிழகத்திற்கு அகதிகளாக வந்த நமது தொப்புள் கொடி உறவுகளான இலங்கைத் தமிழர்கள், 40ஆண்டு காலமாகப் பல்வேறு இடங்களில், தமிழக அரசால் அமைக்கப்பட்டிருக்கும் 115 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தற்போது தமிழகத்தில் மொத்தம் 95,122 ஈழ அகதிகள் இருக்கிறார்கள். அவர்களது கல்வி, வேலை வாய்ப்பு,மருத்துவ படிப்பு இவைகள் எல்லாம் கேள்விக் குறியாகிவிடும் என்ற நிலையைப் பற்றிச் சிந்திக்காத எடப்பாடி, சி.ஏ.ஏ சட்டத்தில் ஈழத் தமிழர்கள் இடம் பெறவில்லையே என்று சிந்திக்காமல் எப்படி ஆதரவளித்தார் என்பது பற்றிச் சொல்லத் தயாரா? ஆனால், இரட்டைக் குடியுரிமை பற்றி வாய் கிழியப் பேசுகிறார்.

பிப்ரவரி 17ஆம் தேதி அன்று சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டுவரக் கோரி குடியுரிமை சட்டத்திற்கு எதிராக திமுக தலைவர் தளபதி மற்றும் எதிர்க்கட்சி தலைவர்கள் வலியுறுத்தியபோதும் அதை மறுத்து ஒதுக்கியவர்தான் எடப்பாடி பழனிச்சாமி.

2019 ஆம் ஆண்டு அமித்ஷா கொண்டு வந்த சி.ஏ.ஏ சட்டத்தை ஆதரித்து விட்டு, 2021 சட்டசபைத் தேர்தலில் “சி.ஏ.ஏ சட்டத்தைக் கைவிட ஒன்றிய அரசை அரசியல் அழுத்தம் கொடுப்போம்” எனத் தேர்தல் அறிக்கையில் அ.தி.மு.க சொன்னது. ஆனால் அந்த அழுத்தத்தை இதுவரை கொடுத்தது உண்டா? இது அரசியல் பித்தலாட்டம் இல்லையா?

திமுகவை பொருத்தவரை குடியுரிமை சட்டத்தை நாடாளுமன்ற இரு அவைகளும் எதிர்த்து வந்திருக்கின்றது. உச்ச நீதிமன்றத்தில் எதிர்த்து வழக்கு போட்டுள்ளது. அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி மாவட்ட தலைநகரங்களில் ஊர்வலம், பேரணி ஆர்ப்பாட்டம் (15.12.2019) அன்று நடத்தி எதிர்ப்பு தெரிவித்து இருக்கிறது. அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் வரைவுத் தீர்மானத்தைப் போட்டுக் குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்குக் கடுமையான எதிர்ப்பு காட்டி உள்ளது. (18.12.2019).திமுக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி தலைமையில் இளைஞர் அணி மற்றும் மாணவர் பட்டாளங்கள் ஒன்று திரண்டு தமிழகம் எங்கும் ஆயிரக்கணக்கானோர் போராட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்டம், போராட்டம் பேரணி என்று நடத்திக் குடியுரிமைச் சட்டத்திற்கு எதிர்ப்பு காட்டப்பட்டது. சென்னை சைதாபேட்டையில் சிறுபான்மை மற்றும் ஈழத் தமிழர்களுக்கு எதிரான குடியுரிமைச் சட்டத்தையே கிழித்தெறிந்தார் உதயநிதி ஸ்டாலின். (13.12.2019)

2020ஆம் ஆண்டு பிப்ரவரி 9ஆம் நாள் மோடி அரசின் குடியுரிமைச் சட்டத்தைத் திரும்பப் பெறக் கூறி 2 கோடி பேருக்கு மேல் கையொப்பம் வாங்கி தி.மு.க சார்பில் இந்திய குடியரசுத் தலைவராக இருந்த இராம்நாத் கோவிந்த் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

பொய்யான வாக்குறுதிகள் பல கொடுத்து ஆட்சிக்கு வந்த பாஜக அரசு, பொருளாதார வீழ்ச்சி, தற்கொலைகள் அதிகரிப்பு, அதானி அம்பானி போன்ற பெரும் முதலாளிகள் வளர்ச்சிக்கு உறுதுணை; புதிய வேலைவாய்ப்புகள் இல்லாமை, விலைவாசி உயர்வு, வேளாண்மை உழவர்கள் பாதுகாப்பின்மை, கல்வி உரிமைப் பறிப்பு, சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் மற்றும் ஆலைகள் மூடல் என்பன போன்ற பின்னடைவுகளை மறைத்து விட்டு, திசை திருப்புவதற்காகத் தான் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க அரசு குடியுரிமைத் திருத்தச் சட்டம் 2019 (சி.ஏ.ஏ), தேசிய மக்கள் தொகைப் பதிவேடு (என்.பி.ஆர்), தேசிய குடிமக்கள் பதிவேடு, (என்.ஆர்.சி) ஆகிய மூன்றையும் அன்றைக்குக் கொண்டு வந்தது. தேசிய மக்கள் தொகை பதிவேடு (NPR) என்பது தேசிய குடியுரிமை பதிவேடுக்கு (NCR) வழி வகுக்கும் செயலாகும்.

இப்படி சிறுபான்மை மக்கள் நலன்களை புறக்கணித்தும் மாநில உரிமைகளை இழந்தும், முத்தலாக் சட்டம், காஷ்மீர் சிறப்புரிமை பறிப்பு போன்றவற்றிற்கு ஆதரவு தெரிவித்து வாக்களித்த எடப்பாடி குடியுரிமை சட்டத்தைத்திற்கும் வாக்களித்தார். மாநில உரிமைகளை இழந்தும் மோடியிடம் கொத்தடிமை வேலை செய்தவர்கள் இரட்டை வேடம் போட்டு வருவது சாத்தான்கள் வேதம் ஓதுவது போல் உள்ளது!





முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் வகையில் சிவகங்கை மாவட்டம், இளையான்குடி நகர கூட்டுறவு வங்கியின் மூலம் பொதுக் காலக் கடன் திட்டத்தின்கீழ் 6 பயனாளிகளுக்கு ரூ.5.70 இலட்சம் மற்றும் பெண்களுக்கான புதிய பொற்காலக் கடன் திட்டத்தின்கீழ் 10 பயனாளிகளுக்கு ரூ.10.00 இலட்சம் மொத்தம் 16 பயனாளிகளுக்கு ரூ.15.70 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகள், 5 பயனாளிகளுக்கு மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் மற்றும் தேய்ப்பு பெட்டிகளும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தலைவர் காஜாமுகைதீன் (எ) துறைமுகம் காஜா ஆகியோர் வழங்கினர்.



நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (08.02.2024) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன், சுவர் இடிந்து விழுந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நலவாரியத்தின் மூலம் தலா ரூ.5 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கி, ஆறுதல் கூறினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், மாவட்டக் கழகச் செயலாளர் – முன்னாள் அரசு கொறடா பா.மு.முபாரக் உட்பட பலர் உள்ளனர்.

### வாணியம்பாடியில் ரெயில்வே மேம்பாலம் – தொகுதியில் 3 மேம்பாலங்கள் தேவை!

# வேலூர் விமான நிலையத்துக்கு விரைந்து அனுமதி வழங்குவீர்!

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் வலியுறுத்தல்!



புதுடெல்லி, பிப். 10 - வேலூர் விமான நிலையத்திற்கு விரைந்து அனுமதி வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் மக்களவையில் பேசுகையில் வலியுறுத்தினார்.

அவர் பேசியதாவது:-

இந்த மக்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து இந்த அவையில் மீண்டும் மீண்டும் நான் வைக்கும் ஒரே கோரிக்கை எனது வேலூர் மக்களவைத்தொகுதிக்குட்பட்ட வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதியில் எல்.சி. 81 எனப்படும் ரயில்வே மேம்பாலம் நீண்ட நாள் கோரிக்கை. மக்கள் ரயில் பாதைக்கு இருபுறமும் கடந்து சென்று வந்து கொண்டுள்ளனர்.

நாளொன்றுக்கு 120 முதல் 140 வரை ரயில்கள் இந்த வழித்தடத்தில் கடந்து செல்கின்றன. ஆனாலும் மக்கள் நீண்ட காத்திருப்புக்கு பிறகு இருபுறமும் கடந்து சென்று வருகின்றனர். இதற்கு முன்பு இருந்த ஆட்சியில் இந்த கோரிக்கை பாராமுகமாகவே இருந்தது. துட்சமாக நினைத்தனர்.

நான் மக்களவை உறுப்பினரான பிறகு இதற்காக எனது கூக்குரலை எழுப்பிக் கொண்டுதான் இருக்கிறேன். எனவே எல்.சி. 81 மேம்பாலப் பணிகளை ஒன்றிய அரசு தொடங்கி விரைந்து முடிக்க வேண்டும் என்பது எனது முக்கிய கோரிக்கையாகும்.

இரண்டாவதாக தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் திட்டமான சென்னை - பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் பெருமுகை, கந்தனேரி, வெட்டுவானம் ஆகிய இடங்களில் மூன்று முக்கிய மேம்பாலங்கள் கட்டப்பட வேண்டும். இதற்கு தேவையான நிதி ஒதுக்கப்பட்டு டெண்டர் ஒப்பந்த புள்ளிகளும் பெறப்பட்டு டெண்டரும் முடிவாகிய பின்னரும் பணிகள் தொடங்கப்படாமல் இருக்கிறது. அதற்கு என்ன காரணம்.? இந்த மூன்று முக்கிய பணிகளையும் விரைந்து முடிக்குமாறு மீண்டும் ஒருமுறை இந்த அவையில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவதாக வேலூரில் கடந்த பல ஆண்டுகளாக வேலூர் விமான நிலையம் அமைக்கும் பணியானது ஏறக்குறைய முழுவதும் நிறைவேற்றப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநில அரசும் தேவையான நிலத்தை ஆர்ஜிதப்படுத்தி விமான போக்குவரத்துத் துறையிடம் வழங்கி விட்டது. அனைத்து தொழில் கருவிகள், உபகரணங்கள் நிறுவப்பட்டு விட்டது. ஆனால் இன்று வரை வேலூர் விமான நிலையப்பணிகள் முடிக்கப்படாமல் விமான நிலையம் பயன்பாட்டுக்கு வரவில்லை.

ஆகையால் அவைத் தலைவர் வாயிலாக, எனது வேலூர் நாடாளுமன்றத் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான வாணியம்பாடியில் எல்சி-81ல் மேம்பாலம் அமைத்திடவும், சென்னை-பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் சிறுமுகை, கந்தனேரி, வெட்டுவானம் ஆகிய இடங்களில் மூன்று முக்கிய பாலங்கள் அமைத்திடவும் வேலூர் விமான நிலையம் விரைந்து அனுமதி வழக்குமாறு மீண்டும் வலியுறுத்திக் கோரிக்கை வைக்கிறேன்.

இவ்வாறு அவர் வலியுறுத்தினார்.

### நாகை – மயிலாடுதுறை மாவட்டங்களில்

# உவர்நீர் மீன் வளர்ப்புத் திட்டத்திற்கு நிதி அளிக்கப்பட்டுள்ளதா?

## மக்களவையில் செ.இராமலிங்கம் கேள்வி!



புதுடெல்லி, பிப். 10- நாகை - மயிலாடுதுறை மாவட்டங்களில் உவர்நீர் மீன் வளர்ப்புத் திட்டத்திற்கு நிதி அளிக்கப்பட்டுள்ளதா? என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

மக்களவையில் மீன் வளம், கால்நடை வளர்ப்பு மற்றும் பால்வளத் துறையமைச்சருக்கு மயிலாடுதுறை மக்களவைத் தொகுதி உறுப்பினர் எஸ்.இராமலிங்கம் பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா (PMMSY) திட்டத்தின் கீழ், நிதி ஒதுக்கீடு பற்றி எழுப்பிய வினா வருமாறு: -

(அ) பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா (PMMSY) திட்டத்தின் கீழ், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள மீன்/இறால் விவசாயிகளுக்கு, தேவை அடிப்படையிலான உவர் நீர் குஞ்சு பொரிப்பகங்களை நிறுவுதல் மற்றும் உவர்நீர் மீன் வளர்ப்பு/உப்புநீர்/காரத்தன்மை நீருக்கான புதிய குளங்கள் கட்டுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஒன்றிய அமைச்சகம் நிதி உதவி அளித்துள்ளதா? அப்படியானால், கடந்த ஐந்து ஆண்டுகளில் மற்றும் நடப்பு ஆண்டில் அதன் விவரங்கள் மற்றும் இல்லையென்றால், அதற்கான காரணங்கள்;

(ஆ) பால்வள மேம்பாட்டுக்கான தேசியத் திட்டம், ராஷ்ட்ரிய கோகுல் மிஷன், பால் பதப்படுத்துதல் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி, பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா மற்றும் மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி ஆகியவற்றின் கீழ் தமிழ்நாடு மாநிலத்திலிருந்து பெறப்பட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை மற்றும் விவரங்கள்;

(இ) அரசாங்கத்திடம் இருந்து முதன்மை ஒப்புதல் பெற்ற முன்மொழிவுகளின் எண்ணிக்கை மற்றும் அதன் அடுத்தடுத்த முன்னேற்றங்கள் என்ன?

இதற்கு (மீன்வளத்துறை, கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர்) ஸ்ரீ பர்ஷோத்தம் ருபாலா, 06-02-24 அன்று கீழ்க்கண்ட பதிலை அளித்துள்ளார்.

அது வருமாறு:-

(அ) இந்திய அரசின் மீன் வளத் துறையானது, "பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா (PMMSY) என்ற முதன்மைத் திட்டத்தை, இதுவரை இல்லாத வகையில் 2020-21 நிதி யாண்டு முதல் 5 ஆண்டுகளுக்கு அனைத்து மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் (UTs)ரூ.2005 கோடி முதலீட்டில் செயல்படுத்தி வருகிறது. PMMSY இன் கீழ், தமிழ்நாடு மாநில அரசிடமிருந்து பெறப்பட்ட திட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில், இந்திய அரசின் மீன்வளத் துறை, 2020-21 முதல் இன்று வரை மொத்தம் ரூ.934.23 கோடி செலவில் மத்தியப் பங்கான ரூ.376.91 கோடியுடன் நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இதில் தேவை அடிப்படையிலான புதிய ஓட்டுடலி மீன் (Shell fish) மற்றும் துடுப்பு உவர் மீன்(Finfish) குஞ்சு பொரிப்பகங்கள், உவர் நீர் மீன் வளர்ப்புக்காக புதிய குளங்கள் அமைத்தல், உவர் நீர் மீன் வளர்ப்பிற்கான உள்ளீடுகள், உவர் நீர்/உப்பு/காரப் பகுதிகளுக்கு உள்ளீடுகள் உட்பட உயிர்க் கூழ்மம் (பயோஃப்ளோக்) குளங்கள் அமைத்தல் போன்ற செயல்பாடுகளும் அடங்கும். தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளபடி மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் தேவை அடிப்படையிலான உவர் நீர் குஞ்சு பொரிப்பகங்களை நிறுவுதல் மற்றும் உவர் நீர் மீன் வளர்ப்பு! உவர்நீர்/ காரத் தன்மைக்கான புதிய குளங்கள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் விவரங்கள் இணைப்பு இல் கொடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) மற்றும் (இ): இந்திய அரசாங்கத்தின் கால்நடை பராமரிப்பு மற்றும் பால் வளத் துறை (DAHD), உள்நாட்டுப் பசு இனங்களின் மேம்பாடு மற்றும் பாதுகாப்பு, மாடுகளின் எண்ணிக்கையை மரபணு ரீதியாக மேம்படுத்துதல் மற்றும் பாலை மேம்படுத்துதல் ஆகியவற்றை மையமாகக் கொண்டு 2014 முதல் ராஷ்ட்ரிய கோகுல் மிஷனை செயல்படுத்தி வருகிறது. மாடுகளின் உற்பத்தி மற்றும் பால் உற்பத்தித்திறன் அதன் மூலம் தமிழ்நாடு உட்பட நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் உள்ள விவசாயிகளுக்கு பால் உற்பத்தியை பெருக்கி அதிக லாபம் ஈட்ட வழி வகுக்கிறது. ராஷ்ட்ரிய கோகுல் மிஷனின் கீழ் மாநிலத்திலிருந்து DAHD ஆல் முன்மொழிவு பெறப்பட்ட மொத்தம் ரூ.12992.29 லட்சம் செலவில் 12 திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்து அரசுக்கு தகவல் அனுப்பப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் விவரங்கள் இணைப்புII இல் கொடுக்கப்பட்டுள்ளன.

DAHD ஆல் செயல்படுத்தப்படும் "பால்வள மேம்பாட்டுக்கான தேசிய திட்டம் (NPDD)" திட்டத்தின் கீழ், 9 திட்டங்கள் தமிழகத்திற்கு பெறப்பட்டு, மொத்த திட்ட மதிப்பான ரூ.25922.50 லட்சத்தில் மத்திய அரசாங்கத்தின் ரூ.18210.30 லட்சம் பங்குடன் இதுவரை, ரூ. தமிழகத்திற்கு 13642.395 லட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது, அதில் ரூ.12024.193 லட்சம் பயன்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் விவரங்கள் இணைப்புIII இல் கொடுக்கப்பட்டுள்ளன. DAHD ஆல் செயல்படுத்தப்பட்ட "பால் பதப்படுத்துதல் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி" திட்டத்தின் கீழ், 30.11.2023 வரை, மொத்த திட்டச் செலவு ரூ. 285.82 கோடியில் (கடன் கூறு ரூ. 228.65 கோடி) உள்பட, 4 திட்டங்கள் தமிழ்நாட்டிற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அவர் பதிலளித்தார்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மகளிர் அணி சார்பில்

# 'திராவிட மாடல்' ஆட்சியின் நலத்திட்ட விளக்க 100 நாள் வாகனப் பிரச்சாரம்!

## மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ.மகேஷ் துவக்கி வைத்தார்!


நாகர்கோவில், பிப். 10 - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மகளிர் அணி சார்பில் ஒலிப்பதிவின் மூலம் திராவிட மாடல் ஆட்சியின் நலத்திட்ட விளக்க 100நாள் வாகன பிரச்சாரத்தை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் - நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மகளிர் அணி சார்பில் ஒலிப்பதிவின் மூலம் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர், மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் நலத்திட்ட விளக்க 100 நாள் வாகன பிரச்சாரம் 07.02.2024, புதன்கிழமை அன்று மாலை 5.00 மணிக்கு தோவாளை வடக்கு ஒன்றியம், தடிக்காரன்கோணம் பகுதியில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திருமதி ஜெனஸ் மைக்கேல் தலைமையில், மாநில மகளிர் அணி செயலாளர் திருமதி. ஹெலன் டேவிட்சன், முன்னிலையில், கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

நிகழ்வில் மாவட்டத் துணை செயலாளர்கள் திருமதி. கரோலின் ஆலிவர் தாஸ், பூதலிங்கம்பிள்ளை, தோவாளை வடக்கு ஒன்றியச்செயலாளர் பிராங்கிளின், துணை மேயர் திருமதி. மேரி பிரின்சி லதா, மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் திருமதி. லதா கலைவாணன், பூதப்பாண்டி பேரூர் செயலாளர் ஆலிவர் தாஸ், அழகியபாண்டியபுரம் பேரூராட்சி தலைவர் திருமதி. ஜெயஷீலா கேட்சன், நாகர்கோவில் மாநகர மகளிர் அணி அமைப்பாளர் திருமதி. அம்மு ஆன்றோ, மகளிர் அணி நிர்வாகிகள், பொதுமக்கள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ம.கி. அம்பிகாபதி**
**பிப்ரவரி 10 (2004)**



வடக்கு எல்லை போராட்டத்தில் கலந்து கொண்ட தமிழ் மாமுனிவர் மங்கலங்கிழார் மகனான இவர், இளமைக் காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றத் தொடங்கினார்.

முப்பது ஆண்டுகள், அரக்கோணம் நகரக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, நெருக்கடி கால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

"அரக்கோணம் என்றாலே அம்பிகாபதிதான். கழகத்தை ஆலமரமாய் வளர்த்தவர்" என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### தருமபுரி தொகுதியில் உள்ள

# குரும்பர் - லம்பாடி இன மக்களை எஸ்.டி. பிரிவில் சேர்த்திடுவீர்!

## மக்களவையில் டாக்டர் டி.என்.வி.செந்தில்குமார் கோரிக்கை!



புதுடெல்லி, பிப். 10 - சாதிவாரிக் கணக்கெடுப்பு விரைவில் நடத்தப்பட வேண்டும் என்றும், குரும்பர் மற்றும் லம்பாடி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான எஸ்.டி. பிரிவில் சேர்க்க வேண்டும் என்றும், தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் டி.என்.வி.செந்தில்குமார் மக்களவையில் வலியுறுத்தினார்.

2023-ஆம் ஆண்டு பட்டியல் படுத்தப்பட்ட மற்றும் பழங்குடி சாதிகளில் சட்டத் திருத்த மசோதாவை டாக்டர் செந்தில்குமார் ஆதரித்து உரையாற்றினார்.

அவர் பேசியதாவது:-

இந்த மசோதா நீண்டகாலமாக பின்தங்கிய பல சமூகங்களுக்கு ஒரு விடிவு காலமாக இருக்கும். அதேபோல் எனது தருமபுரி தொகுதியிலும் வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன்.

தருமபுரி நாடாளுமன்ற தொகுதியில் பாப்பிரெட்டிப்பட்டி, அரூர், தர்மபுரி, பாலக்கோடு, மேட்டூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. இங்கு குறிப்பாக குரும்பர் மற்றும் லம்பாடி சமூகத்தினர் சமூக பொருளாதார நிலையில் பின்தங்கி உள்ளனர். இவர்கள் மிக நீண்ட காலம் கோரிக்கையான எஸ்டி அந்தஸ்து கோரி வருகிறார்கள். நான் லம்பாடி மற்றும் குரும்பர் சமூகத்தின் பிரதிநிதிகளுடன் தமிழ்நாடு அரசை அணுகி எங்களது முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து அம்மக்களின் கோரிக்கையை முன்வைத்தேன் மற்றும் நமது ஒன்றிய பழங்குடியினர் அமைச்சர் அர்ஜுன் முண்டா அவர்கள் மிகவும் உதவியாக இருந்தார் என்பதை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

குருமா, குருமன், குரும்பா, குரும்ப கவுண்டர், குரும்பன் மற்றும் குரும்பர் ஆகியோரை எஸ்.டி பட்டியலில் குருமன் (எஸ்.டி) என்ற இணைச்சொல்லாக சேர்க்கும் பட்டியலை தமிழ்நாடு அரசு அனுப்பி வைத்துள்ளது. இவையெல்லாம் வெறும் ஒலி மாறுபாடுகளே ஆகும் இதனால் பல இளைஞர்கள் அரசு வேலைவாய்ப்பும், கல்லூரி சேர்க்கையில் இட ஒதுக்கீட்டை இல்லாமல் வாய்ப்பை இழந்து வருகின்றனர்.

இவை அமலுக்கு வரும் பட்சத்தில் குருமா, குருமன், குரும்பா, குரும்ப கவுண்டர், குரும்பன் மற்றும் குரும்பர் சமூக இளைஞர்களுக்கு விடியல் கிடைக்கும். லம்பாடி சமூகத்தைப் பற்றி எடுத்துக் கொண்டோம் என்றால் அவர்கள் அண்டை மாநிலங்களான கர்நாடகா மற்றும் ஆந்திராவில் அட்டவணை பட்டியலில் உள்ளனர். ஆனால் அதே தமிழ்நாட்டிலும் இல்லை.

தமிழ்நாடு அரசு இப்போது ஒரு புதிய எத்னிக் ஆய்வுக்கு சென்றுள்ளது. அந்த ஆய்வு முடிந்தவுடன் நாங்களும் அதை ஒன்றிய அரசுக்கு அனுப்புவோம், அதன் பிறகு துரித நடவடிக்கை எடுக்க வேண்டி கேட்டுக்கொள்கிறோம்.

எனது நாடாளுமன்றத் தொகுதியான தர்மபுரியில் பல்வேறு மலைப் பகுதிகளில் ஏகலைவா மாதிரி உறைவிடப்பள்ளி தொடங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை உங்கள் வாயிலாக ஒன்றிய அரசுக்கு சமர்ப்பிக்கிறேன். இறுதியாக சபாநாயகர் வாயிலாக நான் ஒன்றிய அரசுக்கு சாதிவாரிக் கணக்கெடுப்பு விரைவில் நடத்தப்பட வேண்டும். இதனால் பல்வேறு இனக் குழுக்கள், பின்தங்கியவர்கள் மற்றும் விளிம்புநிலை மக்கள் போன்ற பல்வேறு பிரிவுகளின் அனைத்து பிரதிநிதிகளுக்கும் சமமான வாய்ப்பு வழங்கப்படும். எனவே ஜாதிவாரி கணக்கெடுப்பு ஆரம்பத்தில் துரிதமாக நடத்தப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.



திருச்சியில் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு மாநகராட்சிக்கு உட்பட்ட கிராப்பட்டி முஸ்லிம் தெருவில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூ 31.28 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நவீன பொதுக் கழிப்பிட கட்டடத்தை நேற்று முன்தினம் (08.02.2024) பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார். மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் மரு.இரா.வைத்திநாதன். நகர பொறியாளர் சிவபாதம், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி. கோட்ட தலைவர்கள் விஜயலட்சுமி. கண்ணன். துர்கா தேவி மற்றும் கழக நிர்வாகிகள் காஜாமலை. விஜய். முத்துச்செல்வம். மோகன்தாஸ். கமல். முஸ்தபா, கவிதா. செல்வம். கிராப்பட்டி செல்வம், இளங்கோ, ராம்குமார், கண்ணன், நாகராஜ், ராமதாஸ், மூவேந்திரன், புஷ்பராஜ், பாலசுப்பிரமணியன், கலைச்செல்வி, கவிதா, சுரேஷ், கருத்து கதிரேசன், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (08.02.2024) மும்பையில் நடைபெற்ற “SPORTSTAR ACES-2024” விருது விழாவில் பங்கேற்று, “Best State for Pro motion of Sports” (விளையாட்டை ஊக்குவிப்பதில் சிறந்த மாநிலம்) என்ற பிரிவில் தமிழ்நாடு மாநிலம் தேர்வு செய்யப்பட்டதற்கான விருதை பெற்றுக் கொண்டார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி உடனிருந்தனர்.



சென்னை, தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (8.2.2024) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு – நெடுஞ்சாலைத்துறையில், பணிபுரியும் பணியாளர்களுக்கு “பணி மாற்றம் மற்றும் பதவி உயர்வு” ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வின் போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் திருமதி ந.சாந்தி, நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் கட்டுமானம் & பராமரிப்பு இரா.சந்திரசேகர் மற்றும் இணை இயக்குநர் (நிர்வாகம்) திருமதி ஆர்.விமலா ஆகியோர் கலந்து கொண்டனர்.



உதகை அருகே கட்டட விபத்தில் உயிரிழந்த 6 பெண்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அரசின் சார்பில் தலா ரூபாய் 2 லட்சத்திற்கான காசோலைகளை அமைச்சர் கா.ராமச்சந்திரன் வழங்கினார்.




# உடன்பிறப்பே... 44

**தி.மு.க. என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த இரா.வெற்றிகொண்டான் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

## இரா.வெற்றிகொண்டான் "வான் நடுங்க முழக்கமிட்ட சிங்கம்!"



ஓவியம் : ரவி பேலட்

அந்த உடன்பிறப்பின் இயற்பெயர் கணேசன். தமிழ்ப்பற்றும் கழகப்பற்றும் ஒருசேர சூட்டிக் கொண்ட பெயர் வெற்றிகொண்டான். கழக மேடைகள் சூட்டிய பெயர், அலைகடல். ஆம். 'அலைகடல்' இரா.வெற்றிகொண்டான் பேசுகிறார் எனில், கூட்டம் அலைகடலெனத் திரளும். அத்தனை காதுகளும் அவர் திசைக்குத் திரும்பும். எதுகையும் துள்ளலும் நகைச்சுவையுமாக அவர் திரட்டித் தரும் கருத்து விருந்து, கழகத்தினரைக் களத்துக்குத் தயார்ப்படுத்தும் கரி மருந்து.

### 'என்னை வெற்றிகொண்டான்'

வெற்றிகொண்டான் அவர்களின் பேச்சாற்றலை இந்தத் தலைமுறை இளைஞர்கள் கேட்டு ரசித்து, அந்த உரையில் கிறங்கி இருக்க வாய்ப்பில்லைதான். எனினும், இணையதளங்களில் கிடைக்கும் அவற்றை எப்போது கேட்டாலும், கழக உணர்வை ரத்த நாளங்களில் எரிமலையாக ஏற்றும்.

பேரறிஞர் அண்ணாவின் தென்றல் நடைப் பேச்சாலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கனித்தமிழ் பேச்சாலும் கவரப்பட்டு மேடைப்பேச்சு பழகியவர் வெற்றிகொண்டான். ஆயினும், அண்ணாவும் கலைஞரும் வெற்றிகொண்டான் பேசப் பேசக் கேட்டு ரசிப்பார்கள். கலைஞர் ஒரு வரியில் சொல்வார் **'என்னையே வெற்றி கொண்டான் இந்த வெற்றிகொண்டான்'.**

### காதலும் கழகமும்

வெற்றிகொண்டான் வசித்த ஊர் அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம். பூர்வீகம் புதுக்கோட்டை மாவட்டம் காரையூர். 1929-ஆம் ஆண்டு பிறந்தவர். பெற்றோர் ராமசாமி - சித்தியம்மாள். தந்தையார் தொழில் நிமித்தமாக ஜெயங்கொண்டத்தில் குடியேற, அதன் காரணமாக வெற்றிகொண்டானுக்கும் அது சொந்த ஊராக மாறியது. வெற்றி கொண்டான் அவர்களின் இணையர் ராஜாமணி ஜெயங்கொண்டத்தைச் சேர்ந்தவர் என்பதால், அங்கேயே இல்லறத்தை அமைத்துக் கொண்டனர்.

பள்ளிப்படிப்புக் காலத்திலேயே திராவிட இயக்கப் பற்று காரணமாக, அரசியல் செயல்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். தி.மு. கழகம் தொடங்கப்பட்ட காலங்களில், அதில் தன்னை ஐக்கியமாக்கிக் கொண்டார். தந்தையின் தொழிலைக் கவனித்துக்கொண்டே, கழக மேடைகளில் பேச்சாளராக வலம் வரத் தொடங்கினார்.

### பன்முக அடையாளம்

வெற்றிகொண்டான் அவர்களின் தமிழும், சிலேடையும் கழகப் பிரச்சாரத்தின் தனித்த அடையாளமாக மாறின. தலைமைக் கழகப் பேச்சாளராக, தவிர்க்க முடியாத குரலாக, பேருந்து, லாரி, சைக்கிள் என எதற்கும் யோசிக்காமல், 'கழகம் ஒன்றே, கலைஞர் ஒருவரே' என தமிழ்நாட்டின் பட்டிதொட்டியெங்கும் பயணப்படலானார் இந்த 'அலைகடல்'.

**பேச்சுக்கலை மட்டுமல்ல, சிறந்த கட்டுரையாளர், நாடக ஆசிரியர் எனப் பல முகங்களும் இவருக்கு உண்டு. 'பொழுது விடியும்' என்கிற நாடகத்தை எழுதி, இவரே நடிக்கவும் செய்துள்ளார்.** 'கண்ணியம்' எனும் ஏட்டினை நடத்தி பத்திரிகையாளராகவும் அடையாளம் கொண்டவர்.

கழகம் நடத்திய அத்தனை போராட்டங்களிலும் களப்போராளியாக நின்று, சிறைசென்றவர். நெருக்கடி நிலையின்போது சிறைசென்றவர்கள் பட்டியலில் வெற்றிகொண்டானும் இருந்தார். குறிப்பாக, கழகம் போராட்டம் அறிவிக்கிறது என்றால், அவற்றை முதலில், மக்களிடம் கொண்டு செல்லும் குரலாக அவர் இருந்தார்.

அவர் பேசுவது படித்தவர்கள் மெச்சும் வகையில், பாமரருக்குப் புரியும் வகையில் இருக்கும். பெரியவர்களுக்கும் சிறியவர்களுக்கும் அவர் பேச்சு பிடிக்கும். அப்படி எதிரே இருப்பவர்களின் 'பல்ஸ்' பிடித்து அவர் பேசுவது, மேடைகளை வசமாக்குவோர் கற்றுக்கொள்ள வேண்டிய கலை.

### மேடையும் கைதுகளும்

தனது மேடைப் பேச்சுகளுக்காகப் பல அவதூறு வழக்குகள், கைதுகளைப் பார்த்தவர் வெற்றிகொண்டான். மேடையிலேயே கைதான சம்பவங்களும் உள்ளன. 2001-ஆம் ஆண்டில், கலைஞரின் நள்ளிரவுக் கைதினைக் கண்டித்துக் கூட்டத்தில் பேசிவிட்டு வந்தவரை, நள்ளிரவில் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்ட நிகழ்வுகளும் உள்ளன. அப்படி அவர் சிறை சென்றபோது அவரது வயது எழுபது.

ஒருமுறை அவர் உடல்நலிவுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அறுவை சிகிச்சை முடிந்து, சில நாட்கள் ஓய்வில் இருக்கவேண்டும் என்கிற நிலையில், அவரைக் கைது செய்ய போலீஸ் 'வாரண்ட்' உடன் வருகிறது. கலைஞர் மருத்துவமனைத் தலைவருடன் பேசி, 'இரண்டு நாள் ஓய்வெடுக்க வேண்டும், கைது செய்ய அனுமதிக்க முடியாது எனச் சொல்லுங்கள்' என்கிறார். இரண்டு நாட்களுக்குப் பின் மீண்டும் போலீஸ் வருகிறது. அவரைக் காப்பாற்ற வேண்டும் என நினைத்த தற்போதைய கழகத் தலைவர், மருத்துவமனையின் பின் வாசல் வழியாக, வெற்றி கொண்டானைப் படுக்கையுடனே தூக்கிச் சென்று புதுச்சேரி மருத்துவமனையில் சேர்த்துள்ளார். இப்படியான கொடுமைகளையெல்லாம் தனது நகைச்சுவையால் நிரப்பி, கொள்கைப் பாடம் எடுத்துவிடுவார் வெற்றிகொண்டான்.

**பேச்சுக்கலை மட்டுமல்ல, சிறந்த கட்டுரையாளர், நாடக ஆசிரியர் எனப் பல முகங்களும் இவருக்கு உண்டு. 'பொழுது விடியும்' என்கிற நாடகத்தை எழுதி, இவரே நடிக்கவும் செய்துள்ளார்.**

### இளைஞர் அணிக்குக் குரல்

இளைஞர் அணி தொடங்கப்பட்ட காலத்தில், அதன் செயலாளராக, கழகத்தின் தற்போதைய தலைவரை நியமிக்க வேண்டும் என கலைஞர், பேராசிரியர் மற்றும் கழக முன்னோடிகளிடம் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தியவர் வெற்றிகொண்டான். இதைப் பின்னாட்களில் தலைவர் அவர்களும் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகத்தின் முன்னோடிப் பேச்சாளராக வலம் வந்த வெற்றிகொண்டான், கழகத் தீர்மானக் குழுவின் செயலாளராகவும் இருந்தவர். கழகம் ஆட்சியில் இருந்தால், தனக்கான கோரிக்கையுடன் கலைஞரைச் சந்தித்ததும் இல்லை. கழகம் ஆட்சியில் இல்லையென்றால், கழகத்தினரை முடுக்குவது இவர் வேலை என கலைஞர் சொன்னதும் இல்லை. இரண்டும் இயல்பானவையாகவே நடந்தன.

வெற்றிகொண்டான் அவர்களின் கழகப் பிடிப்பை அறிந்துகொள்ள அவர் பிள்ளைகளுக்குச் சூட்டிய உதயசூரியன், கருணாநிதி ஆகிய பெயர்களும் ஒரு சான்றாக இருக்கும். அவர்களும் கழகப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வது, 'கழகமே குடும்பம், குடும்பமே கழகம்' என வெற்றிகொண்டான் உருவாக்கியதற்கான சான்று.

### விமர்சிக்கப்படுபவரும் ரசிப்பர்

கழகத்தின் இன்றைய தலைவரும் வெற்றிகொண்டான் அவர்களின் ஆற்றலை சிலாகிப்பார். "தாக்கிப்பேசும் பேச்சாளர்கள் இருக்கிறார்கள். விமர்சித்துப் பேசும் பேச்சாளர்கள் இருக்கிறார்கள். ஆனால், தாக்கிப் பேசினாலும் விமர்சித்துப் பேசினாலும், தாக்கப்படுபவர்களும் விமர்சிக்கப்படுபவர்களும் ரசிக்கக்கூடிய அளவுக்கு நகைச்சுவை கலந்து பேசக்கூடிய பேச்சாளர் ஒருவர் உண்டென்றால், அது அண்ணன் வெற்றிகொண்டான் அவர்கள்தான்" என வெற்றிகொண்டான் அவர்களின் இல்ல நிகழ்ச்சி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

வெற்றிகொண்டான் பேச்சினை, மாற்றுக்கட்சியைச் சேர்ந்தவர்களும் ஓரமாக நின்று ரசித்துச் செல்வதும், அடுத்த வாரமே அந்த இடத்தில் மறுப்புக் கூட்டம் போடுவதும் அவர் உச்சத்தில் இருந்த காலத்தில் வாடிக்கையானவை.

### தலை சாய்ந்த சிங்கம்

இப்படி கழகத்தினர் மத்தியிலும், கலைஞரின் இதயத்திலும் நீக்கமற நிறைந்திருந்த இரா.வெற்றிகொண்டான் அவர்கள் வயது மூப்புக் காரணமாக, தனது 81-வது வயதில், 2011-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ஆம் தேதி இயற்கை எய்தினார்.

**"காடு மேடெல்லாம் சுற்றித் திரிந்து
கழகக் குரலை கர்ச்சித்துக் கொண்டிருந்த
சிங்கம் ஒன்று தலை சாய்ந்து விட்டது"**

என அப்போது கவிதாஞ்சலி எழுதி கண்ணீர் வடித்தார் கலைஞர். கழகத்தின் இன்றைய தலைவர் நேரில் சென்று, அந்தத் தியாகச் சுடருக்கு மரியாதை செய்தார்.

கலைஞர் படைத்த காலத்தால் அழியாத அந்தக் கவிதாஞ்சலியில்,

"வார்த்தைச் சித்தனே! வான் நடுங்க முழக்கமிடும் ஆண் சிங்கமே" எனப் போற்றியதுடன்,

**"இருக்கின்றாய் நீ
என்றைக்கும் கழகத்தோடு
அண்ணாவோடு
அவர்தம் தம்பியராம்
எங்களோடு" என முடித்திருந்தார்.**

ஆம், அந்த உடன்பிறப்பின் குரல் என்றென்றைக்கும் உரமூட்டும்!

...துடிக்கும்

## வடக்கு- தெற்கு பிரிப்பது யார்?

எதிர்க்கட்சிகள் இந்தியாவை வடக்கு-தெற்கு என இரண்டாகப் பிரிப்பதாக பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோர் குற்றச்சாட்டைக் கூறி வருகின்றனர். அதே நேரத்தில், கடந்த 5 ஆண்டுகளில் ஜி.எஸ்.டி., நேரடி, மறைமுக வரிகள் என ஒவ்வொரு மாநிலங்களிலிருந்தும் பெறப்பட்ட வரி எவ்வளவு? மாநிலங்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்ட வரிப் பங்கீடு எவ்வளவு? இந்த வரிப் பங்கீட்டு முறையை மாற்றும் பரிசீலனை ஏதும் உள்ளதா என தி.மு.க. மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்கள் தொடர்ச்சியாக, ஒன்றிய அரசிடம் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

ஏனென்றால், கடந்த 5 ஆண்டுகளில் உ.பி.யில் இருந்து வசூலிக்கப்பட்ட மொத்த வரித்தொகை ரூ.3.41 லட்சம் கோடி. ஆனால் திருப்பிக் கொடுக்கப்பட்டதோ ரூ.6.91 லட்சம் கோடி. ஆனால், தமிழ்நாடு, கர்நாடகா உள்ளிட்ட தென் மாநிலங்களிலிருந்து வசூலிக்கப்பட்ட தொகை ரூ.22.26 லட்சம் கோடி. ஒட்டுமொத்த தென் மாநிலங்களும் சேர்ந்து திரும்பப் பெற்ற தொகை மொத்தமாக ரூ.6.42 லட்சம் கோடி.

தமிழ்நாடு செலுத்தும் ஒவ்வொரு ரூபாய்க்கும் 26 காசு மட்டுமே திரும்பியிருக்கிறது. கர்நாடகாவுக்கு 16 காசு, தெலங்கானாவுக்கு 40 காசு, கேரளாவுக்கு 60 காசு திரும்பியிருக்கிறது. ஆனால், உ.பி.க்கோ 2 . 2 ரூபாய் திரும்பியிருக்கிறது. பீகார் மாநிலம் 7 ரூபாய் வரை பெறுகிறது. 'வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது' என ஒன்றிய அரசின் பாகுபாடுகளை அன்றே விமர்சனம் செய்தார் பேரறிஞர் அண்ணா. அது உண்மை என்பதையே வரிப்பங்கீட்டில் பா.ஜ.க. உணர்த்தி வருகிறது. வடக்கு - தெற்கு என்று பிரித்துப் பார்க்கக் கூடாது எனக் கூறிக்கொண்டே பா.ஜ.க. நடத்தும் பாகுபாடு நாடகம் மக்கள் மத்தியில் அம்பலமாகி வருகிறது.

## :ப்ளாஷ்பேக்





ஏழுமலை

### மாநாட்டு மேடையில்!

தி.மு.கழகத்தின் 8-வது மாநில மாநாடு 1996-ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் நான் தொண்டர் படைத் துணைத் தலைவராகப் பணியாற்றி, மாநாடு நிறைவுறும் வரை மேடையிலேயே இருந்தேன். மாநாட்டின் வெற்றிக்காக உழைத்த என் போன்ற கழகத் தொண்டர்களின் உழைப்பை அங்கீகரிக்கும் விதத்தில், தலைவர் கலைஞர் அவர்கள் எங்களுக்கு சால்வை அணிவித்துப் பாராட்டினார். இந்த விழாவில், பேராசிரியர் மற்றும் ஆற்காட்டார் ஆகியோர் உடனிருந்தனர். இந்த மாநாட்டின் வெற்றி சட்டமன்றத் தேர்தல் வெற்றியாகவும் பிரதிபலித்தது.

**-சி.ஏழுமலை, 31-வது வட்ட தி.மு.க. செயலாளர், மேலகல்கண்டார் கோட்டை, திருச்சி.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### நடுவர் மன்றம்!

**1989-இல் 3-வது முறையாக ஆட்சியமைத்த தி.மு.க., அனைத்துக் கட்சிகளையும் கூட்டி காவிரி நடுவர் மன்றம் அமைக்க தீர்மானம் நிறைவேற்றியது. வி.பி.சிங் ஆட்சி அமைந்த பிறகு, இதில் முன்னேற்றம் ஏற்பட்டது. விவசாயிகள் சங்கம் உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தது. அந்த வழக்கில் ஒன்றிய அரசின் கருத்தைக் கேட்டது நீதிமன்றம். கலைஞரின் கருத்தையே பிரதிபலித்தார் வி.பி.சிங். உச்சநீதிமன்ற உத்தரவுப்படி, காவிரி நடுவர் மன்றம் அமைந்தது. இதற்கு முன்பு 1971-லும் தி.மு.க. அரசு இதற்காக தீர்மானம் நிறைவேற்றி இருந்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 384




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.